REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஒக்டோபர் 10 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
1932 - 2022
வரு. 90 இல. 239 | Monday 10, October, 2022 | 20பக்கங்கள் | 40/-

## அமைச்சர் டக்ளஸுக்கு இன்று பிறந்த தினம்

### சர்வதேச இந்துமத பீடம் ஆசி வழங்கல்

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

06




## ஜனாதிபதி ரணிலின் செயற்பாடுகளுக்கு SLPP முழுமையான ஒத்துழைப்பு நல்கும்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசிய கட்சிக்காரரென அன்று விமர்சித்தோம், ஆனால் அவர் இன்று எம்முடன் ஒன்றிணைந்துள்ளதால் நல்ல விதமாக குறிப்பிடுகிறோம். அவர் தற்போது சரியான பாதைக்கு வந்துள்ளாரென எதிர்பார்க்கிறோம், ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு

06

### களுத்துறையில் இடம்பெற்ற மாபெரும் நிகழ்வில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

## சிக்னல் வயர் துண்டிப்பு; உத்தரதேவி தடம்புரள்வு
## அநுராதபுரத்துக்கான சொகுசு ரயில் சேவை ஆரம்ப நிகழ்வில் தாமதம்



### திட்டமிட்ட செயலா என விசாரணை நடத்த அமைச்சர் பந்துல பணிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து அநுராதபுரம் வரை நேற்று முன்தினம் முதல் சேவையை ஆரம்பிக்கவிருந்த சொகுசு ரயில் தாமதமானதற்கான பின்னணியில் சதி முயற்சிகள் இருந்துள்ளதா என ஆராய்வதற்காக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடு செய்யுமாறு அமைச்சர் பந்துல குணவர்தன அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அநுராதபுரத்திற்கு யாத்திரை செல்லும் பக்தர்களின் வசதிகருதி ஆரம்பிக்கப்பட்ட மேற்படி சொகுசு ரயில் தாமதமானதன்

06

## தேர்தல் முறைகளில் பல திருத்தங்கள்;
# உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 4000 மாக குறைப்பு



- தெரிவுக்குழுவில் தீர்வொன்றை முன்வைக்கத்தவறின் சர்வஜன வாக்கெடுப்பு
- செலவுகளை மட்டுப்படுத்த முடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பெரும்பாலானோர் தற்போதுள்ள அரசியல் முறையை நிராகரித்துவரும் நிலையில் அவர்கள் எதிர்பார்க்கும் அரசியல் மாற்றத்தை உருவாக்க வேண்டுமென்றும் அதற்கிணங்க எதிர்வரும் தேர்தலுக்கு முன்பதாக உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8000 லிருந்து 4000 மாக குறைப்பதற்கும் அத்துடன்

06



முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டிலான தேசிய மீலாத் தின நிகழ்வுகள் நேற்று (09) பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் புத்தசாசன மத விவகார கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் உட்பட முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள், முக்கிய பிரமுகர்கள் விழாவுக்கு அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம். படம்: பீ.எம். முக்தார் பேருவளை விசேட நிருபர்



### வவுனியா – ஓமந்தையில் இலங்கைக்கே உரித்தான அரியவகை அரணை இனம்

03

## சாம்பல் மேட்டிலிருந்து ராஜபக்ஷக்கள் மீண்டெழுவர்

### களுத்துறை கூட்டத்தில் எதிரிமான்ன, ஜோன்ஸ்டன் சூளுரை



நெருப்பிலே போட்டாலும் மீண்டெழுந்து பறக்கும் பீனிக்ஸ் பறவைபோல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், ராஜபக்ஷாக்களும் மீண்டெழுவார்களென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களான எதிரிமான்ன மற்றும்

06

## அரச சுற்றுலா வலயமாக மாறும் சீத்தாவக்கபுர 'வக' பிரதேசம்

### அமைச்சர் பந்துல குணவர்தன கவனம் செலுத்தல்

அவிசாவளை சீத்தாவக்கபுரவின் "வக" பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு அரச சுற்றுலா வலயமாக மாற்றுவதற்கு அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கவனம் செலுத்தியுள்ளார்.

06



## ஈழத்தமிழர் விடயத்தில் கமல்ஹாசன் அக்கறை;
## ஆபத்தான தருணங்களில் இலங்கைக்கு உதவும் இந்தியா

இலங்கைக்கு ஆபத்தான தருணங்களில் உதவுவதற்கு இந்தியாவை விட நல்ல நண்பன் கிடையாதென நடிகர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மையத்தின் தமிழ் நாடு மாநில செயலாளர் சட்டத்தரணி

06




மக்கள் நீதிமைய சிறிதர் யாழில் பெருமிதம்

## தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக ரூ.15,000

### பெருந்தோட்ட நிறுவன சம்மேளனம் இணக்கம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 15,000 ரூபா வழங்கப்படுமென பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணம் வழங்குவதில் எவ்வித பிரச்சினையும் இல்லையெனவும் தீபாவளி முற்பணம் வழங்குவதற்கு தாம் அனுமதித்துள்ளதாகவும் பெருந்தோட்ட நிறுவனங்களின்சம்மேளனஊடகப்பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

06

## IMF உடனான அடுத்த சுற்று பேச்சு அடுத்தவாரம்

### மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்துடனான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளை எதிர்வரும் வாரம் முன்னெடுப்பதற்கு இலங்கை திட்டமிட்டுள்ளது.

அதன்படி நிதி இராஜாங்க அமைச்சரும், திறைசேரியின் செயலாளரும் மத்திய வங்கி அதிகாரிகளும் அடுத்த வாரம் சர்வதேச நாணய

06

## உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ்;
## எதிர்வரும் 10 நாட்களுக்குள் 12,500 மெ.தொன் உரம் வரும்

### கிடைத்ததும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பு



உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கொள்வனவு செய்யப்படுகின்ற 12,500 மெற்றிக்தொன் உரம், எதிர்வரும் 10 நாட்களுக்கு பின்னர் நாட்டை வந்தடையுமென விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இந்திய கடன் திட்டத்தின் கீழ்

06

## நாட்டில் சிறுபான்மையினர் என்று எவருமேகிடையாது

### அனைவரும் சக தேசிய இனத்தவரே – சஜித்

இந்நாட்டில் சிறுபான்மையினர் என யாரும் இல்லை எனவும், சக தேசிய இனத்தவர்களே உள்ளனர் என்பதே தனதும் ஐக்கிய மக்கள் சக்தியினதும் நிலைப்பாடு என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் எவருக்கும்

06





### உலக வங்கியின் மாநாட்டில் பங்கேற்க நிதி இராஜாங்க அமைச்சரின் தலைமையில் விசேட குழு வொஷிங்டன் பயணம்

03



### சிறிய ரக மீன்களின் விலைகள் குறைந்தது

பேலியகொட வர்த்தகர் சங்கம் தெரிவிப்பு

03



### எரிக் சோல்ஹெய்ம் விரைவில் இலங்கைக்கான விஜயம்

03

## பயங்கரவாத தடுப்புப் பிரிவு ஒன்று அவசியம்;
## இலங்கை கடற்பரப்பு ஊடாக தாக்குதல் நடத்த வாய்ப்பு

### சென்னை உயர் நீதிமன்றில் பொதுநல வழக்குத் தாக்கல்

இலங்கையின் கடற்பரப்பினூடாக இடம்பெறக் கூடிய பயங்கரவாத சாத்தியக் கூறுகளை சமாளிப்பதற்கு பயங்கரவாத தடுப்பு பிரிவொன்றை அமைக்குமாறு

06



## முக்கிய போதைப் பொருள் முகவர்கள் மடக்கிப்பிடிப்பு

### கல்முனையில் STF அதிரடி நடவடிக்கை

ஹெரோயின் போதைப்பொருளை கடத்திச் சென்ற 03 சந்தேக நபர்களை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். அம்பாறை கல்முனை விசேட அதிரடிப் படை முகாமுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வெள்ளிக்கிழமை (07) அதிகாலை சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாறை கல்முனை பிரதான வீதி மல்வத்தை பிள்ளையார் கோவில் அருகில் வைத்து சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதான

06

## வழிபாட்டுத்தலங்களுக்கு மின் கட்டணத்தில் நிவாரணம்

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானம்

அதிகரித்துள்ள மின்சார கட்டணத்துக்கு நிவாரணம் வழங்கும் வகையில் மத வழிபாட்டுத் தலங்களை புனித நிறுவனங்களுக்கான குழுவிலிருந்து நீக்கி பொதுப் பணியின் கீழ் கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

06



## ரஷ்ய விமான சேவை மீண்டும் ஆரம்பமானது

### வாரத்துக்கு இரு சேவைகள் இடம்பெறும்

ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் விமான சேவை இலங்கைக்கான தமது சேவையை மீண்டும் நேற்று முதல் ஆரம்பித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். வாரத்துக்கு இரண்டு விமான சேவைகளை

06



90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்



'ஒன்றிணைந்து எழுவோம் களுத்துறையில் ஆரம்பிப்போம்' என்ற தொனிப்பொருளில் பொதுஜன முன்னணியின் முதல் கூட்டம் களுத்துறையில் நேற்று முன்தினம் பொதுஜன முன்னணித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன,இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வா,பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ,ரோஹித்த அபேகுணவர்தன,பவித்திரா வன்னியாராச்சி,பொதுஜன முன்னணி பொதுச் செயலாளர் சாகர காரியவசம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படங்கள் விமால் கருணாரத்தின

# பதியப்படாத பள்ளிவாசல்கள், மத்ரஸாக்களை பதிவு செய்வதற்கான செயற்திட்டமொன்று முன்னெடுக்கப்படும்

## சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்

(பேருவளை நிருபர்)

இலங்கையில் ஆயிரம் வருடங்களுக்கு மேலான வரலாற்றை உடைய சமூகமாக முஸ்லிம்கள் வாழ்ந்துவருகின்றனர். அன்றைய காலகட்டத்திலிருந்து இன்று வரையும் இலங்கையின் அரசியல், பொருளாதாரத் துறைகளின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அர்ப்பணிப்புடன் அவர்கள் செயற்பட்டுவருவதாக சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

2022ஆம் வருடத்திற்கான தேசிய மீலாது நபி விழா ஜாமிஆ நளீமியா கலாபீட மண்டபத்தில் புத்தசாசன கலாசார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தலைமையில் நேற்று (09.10.2022) நடைபெற்றது. அதில் அரச சார்பில் பிரதம உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் நஸீர் அகமட் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,



எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான அரசு இந்நாட்டில் முஸ்லிம் சமூகம் பிரச்சினைகளின்றி வாழ்வதற்கான பொது வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்து வருகிறது. அதன்மூலம் இதுவரையில் பதியப்படாத பள்ளிவாசல்கள், மத்ரஸாக்கள் உள்ளிட்ட முஸ்லிம் நிறுவனங்கள் அனைத்தையும் பதிவு செய்வதற்கான செயற்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. முஸ்லிம்கள் இந்நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார, பாதுகாப்பு ஆகிய அனைத்து துறைகளிலும் அர்ப்பணிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். இன்று நாடு மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கின்றது. பெரும்பாலான மக்கள் மூன்று வேளை உணவுக்காக திண்டாடும் நிலை காணப்படுகின்றது.

எனவே ரசூல்(சஸல்) எமக்கு காட்டி தந்த கருணை,அன்பு என்பவற்றால் நாம் அனைவரையும் அரவணைத்துச் செல்வோம்.

இன்று எமது பள்ளிவாசல்கள், மத்ரஸாக்கள், அஹதியாக்கள் என்பவற்றை ஒரு பொதுவான வேலைத்திட்டத்தின் கீழ் கொண்டு வந்து செயலாற்றச் செய்யும் நடவடிக்கையொன்றை மேற்கொண்டு வருகிறோம். இதன்மூலம் எதிர்காலத்தில் இந்நாட்டில் எமது சமூகம் சிக்கலின்றி வாழ ஒரு வழி பிறக்கும். இதற்காகவே நாம் செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் என அவர் தெரிவித்தார்.



இந்தியாவுக்கான இலங்கை துணை தூதுவர் டாக்டர் வெங்கடேஸ்வரன் துரைசாமியின் அழைப்பின் பேரில். நுககொல்லே சந்திரரத்ன தேரர், சென்னை மகாபோதி நிலையத்தின் பிரதமகுருவானவர், தென்னிந்தியாவுக்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டி.வெங்கடேஸ்வரன் ஆகியோர் அண்மையில் சென்னையிலுள்ள மகாபோதி மையத்தை மீண்டும் திறக்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சரும் இலங்கை தேசிய விளையாட்டு கவுன்சிலின் தலைவருமான அர்ஜுன ரணதுங்க கலந்து கொண்டார். கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக சுமார் மூன்று ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த மகாபோதி மையம், பழைய சங்கவாசம் மற்றும் புத்த மந்திரயா, தற்போது இலங்கை யாத்ரீகர்களின் வசதிக்காகவும் சேவைகளுக்காகவும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. சாஞ்சி, லும்பினி மற்றும் தென்னிந்தியாவைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய மகாசங்கத்தினர்கள், பௌத்த பக்தர்கள் மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள இலங்கை சமூகத்தினர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



பெருமானாரின் பிறந்த தின மீலாது நபி விசேட சமய நிகழ்வு கொழும்பு 12, மெசஞ்சர்வீதி உம்மு ஸாவியா பள்ளிவாசலில் நேற்று நடைபெற்றது. பள்ளிவாசல் தலைவர் மக்கி ஹாசிம் மற்றும் இலங்கைக்கான பலஸ்தீன முன்னாள் தூதுவரும் உம்மு ஸாவியா பள்ளி சமய விவகார உறுப்பினருமான பௌசான் அன்வர் ஆகியோர் ஏற்பாட்டில் பள்ளிவாசல் பிரதம இமாம் கலீபத்துஸ் சாதுலி மௌலவி அல்ஹாஜ் அஹமட் சூபி தலைமையில் நடைபெற்றது.இதன்போது பிடிக்கப்பட்ட படம்.

(படம்: கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)



சிறந்த அதிபர் மற்றும் ஆசிரியர்களை கௌரவிக்கும் " குரு பிரதீபா பிரபா " விருது வழங்கும் நிகழ்வு கடந்த 6ஆம் திகதி கல்வியமைச்சில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமத்திய மாகாணத்தில் தமிழ்மொழி மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு அதிபரான கஹட்டகஸ்திஹிலிய முஸ்லிம் மகா வித்தியாலயம் அதிபர் எஸ்.ஏ.எம்.சஹாப்தீன் சிறந்த அதிபருக்கான விருதினை பெற்றுக் கொண்ட போது எடுக்கப்பட்ட படம்.

(படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

# பழைய மாணவர் சங்க நிர்வாகக்குழு தெரிவு

இறக்குவானை தினகரன் நிருபர்

இ/பலா.கனகநாயகம் தமிழ் மத்திய கல்லூரியின் புதிய உத்தியோகபூர்வமான பழைய மாணவர் சங்கம் நேற்றுமுன்தினம் 2022,10,08 சனிக்கிழமை 11.00 மணிக்கு ஒன்றுகூடி, புதிய நிர்வாக குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதில் ஆலோசகர் எ.குகநேசன், ஆர். மில்ரோய், தலைவர் கே.சண்முகவேல், உப தலைவர் எம். கலைமோகன்,செயலாளர் எ.சசிகுமார், இணை செயலாளர் பி. நதீஸ், குமார் ,பொருளாளர் ஆர். சதீஸ்குமார்,உதவி பொருளாளர் டி.குலநேசன்,கணக்கு பரிசோதகர் எஸ். செல்வகுமார்,ஊடக இணைப்பு எஸ். சிவகுமார், பிரகாஸ் செயற்பாட்டுக் குழு விளையாட்டு பி. பிரதீப், டி. இளைய ராஜா, பி. திவ்யா,கலைநிகழ்வு வி. சண்முகநாதன், என்.தயாபரன், கல்வி எம். குகநேசன், செல்வன். ஜி.பிரசாந், எம். நதியா, லெ.ஸ்டேலா, செல்வன். சி.சம்பத்,சமூக சேவை டி.குலநேசன், ஆர். தர்மராஜ் செல்வன். ஆர். ரஞ்சனாபிரதீபன் போன்றோர் நியமிக்கப்பட்டனர்.

இனிவரும் காலங்களில் கனகநாயகம் தமிழ் மத்திய கல்லூரியின் செயற்பாடுகளில் பாடசாலையில் ஓராண்டுக்கு மேல் கல்விகற்ற சகல மாணவர்களும் பழைய மாணவர்களாக கருதப்படுவதோடு அவர்கள் அனைவரும் பழைய மாணவர் சங்கத்தில் இணைந்து அவர்களது பங்களிப்பினை தந்து உதவ வேண்டுமென பாடசாலை நிர்வாகம் எதிர்பார்க்கின்றது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
2022 ஒக்டோபர் 10 திங்கட்கிழமை

தொழுகை நேரம்
09 முதல் 13 வரை
சுபஹ் - 04.42
ளுஹர் - 11.59
அஸர் - 03.16
மஃரிப் - 05.58
இஷா - 07.08

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் புரட்டாசி 23
ராகுகாலம் : காலை : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: பிரதமை



# மீலாதுன் நபி விழா ஜனாதிபதியின் வாழ்த்து

முஹம்மது நபி அவர்களின் போதனைக்கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்வதன் மூலம் ஆன்மீக ரீதியில் மட்டுமன்றி சமூக ரீதியாகவும் வெற்றி பெற முடியுமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவத்துள்ளார்.

மீலாதுன் நபி விழாவின் நிமித்தம் விடுத்துள்ள வாழ்த்து செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

இலங்கை மற்றும் உலக முஸ்லிம்களால் பெரிதும் மதிக்கப்படும் முஹம்மது நபி அவர்களின் பிறந்த தினம் கொண்டாடப்படுகின்றது.

உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்களின் மார்க்கப் போதகராக விளங்கிய அவரது உபதேசங்கள், முன்பை விட இன்றைய சமூகத்தில் நிலவும் சூழ்நிலையைப் போக்க உதவுமென்று நான் நம்புகிறேன்.

உயர்ந்த மனிதப் பண்புகளுடன் பிறந்த அனைவரும் ஒருவரையொருவர் விலகிச்செல்ல முற்படுவதை தவிர்த்து, நபிகளாரின் போதனையைப் பின்பற்றி அனைவரும் புரிந்துணர்வுடன் நடப்பதே அவருக்குச் செய்யும் கௌரவமாகும்.

ஒட்டுமொத்த மனித சமூகத்தைப் போன்று ஏனைய அனைத்தினதும் பாதுகாப்பு, பயன்பாடு, மரியாதை மற்றும் நேர்மை பற்றிய முஹம்மத் நபி அவர்களின் கருத்து உண்மையின் உருவகமாகும்.

அவர்களின் போதனைக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்வதன் மூலம் ஆன்மீக ரீதியில் மட்டுமன்றி சமூக ரீதியாகவும் வெற்றி பெற முடியும்.

அல் அமீன் "நம்பிக்கையாளர்" என்ற புனைபெயர் கொண்ட முஹம்மது நபி அவர்களின் பிறந்த நாள், இலங்கை மற்றும் உலகலாவிய முஸ்லிம்கள் உள்ளிட்ட ஏனையோரினதும் ஆன்மீக, சமூக முன்னேற்றம் மற்றும் அமைதிக்கு வழிவகுக்க வேண்டுமென நான் பிரார்த்திக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

### பதில் பிரதம நீதியரசராக

# புவனெக்க அலுவிஹாரே பதவிப் பிரமாணம்



பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி சட்டத்தரணி புவனெக்க பண்டுகாபய அலுவிஹாரே, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

பதவிப் பிரமாணம் நேற்று (09) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்து கொண்டார்.

### உலக வங்கியின் மாநாட்டில் பங்கேற்க

# நிதி இராஜாங்க அமைச்சரின் தலைமையில் விசேட குழு வொஷிங்டன் பயணம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கையின் சார்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையிலான குழுவொன்று நேற்று அமெரிக்காவின் வொஷிங்டனுக்கு பயணமாகியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாடு இன்று ஆரம்பமாவதுடன் எதிர்வரும் 16ஆம் திகதி வரை மாநாட்டு அமர்வுகள் இடம்பெறவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையில் நிதியமைச்சின் செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீர சிங்கவுடன் வொஷிங்டன் பயணமாகியுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கை பிரதிநிதிகள் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்த திட்டமிட்டுள்ளதாக

06

# எரிக் சோல்ஹெய்ம் விரைவில் இலங்கைக்கான விஜயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்புவதற்கான பங்களிப்பு தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவரான எரிக் சோல்ஹெய்ம் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கான அழைப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவருக்கு விடுத்துள்ளதாகவும் விரைவில் அவர் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்வார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவரும் இராஜதந்திரியுமான எரிக்ஸ் சோல்ஹெய்ம் இலங்கைக்கான வெளிவிவகார ஆலோசகராக கடந்த 2000 ஆம் ஆண்டு அந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார்.

அதனையடுத்து அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தையின் ஏற்பாட்டாளராக அவர் செயல்பட்டுள்ளார்.

அவர் தற்போது ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் வேலைத்திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளராக பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோர்

# 2574.1 மில். அமெ. டொலர்கள் அனுப்பிவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளவர்கள் இலங்கைக்கு அனுப்பும் வெளிநாட்டு நிதியின் அளவு அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோர் கடந்த ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையான காலத்தில் இலங்கைக்கு 2574.1 மில். அமெரிக்கன் டொலர்களை நாட்டுக்கு அனுப்பியுள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தோடு ஒப்பிடுகையில் செப்டெம்பர் மாதத்தில் அதன் அளவு மேலும் அதிகரித்துள்ளதாகவும் அதற்கிணங்க கடந்த ஆகஸ்ட் மாதத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோர் 32 கோடி 54 இலட்சம் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாகவும் மத்திய வங்கி

06

# ஓய்வுபெறும் வயதெல்லை குறைப்பு காரணமாக விசேட மருத்துவர்களுக்கான தட்டுப்பாடு அதிகரிக்கும்

### விசேட மருத்துவர்கள் சங்கம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை 60 ஆக குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதியில் விசேட மருத்துவர்கள் 249 பேர் ஓய்வுபெறவுள்ளதுடன் அதன் காரணமாக விசேட மருத்துவர்களுக்கான தட்டுப்பாடு உக்கிரமடையும் என விசேட மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு பயிற்சியை முடித்துக் கொண்டு எதிர்வரும் வருடத்தில் 299 பேர் நாட்டுக்குத் திரும்புவர் என எதிர்பார்க்கப்பட்டாலும் அதன் மூலம் மேற்படி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யலாம் என்று சிலர் கருத்துக்களை முன்வைத்தாலும் அது அவ்வாறு இடம்பெறாது என விசேட மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் லக்குமார பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேற்படி விசேட மருத்துவர்கள் அனைவரும் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நாட்டுக்கு வருகைதர மாட்டார்களென்றும் அது வருடம் முழுவதும் இடம்பெறும் செயற்பாடு என்றும் நாட்டின் தற்போதைய நிலைக்கு இணங்க அந்த மருத்துவர்கள் அனைவரும் நாடு திரும்புவர் என எதிர்பார்க்க முடியாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.ெ

எவ்வாறெனினும் அந்த மருத்துவர்களில் சிலர் விசேட மருத்துவ பயிற்சியை நிறைவு செய்வதற்காக உள்நாட்டில் சில காலங்கள் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அந்த நிலையில் அவர்கள் நாடு திரும்பியதும் பதில் விசேட மருத்துவர்களாக நியமிக்க முடியாதென்று அவர் தெரிவித்துள்ளார்.

# சிறிய ரக மீன்களின் விலைகள் குறைந்தது

### பேலியகொட வர்த்தகர் சங்கம் தெரிவிப்பு



சிறிய ரக மீன்களின் விலை நேற்று முதல் (09) குறைந்துள்ளதாக பேலியகொட மத்திய மீன் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக சிறிய ரக மீன்களின் விலை அதிகரித்திருந்தன. தற்போது சிறிய ரக மீன்கள் பிடிபடும் அளவு அதிகரித்துள்ளமையே இதற்கான காரணமென சங்கத்தின் தலைவர் ஜயந்த விக்கிரமாராச்சி தெரிவித்தார். இதேவேளை, மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. முன்னதாக ஒரு வாரத்துக்கு போதுமான மண்ணெண்ணெய் ஒரே நேரத்தில் வழங்கப்பட்டாலும், எதிர்காலத்தில் 03 முதல் 04 நாட்களுக்கு எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென அதன் பணிப்பாளர் நாயகம் பிரசன்ன கஹவத்த தெரிவித்தார். மண்ணெண்ணெய் பெறுவதில் உள்ள சிரமங்கள்

06

# உழவு இயந்திரம் குடைசாய்ந்து ஒருவர் பலி

### சம்பூரில் சம்பவம்

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள கொக்கட்டி பகுதியிலுள்ள பண்ட் வீதியை விட்டுவிலகி, உழவு இயந்திரமொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இன்னுமொருவர் காயமடைந்துள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுக் காலை இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக சம்பூர் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் சம்பூர் கடற்கரைச்சேனை பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிறிபால கஜன் (வயது 32) உயிரிழந்துள்ளார்.

உழவு வேலை செய்வதற்காக சாரதியும், உதவியாளரும் உழவு இயந்திரத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது உழவு இயந்திரம் பண்ட் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்ததிலே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் மூதூர் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் காயமடைந்த மற்றையவர் அதே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக சம்பூர் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# திருமண வைபவ நிகழ்வில் மணமகன் பொலிஸாரால் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மொரட்டுவை அங்குலான பிரதேசத்தில் நடைபெற்றுள்ள திருமணம் வைபவத்தில் மணமகனை பொலிஸார் கைது செய்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், இந்தத் திருமண வைபவம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைத்துள்ள தகவலையடுத்து பொலிஸார் குறித்த திருமண மண்டபத்திற்கு சென்று 19 வயதுடைய மணமகனை கைதுசெய்து பின்னர் விடுவித்துள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் மணமகளுக்கு 15 வயது மற்றும் ஆறு மாதமே நிறைவடைந்துள்ளதாகவும் மணமகன் 19 வயதுடையவரென்றும் தெரியவந்துள்ளது.

அதனையடுத்து குறித்த மணமகன் கைது செய்யப்பட்டதுடன் பின்னர் அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குறைந்த வயதுடைய மணமகள் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### ஸ்ரீ.சு.கட்சியினருக்கு மேலும் அமைச்சுப் பதவிகள்;

# தான் அறியவில்லையென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

விரைவில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் பட்டியலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மேலும் சிலர் உள்ளனரா என்பது தொடர்பில் தாம் அறியவில்லையென்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவ்வாறான அமைச்சுப் பதவியெதையும் நான் பொறுப்பேற்கப் போவதில்லையெனினும் முன்னர் சிலர் சென்றுள்ள நிலையில் மேலும் சிலர் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்பார்களா என்பது தொடர்பில் என்னால் எதுவும் கூறமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டிக்கு நேற்றைய தினம் விஜயம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலதா மாளிகையை தரிசித்த பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகிய நாம் சர்வகட்சி அரசாங்கமொன்றிற்கான யோசனைகளையே முன்வைத்தோம். எனினும் அது நடக்கவில்லை. சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைத்தால் சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்கள் மற்றும் நிதிவுதவிகளையும் பெற்கொள்ள முடியும். அத்துடன் கடன்களையும் இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.ெ

எவ்வாறெனினும் சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு ஆளும் கட்சியிலுள்ளோரே விருப்பம்

06



# வவுனியா - ஓமந்தையில் இலங்கைக்கே உரித்தான அரியவகை அரணை இனம்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, ஓமந்தை, அரச வீட்டுத் திட்ட பகுதியில் இலங்கைக்கே உரித்தான அரிய வகை அரணை இனம் ஒன்று அவதானிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தை அரச வீட்டுத் திட்டப் பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒன்றுக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்ற ஒருவர், தாசியா ஹாலியானஸ் என்ற இலங்கைக்கே உரித்தான அரியவகை அரணை இனம் ஒன்றை அவதானித்த நிலையில் அதனை புகைப்படம் எடுத்துள்ளார்.

இலங்கைக்கு மட்டுமே உரித்தான தாசியா ஹாலியானஸ் எனும் உயிரியல் பெயருள்ள இந்த தனித்துவ அரணை இனம் வன்னிக் காடுகளில் இருந்து வந்துள்ள போதும், மிக அரிய வகை உயிரினமாகவே உள்ளது. பெரும்பாலும் மரங்களில் இவ் உயிரினம் வாழ்ந்து வருகின்றது.

06




## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 238.30 | 249.43 |
| கனடியன் டொலர் | 266.50 | 278.62 |
| யூரோ | 355.51 | 370.47 |
| ஜப்பான் யென் | 2.4825 | 2.5854 |
| சிங்கப்பூர் டொலர் | 252.81 | 263.50 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 406.47 | 422.56 |
| சுவிஸ் பிராங்க் | 369.13 | 386.67 |
| அமெரிக்க டொலர் | 359.17 | 369.94 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 962.56 | கட்டார் ரியால் | 99.05 |
| குவைத் டினார் | 1,174.62 | சவூதி ரியால் | 96.47 |
| ஓமான் ரியால் | 942.58 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.79 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 23ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 13

## குறள் தரும் சிந்தனை



எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடையது அரண்

உள்ளிருப்போர்க்குத் தேவையான பொருள் எல்லாம் இருப்பதாய், வெளியே இருந்து அழிக்க முயலும் பகைவரை வெல்ல உதவும் வீரரைப் பெற்றதாய் இருப்பதே அரண்.

# போதைப்பொருளற்ற தேசத்துக்கு மக்கள் ஒத்துழைப்பு அவசியம்

இலங்கை அண்மைக் காலமாக முகம் கொடுக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக போதைப்பொருள் விளங்குகின்றது. ஹெரோயின், ஐஸ், கேரள கஞ்சா எனப் பல்வேறு போதைப்பொருட்கள் காணப்படுகின்றன.

ஆனால் இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இந்நாட்டில் போதைப்பொருட்கள் ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. இன்று நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் நகரம், கிராமம் என்ற வேறுபாடுகள் இன்றி எல்லாப் பிரதேசங்களுக்கும் இப்போதைப்பொருட்கள் பரவிக் காணப்படுகின்றன.

போதைப்பொருட்கள் முற்றிலும் சட்டவிரோதமானவை. அதன் பாவனை, விற்பனை, கடத்தல், வைத்திருத்தல் அனைத்துமே இந்நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்ட சட்ட நடவடிக்கைகளும் இடம்பெற்ற வண்ணமுள்ளன.

இருந்தும் கூட இப்போதைப்பொருட்களை சாதாரணமாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை பரவலாகக் காணப்படுகின்றது. இப்போதைப்பொருட்கள் தொடர்பில் இவ்வாறான ஒரு நிலைமை இற்றைக்கு இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் காணப்படவில்லை.

இப்போது போதைப்பொருட்களின் பாவனையும் விற்பனையும் அதிகரித்துள்ளதோடு, இப்போதைப் பொருட்களுடன் தொடர்பான குற்றச்செயல்களும் அதிகரித்துள்ளன.

அதேநேரம் இப்போதைப்பொருட்களின் பாவனையின் விளைவான உடல் உள ரீதியிலான உபாதைகளுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுகின்றவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இப்பின்னணியில் இப்போதைப்பொருட்களின் பாவனைக்கு உள்ளாகின்றவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவும் இப்பாவனையின் விளைவாக உடல் உள நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கவுமென வருடா வருடம் பெருந்தொகை நிதியும் செலவிடப்பட்டு வருகின்றது. ஆனால் இது முற்றிலும் தவிர்த்துக் கொள்ளக்கூடியதான வீண் விரயமாகும். போதைப்பொருள் பாவனையினால் எதுவித நன்மையுமே கிடைப்பதில்லை. அதன் பாவனையை முற்றாகத் தவிர்த்துக் கொள்ள முடியும். அதன் ஊடாகப் போதைப்பொருட்கள் பாவனையால் ஏற்படும் நோய்களில் இருந்து தவிர்ந்து கொள்ளலாம்.

இதன் ஊடாக இவற்றின் நிமித்தம் செலவிடப்படும் பெருந்தொகையை நிதியை மீதப்படுத்தி வேறு தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இருந்தபோதிலும் எவ்வித நன்மையும் பயக்காததும், கெடுதல்களைத் தேடித்தரக் கூடியதுமான இப்போதைப் பொருட்களை நாலாபுறமும் கடலாக சூழப்பட்டுள்ள நாட்டுக்குள் கடல் மார்க்கமாகப் பெருமளவில் கடத்தி வரக்கூடிய நிலைமை கூட ஏற்பட்டுள்ளது.

ஈரானில் இருந்து 200 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கடல்மார்க்கமாக கொண்டு வரப்பட்டு இந்தியாவின் கேரளா, கொச்சின் கடற்பகுதியில் வைத்து இலங்கையின் கடற்றொழில் படகொன்றுக்குள் மாற்ற முயற்சிக்கப்பட்ட போது போதைப்பொருட் பொதிகளும் படகும் கைப்பற்றப்பட்டிருப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இந்தியக் கடற்படையினரும் அந்நாட்டு போதைப் பொருள் கட்டுப்பாட்டு அதிகாரிகளும் குஜராத் பொலிஸாரும் இக்கடத்தலை முறியடித்து போதைப்பொருள் பொதிகளைப் பறிமுதல் செய்துள்ளனர். சம்பந்தப்பட்ட ஈரானிய பிரஜைகளும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இது பெரிதும் வரவேற்று பாராட்டப்பட வேண்டிய நடவடிக்கையாகும். இக்கடத்தல் நடவடிக்கை முறியடிக்கப்பட்டிருப்பதன் விளைவாக எத்தனையோ பேர் அப்போதைப்பொருட்களின் பாதகமான விளைவான சீரழிவுகளில் இருந்தும் உடல் உள ரீதியிலான பாதிப்புகளில் இருந்தும் பாதுகாக்கப்பட்டுள்ளனர். இது மறுக்க முடியாத உண்மையாகும்.

சட்டவிரோதப் போதைப்பொருட்களை கடத்துவதன் மூலமும் விற்பனை செய்வதன் மூலமும் பொருளாதார ரீதியில் அதிக இலாபம் கிடைக்கப் பெறலாம். ஆனால் அந்த இலாபமானது, எவராவது ஒருவரை அல்லது ஒரு குடும்பத்தினரைப் பாதிப்புகளுக்கும் தீங்குகளுக்கும் உள்ளாக்கியே அடையப் பெறுகிறது என்பதை மறந்து விடலாகாது.

அதனால் இப்போதைப்பொருட்களைப் பாவிப்பவர்களுக்கு உடல் உள ரீதியிலான உபாதைகளையும் அவரது குடும்பத்தினருக்கும் சமூகத்தினருக்கும் கெடுத்தல்களையும், குற்றச்செயல்களையும், நாட்டுக்கு பொருளாதார ரீதியிலான இழப்புக்களையும் ஏற்படுத்தக் கூடிய இப்போதைப்பொருட்களின் பாவனையையும் விற்பனையையும் கடத்தலையும் தவிர்த்து கட்டுப்படுத்தி கொள்வதில் அதிக கவனமும் அக்கறையும் செலுத்தப்பட வேண்டும். இது நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும். அதன் ஊடாக போதைப்பொருட்கள் அற்ற நாட்டை உருவாக்கக் கூடியதாக இருக்கும்.

ஆகவே போதைப்பொருட்கள் ஏற்படுத்துகின்ற பாதிப்புகளையும் கெடுதல்களையும் கருத்தில் கொண்டு தமதும் தம் சமூகத்தினதும் நலன்களையும் முன்னுரிப்படுத்தி செயற்பட வேண்டும். அதனை தம் பொறுப்பாகவும் கடமையாகவும் ஒவ்வொருவரும் கருத வேண்டிய காலமிது. சமூக ஆரோக்கியத்திற்கான இன்றைய அவசரத் தேவையும் அதுவே.

editor.tkn@lakehouse.lk

## நாட்டுக்கும் மக்களுக்கும் பணியாற்றும்

# இலங்கை இராணுவத்தின் 73 ஆண்டு நிறைவு இன்று

தேசத்தின் பாதுகாவலர்களான இலங்கை இராணுவம் அதன் 73 ஆவது ஆண்டு நிறைவுதின விழாவை இன்று (10 ஒக்டோபர் 2022) கொண்டாடுகிறது. அதன் 73 வருட வரலாற்றில், நிறைவேற்றப்பட்ட பணி, நாட்டின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரத்திற்கான அதன் முன்னோடிப் பாத்திரம் குறிப்பிடத்தக்கதாகும்.

சிலோன் இராணுவமாக 1949 ஒக்டோபர் 10 ஆம் திகதி பிரிகேடியர் ஜே. ஆர். சின்க்ளேர் சிபி, டி.எஸ்.ஓ தலைமையில் இது உருவாக்கப்பட்டது. பல ஆண்டுகளில் படிப்படியாக வளர்ச்சியடைந்த இந்த அமைப்பு தியத்தலாவையில் தனது சொந்த இராணுவக் கல்லூரியை நிறுவியதுடன், மேஜர் ஜெனரல் ஏ. எம். முத்துக்குமாரு ஓ.பீ.ஈ. ஈடி 1955 பெப்ரவரி 09 ஆம் திகதி அப்போதைய சிலோன் இராணுவத்தின் முதல் இலங்கை தளபதியாக பொறுப்பேற்றார்.






தற்போது ஒரு தொழில்முறை இராணுவமாக முதிர்ச்சியடைந்துள்ள இலங்கை இராணுவம் இன்றுவரை 23 தளபதிகளால் கட்டளையிடப்பட்டு, தேசிய பாதுகாப்பில் அதன் தரத்தை மேம்படுத்திக் கொண்டுள்ளது.

இன்று, 25 படையணிகள், முதலாம் படைத் தலைமையகம், ஆறு பாதுகாப்புப் படைத் தலைமையகங்கள், பல துணைக்கள அமைப்புகள் மற்றும் பயிற்சிப் பாடசாலைகளை உள்ளடக்கியதாக விரிவடைந்துள்ளதுடன், லெப்டினன்ற் ஜெனரல் விக்கும் லியனகே ஆர்.டபிள்.யூ.பி ஆர்.எஸ்.பீ எம்.டி.யு தற்போது இலங்கை இராணுவத்தின் 24 ஆவது இராணுவத் தளபதியாக கடமையாற்றுகிறார்.

இலங்கை இராணுவம் முப்பது வருட யுத்தத்தின் போது நாட்டிற்காக தங்கள் உயிரைப் பணயம் வைத்து, தியாகம் செய்த பணியால் கிடைக்கப்பெற்ற சுதந்திரத்தைத்தான் இன்று மக்கள் அனுபவிக்கின்றனர்.

இயற்கை அனர்த்தங்கள் மற்றும் பேரழிவுகள் ஏற்படும் போது இயல்புநிலையை மீட்டெடுக்கவும் தேசிய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றிலும் 24 மணிநேரமும் சேவையை வழங்குவதுடன், இராணுவம் எந்நேரத்திலும் தனது அதிகபட்ச பங்களிப்பை வழங்க தயாராக உள்ளது.

அது மாத்திரமன்றி, இலங்கையில் கொவிட் 19 தடுப்பு செயல்திட்டங்களை நோக்கிய இராணுவத்தின் விதிவிலக்கான செயல்பாடுகள் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

73 ஆண்டுகளாக தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களால் தாய்நாட்டை அலங்கரித்து வரும் இராணுவ வீரர்கள் சர்வதேச விளையாட்டு அரங்கில் எம் நாட்டிக்கு கௌரவத்தை பெற்றுக் கொடுத்து உலக வரலாற்றில் இடம்பிடித்துள்ளனர்.

இன்றுவரை 184 இராணுவ வீரர்களும் 88 வீராங்கனைகளும் 28 தேசிய மட்ட அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய மற்றும் சர்வதேச அரங்கில் நாட்டிற்கு சிறந்த விளையாட்டு வீர வீராங்கனைகளை உருவாக்குவதன் மூலம் இராணுவம் தனக்கென பெயரைக் கொண்டுள்ளதுடன் கடந்த வருடங்களில் எமது இராணுவம் இலங்கைக்கு அதிக பதக்கங்களை பெற்றுக் கொடுத்துள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிகுண்டுகளால் சுமார் 1323.99 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 640 கிராமங்களின் சுமார் 1.3 மில்லியன் மக்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருந்தனர். இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவின் தலைமையில் 18 அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் கண்ணிவெடி அகற்ற வேண்டிய பகுதியாக தற்போது 0.83 சதுர கி.மீ.க்கும் குறைவாகவே உள்ளது. ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் பணியில் இலங்கை 1955 இல் இணைந்தது. இதுவரை ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் பணிகளில் 20,200 இராணுவ வீரர்கள் ஹைட்டி, லெபனான், அபேய், தென் சூடான், மத்திய ஆபிரிக்க குடியரசு, மாலி, மேற்கு சஹாரா, புருண்டி, மற்றும் எரித்திரியா ஆகிய நாடுகளில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.



இலங்கை இராணுவப் படையினர் தற்போது ஹைட்டி, லெபனான், தென் சூடான் மற்றும் மாலி ஆகிய நாடுகளில் அமைதிகாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்நடவடிக்கைகளினால் மாத்திரம் இலங்கை இராணுவத்தால் 278 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் அந்நிய செலாவணி இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினன்ற் ஜெனரல் விக்கும் லியனகே இராணுவத்தின் 73 ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு செய்தியில், தன்னலமற்ற கடமையை, வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்துவதில் பொதுமக்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதோடு, நாடு முன்னேற நிதி ஸ்திரத்தன்மை தேவைப்படும் தற்போதைய நிலையில் இருந்து மீள்வதற்கு ஆதரவு அளித்தல் அவசியம். அரசியலமைப்பு மற்றும் ஜனநாயக பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அவசியம். இராணுவத்தின் மரியாதையையும் கௌரவத்தையும் இலங்கை இராணுவத்தின் பெருமைமிக்க அங்கத்தவர்கள் என்ற பெருமையையும் பாதுகாப்பதற்கு ஒழுக்கம் மற்றும் நேர்மையுடன் பணியாற்ற வேண்டுமென்று தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.





இலங்கை இராணுவம் தனது பயணத்தின் போது சவால்கள், வெற்றிகளுக்கு ஏற்ப பலதுறைகளிலும் தனது செயற்பாட்டை விரிவுபடுத்தியுள்ளது. நாட்டின் பாதுகாவலர் என்ற வகையில் எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதிகளிடம் இருந்து நாட்டை விடுவித்துள்ளது.

(இராணுவ ஊடகப் பணிப்பகம்)

## எட்டு மாதங்களாக முடிவின்றி தொடரும் ரஷ்ய- உக்ரைன் யுத்தம்

# வீழ்ச்சியடையாமல் வேகமாக வளரும் இந்திய பொருளாதாரம்!

## உலகின் ஐந்தாவது பொருளாதார வல்லரசாக பாரதம்

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான யுத்தம் முடிவின்றித் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த யுத்தத்தினால் அவ்விரு நாடுகளும் பெரிதும் பாதிக்கப்பட்டது ஒருபுறமிருக்க, உலக நாடுகள் அத்தனையுமே சரிவுநிலைமைக்குச் சென்றுள்ளன.

உலக எரிபொருள் வர்த்தகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள பாதிப்பானது பல்வேறு நாடுகளின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக உலகநாடுகள் பலவற்றில் பொருட்களின் விலைகள் வெகுவாக உயர்ந்துள்ளன. ரஷ்ய_ உக்ரைன் யுத்தத்தின் நேரடி விளைவு இதுவாகும்.

ஆனாலும் இந்திய பொருளாதாரத்தில் ரஷ்ய_ உக்ரைன் யுத்தம் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும் இந்திய பொருளாதாரம் வீழ்ச்சியடையவில்லை. இந்திய பொருளாதாரம் வளர்ச்சி நிலைமையையே காட்டுகின்றது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்தபடியே உள்ளதாக மத்திய நிதித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியா தனது எரிபொருள் தேவைக்காக ரஷ்யாவை நம்புவது குறைந்து வரும் காரணத்தால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்தபடியே உள்ளது.அதாவது ரஷ்ய_ உக்ரைன் யுத்தத்தினால் உருவான சவாலை முறியடித்தபடி இந்தியா தனது பொருளாதாரத்தில் முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

அதேசமயம் இந்தியா தனது பொருளாதார வளர்ச்சியில் பிரிட்டனை பின்னுக்குத் தள்ளிவிட்டு உலகில் 5 ஆவது இடத்திற்கு முன்னேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. உலகின் 5 ஆவது பெரிய பொருளாதார வல்லரசு என்ற அந்தஸ்தை இந்தியா இப்போது பெற்றுள்ளது.

ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக் குறியீடு எனப்படும் ஜி.டி.பியின் அடிப்படையில் 'ப்ளூம்பெர்க்' நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் இந்தியா 5 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது கணிக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்னர் 11 ஆவது இடத்தில் இருந்த இந்தியா தற்போது இந்தப் பட்டியலில் 5 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

சர்வதேச நிதியமும், வருடாந்த அடிப்படையில் டொலர் மதிப்பீட்டு அளவில் எடுத்த பொருளாதார வளர்ச்சிக் கணக்கீட்டில் அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனிக்கு அடுத்ததாக ஆசியாவின் பவர்ஹவுஸ் என்று அறியப்படும் இந்தியா 5 ஆவது பெரிய பொருளாதாரமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.



பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது கடும் சுரண்டலுக்கு உள்ளான இந்தியா, சுதந்திரத்துக்குப் பிறகான 75 ஆண்டுகளில் பொருளாதார நிலையில் அவ்வப்போது ஏற்ற இறக்கங்களைச் சந்தித்து வந்தாலும்கூட, உலகளவில் மிகப்பெரிய அளவிலான பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இப்போது வளர்ந்திருக்கிறது.

வளர்ச்சி வீத இலக்குகளை முன்கூட்டியே எட்ட முடிந்தால், அடுத்த 10 ஆண்டுகளுக்குள்ளேயே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அமெரிக்காவை இந்தியா மிஞ்சிவிடும் என்றும் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதாரமாக வளர்ந்துவிடும் என்றும் சில மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இந்த வளர்ச்சிக்கு இந்தியாவின் மனிதவளம், உற்பத்தித் தொழில் துறை, ஏற்றுமதி, இந்திய ரூபாயின் சர்வதேச மதிப்பு ஆகியவை முக்கிய இயக்குவிசைகளாக இருக்கும்.

இன்றைய நிலையில் இந்தியா 130 கோடி மக்கள்தொகைக்கு 30 கோடி தொன் உணவுதானியங்களை உற்பத்தி செய்து உணவு ஏற்றுமதி செய்யும் நிலைக்கு உயர்ந்திருக்கிறது.

வேகமாக வளர்ந்துவரும் பொருளாதார நாடான இந்தியா, தனது இலக்குகளில் நிலையான வளர்ச்சி என்ற குறிக்கோளை முதன்மையானதாக வரித்துக் கொண்டிருக்கிறது. தொழில் துறையின் பங்களிப்பை வளர்த்தெடுக்க வேண்டிய சூழலில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்துவதும் அதற்காகப் பேரளவிலான முதலீடுகளைச் செய்வதும் அடுத்து வரும் சில 10 ஆண்டுகளின் முக்கியமான திட்டங்களாக இருக்கும்.

இந்தியாவின் வளர்ச்சிக்கு சேவைப் பணித்தொழில் துறைகள் முக்கிய பங்காற்றிவருகின்றன. மென்பொருள் தொழில்நுட்பமும் அயல்பணி ஒப்படைப்புகளும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளையும் அந்நியச் செலாவணியையும் அதிகரித்துள்ளன.



தொழில் துறையில் 10% வளர்ச்சியை எட்டினால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தொழில் துறையின் பங்களிப்பு 25% ஆக உயரும். அதற்காகத் திறன்மிக்க தொழிலாளர்களைப் பல்லாயிரக்கணக்கில் உருவாக்க வேண்டும்.

உக்ரைன் இடையே போர் தொடங்கி ஏறத்தாழ எட்டு மாதங்கள் ஆகின்றன. இன்னும் போர் முடிவதாக தெரியவில்லை. இந்தப் போரில் உக்ரைன் நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது. வீடுகள், பாடசாலைகள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் உக்ரைனில் தரைமட்டமாக்கப்பட்டிருக்கின்றன. பொருளாதார ரீதியாகவும் உக்ரைன் மிகப் பெரும் இழப்பைச் சந்தித்து இருக்கிறது. ரஷ்ய பொருளாதாரமும் முடங்கி இருக்கிறது. உலகின் பல்வேறு நாடுகள் பொருளாதார இழப்பை எதிர்நோக்குகின்றன. ஆனாலும் இந்தியா தனது பொருளாதார வளர்ச்சியில் ஸ்திரமாகவே உள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க அரசின் சாதனையென்றே இதனைக் கொள்ள வேண்டியுள்ளது. இந்திய பொருளாதாரத்தை சரியான திசையை நோக்கி பிரதமர் நரேந்திர மோடி நகர்த்தி வருகிறார் என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள்.

எஸ். சாரங்கன்

## மானுடவியல்
(தொடர்)

### கழறிற்றறிவார் நாயனார்



91

தாம் பாடிய செந்தமிழ் நூலைத் தம் தோழராகிய சுந்தரர் திரு முன்பு நன்மை விளங்கக் கேட்பித் தார். ஆரூரிடங்கொண்ட இறைவ ரும் சேரவேந்தர் பாடிய தெய்வப் பாமலையை விரும்பி ஏற்றுக் கொண்டருளினார். பின்பு சுந்தரர் சேரமான் பெருமாளை அழைத் துக்கொண்டு நங்கை பரவை யார் திருமாளிகைக்குச் சென்றார். பரவையார், திருவிளக்கு நிறை குடம் முதலிய மங்கலப் பொருட்களு டன் சேரமான் பெருமானை வரவேற்று வணங்கிச் சேரர் பெருமானிற்கும் சிவ னடியார்களுக்கும் உடன் வந்த பரிச னங்களிற்கும் தக்கவகையால் திரு வமுது அமைத்து அன்புடன் உபசரித்தார். ஆண்டநம்பியும் சேரமான் பெருமாளும் உடனிருந்து திருவமுது செய்தருளினார்.

இவ்வாறு சேரமான்பெருமாளும் நம்பியாரூரரும் திருவாரூரில் தங்கி யிருக்கும் பொழுது பாண்டி நாட்டிலுள்ள திருவாலவாய் முதலிய திருத்த லங்களை வழிபடவேண்டும் என்ற எண்ணம் சுந்தரர்க்கு உண்டாயிற்று. அவர்தம் விருப்பத்தினைச் சேரமான்பெருமாளுக்குத் தெரிவித்தார்.

வன்றொண்டரைப் பிரியாத பெருமானாகிய சேரமான் பெருமாள் தமக்குத் திருமுகப் பாசுரம் அனுப்பியருளிய திருவாலவாய்ப் பெரு மானைப் போற்றவேண்டுமெனும் பேரார்வத்தால் தாமும் அவருடன் செல்லத் துணிந்தார். ஒத்த உள்ள உடையார் இருவர் அடியர் புடைசூழத் திருமறைக்காடு முதலிய தலங்களை வணங்கித் தென்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையை அடைந்தார்கள்.

அப்போது நாடாள் வேந்தனாகிய பாண்டியனும், பாண்டிய மகளை மணந்து மதுரையில் தங்கியிருந்த சோழ மன்னனும் எதிர் சென்று இவ்விருபெருமக்களையும் வரவேற்றுத் திருவாலவாய்த் திருக்கோ யிலுக்கு அழைத்துச் சென்றனர். நம்பியாரூரருடன் திருவாலவாய்ப் பெருமானைக் கண்டு மகிழ்ந்த சேரமான் பெருமாள், 'அடியேனை யும் ஒரு பொருளாக எண்ணித் திருமுகம் அருளிய பேரருளின் எல்லையை அறிந்திலேன்' என எண்ணி உரை தடுமாறிக் கண்ணீ ரும்ப ஆலவாய் கடவுளைப் பரவிப்போற்றினார்.

பாண்டியன் இவ்விரு பெருமக்களையும் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று உபசரித்துப் போற்றினான். இங்ஙனம் சேர சோழ பாண்டியர்களாகிய தமிழ் வேந்தர் மூவரும் நம்பியாரூராகிய சுந்தரரும் ஒருவரோடொருவர் அன்பினால் அளவளாவிப் பாண்டி நாட்டுத் தலங்க ளைப் பணிந்து இன்புற்றனர். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**

# பிரதோஷ காலம்





ஒவ்வொரு மாதமும் வளர்பிறை மற்றும் தேய்பிறை நாட்களில் வரும் திரயோதசி நாட்களில் மாலை 4.30 மணி முதல் 6 மணி வரையில் உள்ள காலத்தை பிரதோஷ காலம் என்று முன்னோர்கள் கணித் துள்ளனர். காரணம் அன்று தான் எம்பெருமான் ஆலகால விஷத்தை உண்டு அகிலத்தை காத்தருளினார் என்று சிவபுராணம் கூறுகின்றது. தேவர்களும், முனிவர்களும் மகிழ்ச்சி அடையும் வகையில், சிவபெருமான் பிரணவத்தின் முழு வடிவமான நந் தியின் கொம்புகளின் நடுவில் நின்று ஆனந்த தாண்டவம் ஆடினார். இதைக் கண்ட தேவர்கள், முனிவர்கள் உள்பட அனைவரும் எம்பெருமானின் ஆனந்த தாண்டவத்தை தரிசித்தார்கள். இப்படி எம்பெருமான் அனைவருக்கும் அருள் புரிந்த காலமே பிரதோஷ காலம் என்று கூறப்படுகிறது.

எம்பெருமான் உருவாக்கிய நான்மறைக ளையும் முதன்முதலில் நந்தியம் பெருமா னுக்கு தான் உபதேசித்தார் என்றும் புராணங் கள் கூறகின்றன. இதனால் தான் பிரதோஷ காலத்தில் முதல் மரியாதையும் பூஜையும் நந்தியம் பெருமானுக்கு செய்யப்படுகிறது. அதோடு சிவபெருமானின் வாகனமாக இருப் பதும், நந்தியப்பதிதான். இதன் நிறமும் தூய வெண்மை நிறமாகும்.

மற்ற நாட்களில் நாம் சிவபெருமான் ஆல யத்தை சுற்றி வலம் வருவதற்கும், பிரதோஷ நாளில் வலம் வருவதற்கும் நிறைய வித்தி யாசம் உண்டு. மற்ற நாட்களில் பொதுவாக வலம் இருந்து இடமாக சுற்றி வருவது வழக் கம். ஆனால் பிரதோஷ காலங்களில் இடமி ருந்து வலமாக சுற்றி வரவேண்டும். இதை 'சோமசூக்த பிரதட்சிணம்' என்று சொல்வ துண்டு. சோமசூக்த பிரதட்சிணம் செய்யும் முறையானது முதலில் நந்தி தேவரையும், பிரணவ வடிவான அதன் கொம்புகளுக்கு நடுவில் நடனமாடும் எம்பெருமானையும் தரிசிக்க வேண்டும். அதன் பிறகு, இடப் புறமாக சென்று அபிஷேக தீர்த்தம் வந்து சேரும் இடமான கோமுகி தீர்த்த தொட்டியை தாண்டாமல் சண்டிகேஸ்வரரை வணங்க வேண்டும். பின்பு வந்த வழியே திரும்பி வந்து மீண்டும் நந்தியம்பதியை தரிசித்து விட்டு, பின்பு வழக்கம் போல கோவிலை வலம் வரவேண்டும். இப்படி மூன்று முறை வலம் வரவேண்டும். இதற்கு பெயர் தான் சோமசூக்த பிரதட்சிணம் என்று பெயர்.

சனிப்பிரதோஷ நாளில் எம்பெருமான் ஈசனை வழிபட்டால், அடுத்த ஐந்து ஆண் டுகளுக்கு சிவபெருமான வழிபாடு செய்த புண்ணியம் நமக்கு கிடைக்கும். இந்த நாளில் வசதி படைத்தவர்களும், சிவனடி யார்களும் சிவபெருமானுக்கும், நந்தி தேவ ருக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்தால் சகல சௌபாக்கியங்களும் கிட்டும். சனிப் பிரதோஷ காலத்தில் நந்தியை வழிபாடு செய்தால் இந்திரனுக்கு சமமான பெயரும் புகழும், செல்வாக்கும் கிட்டும். அன்றைக்கு செய்யும் எந்தவித தானமும் எண்ணில டங்கா பலனைக் கொடுக்கும் என்பதோடு, இனிமேல் பிறப்பே இல்லாத முக்தியை கொடுக்கும் என்று சிவபுராணம் சொல்கிறது.

சைவ மஞ்சரி

## புரட்டாசி சனிக்கிழமை



புரட்டாசி மாதம் ஒவ்வொரு சனிக்கிழமை தினத் திலும் விரதம் இருந்து பெருமாளை வழிப டுதல் மற்றும் விரத தினத்தில் செய்யக் கூடியது என்ன என்பதை தெரிந்து கொண்டு அதை பின் பற்றுவது நம் வாழ்க்கையை செம்மைப்படுத் தும். பிரம்ம முகூர்த்தம் எனப்படும் காலை 4 மணி முதல் 6 மணிக்குள் எழுந்து விடுங்கள். வீட்டைச் சுத்தம் செய்து கொள்ளவும். காலையில் எண்ணெய் வைக்காமல் தலைக்கு குளியுங்கள். நெற்றியில் பெருமாளுக்கு உகந்த நமம் இட்டுக் கொள்ளவும். வீட்டில் அழகிய கோலம் இடவும். மாவிலை தோரணம் கட்டவும். வெள்ளிக்கிழமை களில் தீபம் ஏற்றி இருந்தால், அந்த விளக்கில் இருக்கும் எண்ணெய், திரியை எடுத்துவிட்டு, புதிதாக எண்ணெய்யை ஊற்றி, திரி போட்டு தீபம் ஏற்றவும்.

காலையில் தீபம் ஏற்றி, இறைவனுக்கு ஏதேனும் ஒரு நைவேத்தியம் படையுங்கள். எளிமையாக ஒரு இனிப்பை இறைவனுக்கு படைக்க விரும்பினால், பொரிகடலை மற்றும் சர்க்கரை கலந்து சுவாமிக்கு படைக்கலாம். அதன் பின்னர், உங்கள் வீட்டில் இருக்கும் சொம்பை நன்றாக சுத்தம் செய்து, காய வைத்து, அதற்கு மூன்று நாமம் இடவும். அதில் சிறிது அரிசி, ஓரிரு நாணயங்களை இடவும். அதை வைத்து பெருமாளிடம் வேண்டவும். பின்னர் அந்த சொம்பை எடுத்துக் கொண்டு அருகில் உள்ள நான்கு வீட்டிற்காவது சென்று "கோவிந்தா, கோவிந்தா" என ஒலி எழுப்பு அரிசியை, யாசகம் பெற வேண்டும்.

பின்னர் வீட்டுக்கு வந்து, அந்த அரிசியால், சமைக்கவும். பருப்பு, இரண்டு காய்கறிகள் போட்டு சாம்பார், பொரியல் செய்து படைக்கலாம்.





திருகோணமலை - உவர்மலை திருமதி சந்தான லட்சுமி அம்மையாரின் இல்லத்தில் நவராத்திரி கொலு பொம்மைகள் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளதையும் இந்த கொலு பொம்மைகளுக்கு மத்தியில் சிறப்பம்சமாக இராவணனின் திருவுருவ பொம்மையும் வைத்திருப்பதையும் காணலாம்.

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 9



நமக்கு செல்வ செழிப்பை கடவுள் வழங்குகிறார் என்ற தவறான எண்ணம் நமக்குள் பலரிடையே உருவாகி விட்டது. கடவுள் தானே தன் கையால் எவரையும் செல்வந்தனாக்கு வதில்லை. மாறாக மனிதன் தன் நற்செயல்க ளாலும், நன்னடத்தைகளாலும் தான் செல்வ செழிப்பு உடையவனாகத் திகழ்கிறான். ஆனால் அதற்கும் கடவுளின் அருள் மிக அவசியமா கும். எந்தளவு நாம் கடவுளின் கொள்கையைப் பின்பற்றுகிறோமோ அந்தளவு நமக்கு அவரின் அருள் கிடைக்கும். இதையே பகவான் ஸ்ரீகிருஷ் ணர், ஆத்மாவே ஆத்மாவிற்கு நண்பனாகவும், எதிரியாகவும் திகழ்கிறது என, பகவத் கீதையில் கூறுகிறார்.

எந்தளவு நாம் நம் உள்ளத்தின் உள்ளே கடந்து சென்று, கடவுளுக்கு விருப்பமுள்ளவை களை செய்கிறோமோ அந்தளவு நாம் நன்மை யடைகிறோம். கடவுளுக்கு விருப்பமில்லாத வைகளை செய்தால், தீமையே நமக்கு கிட்டும். மற்றவர்களுக்கு முன்னுதாரணமானவர்களாக நாம் திகழும் போது தான், ஒன்று திரண்ட சக்தி நம்மை வந்தடையும். அதுவே நமக்கு நன்மை தந்தருளும்.

அஹங்காரம் (தான் என்னும் செருக்கு) தான் எல்லா இன்னல்களுக்கும் மூலகாரணமாகும். ஆத்மா குறுகிய வட்டத்துக்குள் சுழன்று கொண்டி ருந்தால் அனுபவ பாடம் கிடைக்காமல் போகும். மாறாக ஆத்மா ஆன்மீக ரீதியாக பரமாத்மாவை அடைந்திட நினைத்தால், நம் வாழ்க்கை வான் நோக்கி பறவையை போல் ஆனந்தமடையலாம். எனவே, ஆன்மீக வாழ்க்கை எல்லையிலா ஓர் ஆனந்த ஊற்று என்பதை உணர்க.

பிறரின் வெற்றி, முன்னேற்றம் ஆகியவை களை விருப்பு வெறுப்பின்றி பாராட்டும் போது, ஆத்மார்த்தமான ஆனந்தம் நம்முள் பிறக்கும். எந்த ஒரு நாளில் நாம் நம் பேச்சால். செயலால் பிறரை மகிழ்விக்கிறோமோ அந்நாளே நமக்கு மிக ஆனந்தமான நாளாகும். பிறருக்காக நாம் செய்யும் தியாகம். வார்த்தையால் வர்ணிக்க இயலாத ஆனந்தத்தை நம் இதயத்தில் கொண்டு வந்து சேர்க்கும். பிறரின் வேதனையில் நம் கண் களும் கலங்கிட. அவர்களுக்கு அது ஆறுதலாய் அமையும். அதுவே நமக்கு ஆன்மீக, ஆத்மார்த் தமான சுகத்தை தரும். பிறருடைய துன்பத்தில் மட்டும் ஆறுதலாய் இருந்து விட்டு, அவர்களின் இன்பத்தில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருக் கலாமா என்று வினவ வேண்டாம்.

பிறருடைய இன்பத்தில் நாமும் இன்புற்றால் அது அவர்களுடைய இன்பத்தை இரு மடங் காக்கும். அது நமக்கு சுகமே. அதே போல். பிறருடைய துன்பத்தில் நாம் பங்கெடுத்துக் கொண்டால் அது அவர்களுடைய துன்பத்தை பாதியாக குறைக்கும். அதுவும் நமக்கு சுகமே. பிறரின் இன்ப துன்பங்களை தனது இன்ப துன் பமாக கருதிட, நம் உள்ளத்தில் இரக்கம், அன்பு, கனிவு இருக்க வேண்டும். பொறாமை, வயிற்றெ ரிச்சல், கோபம் இருக்கக் கூடாது. இவைகளை ஒரு தவமாக பின்பற்றிட வேண்டும். இந்தளவு கூட நாம் ஒரு சிறிய தவம் செய்யாவிட்டால் நாம் ஆனந்தம் அடைய முடியாது. நம் இன்ப, துன்பத்திற்கு காரணம் நாமே அன்றி வேறு யாருமில்லை. தீதும் நன்றும் பிறன் தர வாரா என்பதை நன்கு உணர்ந்தால் நம் வாழ்வில் எப்போதும் மகிழ்வே திகழும்.

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்









கொழும்பு டயமன்ட் லயன்ஸ் கழகம் நவராத்திரியையும் சிறுவர் தினத்தையும் ஒட்டி அதிபர் முருகானந்தம் தலைமையில் கொழும்பு கலைமகள் வித்தியாலயத்தில் பல்வேறு நிகழ்வுகளை நடத்தியது. மாணவ மாணவிகளுக்கு பாடசாலை உபகரணங்களும் ஆசிரிய ஆசிரியைகளுக்கு பரிசில்களும் பாடசாலைக்கு ஒலிவாங்கி மேடை மேசையும் பாடசாலைக்கு மணியும் வழங்கியதுடன் மரம் நடும் நிகழ்வையும் நடத்தியது. லயன் வி. ரவிகுமார் நடத்திய இந்நிகழ்வுகளில், லயன் கவனர் பேனாட் கம்லத் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

**19293) பிரதோஷ காலம் எது?**
தினமும் மாலை 4.30 முதல் 6 மணி வரையிலான ஒன்றரை மணி நேரம் பிரதோஷ காலமாகும்.

**19294) இந்த பிரதோஷத்துக்கு என்ன பெயர்?**
"நித்யபிரதோஷம்' என்று பெயர்.

**19295) வளர்பிறை திரயோதசிக்கு என்ன பெயர்?**
பக்ஷ பிரதோஷம்

**19296) தேய்பிறை திரயோதசிக்கு என்ன பெயர்?**
மாத பிரதோஷம்

**19297)** தேய்பிறை திரயோதசி சனிக்கிழமை ஆகியவை கூடியிருந்தால் என்ன பெயர்? மகாபிரதோஷம் என்று பெயர்.

**19298) ஒருவருக்கு அவர்களின் இறந்து போன தாய் தந்தையர் கனவில் தோன்றுவார்களேயானால் என்ன நடக்கும்?**
கனவு கண்டவருக்கு வர இருக்கும் ஆபத்து அல்லது இடையூறைச் சுட்டிக்காட்டி எச்சரிக்க வந்திருக்கிறார்கள் என்று பொருள்.

**19299) இறந்து போனவர்களுடன் பேசுவது போல் கனவு கண்டால் என்ன பலன்?** உங்களுக்கு பெயரும், மிக சிறப்பான புகழும் உண்டாகும் என்பது பொருள்.

# அம்பாறை, கல்முனை நகரங்களில் போலி முகவர் நிலையங்கள்

## சந்தேகத்தின் பேரில் இருவர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அம்பாறை மற்றும் கல்முனை நகரங்களில் நடத்தப்பட்டு வந்த போலி முகவர் நிலையங்கள் இரண்டு இனங்காணப்பட்டு சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்துள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. சட்டபூர்வ அனுமதியில்லாது மேற்படி இரண்டு போலி முகவர் நிலையங்களும் நடத்தப்பட்டு வந்துள்ள நிலையில் அங்கிருந்து 21 கடவுச்சீட்டுகளையும் கைப்பற்றியுள்ளதாக அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

அம்பாறை புத்தங்கல வீதியில் கண்டுபிடிக்கப்பட்ட போலி முகவர் நிலையத்திலிருந்து 17 கடவுச்சீட்டுகளும் வெ ளிநாட்டு வேலைவாய்ப்புக்கான அடையாள அட்டைகள் மற்றும் அந்த இலச்சினையுடன் கூடிய பெனர்கள் உள்ளிட்ட ஆவணங்கள் பலவற்றையும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்துள்ளதாகவும் அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

## நான் அறியவில்லையென... (03 ஆம் பக்கத் தொடர்)

தெரிவிக்கவில்லை. அந்தவகையில் ஆளும் கட்சியுடன் இணைவதற்கு கட்சியென்ற ரீதியில் எம்மால் முடியாது.

எனினும் நாட்டின் மோசமான நிலைமைகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் சிறந்த தீர்மானங்களுக்கு மக்களின் அவசியத்தை கவனத்திற்கொண்டு ஒத்துழைப்பு வழங்கமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வவுனியா ஓமந்தையில்... (03 ஆம் பக்கத் தொடர்)

நாட்டின் ஒரு அரியவகை உயிரினமாக இது இருப்பதானால் 1970 ஆம் ஆண்டுகளில் வெளி வந்த இலங்கையின் இரண்டு ரூபாய் நாணயத்தாளில் இதன் படம் அரசாங்கத்தால் பொறிக்கப்பட்டு இருந்ததுடன், முத்திரை ஒன்றிலும் இதன் படம் பொறிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதிக் காலப்பகுதியில் ஓமந்தைக் காட்டுப் பகுதியில் இதே போன்ற அரணை இனம் ஒன்று அவதானிக்கப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 2574.1 மில். அமெ. டொலர்... (03 ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்துள்ளார். இதேவேளை, கடந்த செப்டெம்பர் மாதத்தில் அந்தளவு மேலும் அதிகரித்துள்ளதுடன் அந்த மாதத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளோர் இலங்கைக்கு அனுப்பியுள்ள தொகை 35 கோடி 93 இலட்சம் டொலர்களாகும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## நிதி இராஜாங்க அமைச்சரின்... (03 ஆம் பக்கத் தொடர்)

அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கம் முன்னெடுத்துள்ள நிதி மறுசீரமைப்பு மற்றும் அது தொடர்பான கொள்கை மாற்றங்கள் தொடர்பிலும் சர்வதேச நாணய நிதியத்திற்கு அவர்கள் தெளிவுபடுத்த உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## சிறிய ரக மீன்களின்... (03 ஆம் பக்கத் தொடர்)

காரணமாக மண்ணெண்ணெய் விநியோகத்தை மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சிறிய ரக மீன்பிடி படகுகளுக்கு வழங்கப்படுவது போன்று தினமும் மண்ணெண்ணெய் வழங்கப்படுமெனவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

## உள்ளூராட்சி சபை...

மக்கள் சபை வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் முறை தொடர்பில் தீர்மானிப்பதற்காக தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்படுமென்றும் அந்தத் தெரிவுக்குழு எதிர்வரும் ஜுலை மாதத்திற்குள் தீர்வொன்றை முன்வைக்கத்தவறினால் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தப் போவதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றுள்ள தொழில் முயற்சியாளர்களுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பிரதேச சபையின் நிறைவேற்று அதிகாரத்தை தனி தலைவரொருவருக்கு வழங்குவதற்குப் பதிலாக தலைவரை முன்னிலைப் படுத்தி குழுவொன்றை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அடுத்துவரும் பிரதேச சபை தேர்தலுக்கு முன்பதாக அந்தத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு சட்டமூலம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் மோசடிகளுக்கு முக்கிய காரணம் விருப்புவாக்கு முறைமையே என்பதை சுட்டிக் காட்டியுள்ள ஜனாதிபதி நாம் விரைவில் விருப்பு வாக்கு இல்லாத முறைமையை அல்லது கலப்பு முறையை அறிமுகப்படுத்துவோம் என்றும் அதேவேளை தேர்தலுக்காக செலவிடும் நிதி தொடர்பில் தேர்தல் சட்டத்தின் மூலம் மட்டுப்படுத்தலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள ஜனாதிபதி,

பொருளாதாரத்திற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாம் கதைத்துள்ளோம். ஆனால் அரசியல் வேலைத்திட்டத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களையும் தியவன்னா ஆற்றில் தள்ள வேண்டும் என்று கூறுகின்றனர். அவ்வாறு தனி நபர்கள் கூறவில்லை. அரசியல் முறைமையை அவர்கள் ஏற்காததால் தான் அவ்வாறு கூறுகின்றனர். கடந்த மார்ச் மாதம் இந்தப் போராட்டங்களை அரசியல் கட்சிகள் ஆரம்பிக்கவில்லை. அரசியல் கட்சிகளின் போராட்டங்களுக்கு மக்கள் வரவில்லை. மக்கள் தனித்தனியாக முன் வந்தனர். துரதிர்ஷ்டவசமாக, மே மற்றும் ஜூன் மாதங்களில், ஒவ்வொரு அரசியல் அமைப்பும் இந்த எதிர்ப்பு இயக்கத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டன. அதனுடன் வன்முறையும் வெடித்தது. வன்முறையின் மூலம் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி இடம்பெற்றது . அதனால் அன்றைய போராட்டம் வீழ்ச்சி அடைந்தது.

இந்த அரசியல் முறைமை மாற்றப்பட வேண்டும் என்று மக்கள் தற்போதும்கூறுகின்றனர். வன்முறையை யாரும் விரும்புவதில்லை. இதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த மனோபாவத்தை மாற்றிக் கொண்டே நாம் முன்னோக்கிச்செல்ல வேண்டும்.

கட்சி முறைமையினால் பாராளுமன்றத்தில் இன்றுபல்வேறு குழுக்கள் உருவாகியுள்ளன. நான் ஜனாதிபதியாவதற்கு ஆளுங்கட்சியின் ஆதரவைப் பெற்றேன். இது ஒரு இரகசியம் அல்ல. சிறு பகுதியினர் மற்ற வேட்பாளர்களுக்கு வாக்களித்தனர். மேலும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் எனக்கு வாக்களித்தனர். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களும் எனக்கு வாக்களித்தனர். அதனால் எனக்கு இரு தரப்பிலும் வாக்குகள் கிடைத்தன.

குறுகிய கட்சி பேதமின்றி மக்கள் நலனுக்காக நான் பணியாற்றுகிறேன். தற்போது எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு இணங்க, பாராளுமன்றத்தில் தேசிய சபையொன்று அமைக்கப்பட்டுள்ளது. கண்காணிப்புக் குழுக்கள் போன்ற குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இவைகளை நிறைவு செய்ய முடியவில்லை. சிலர் தேசிய சபையில் இணைந்துள்ளார்கள் சிலர் வருவதில்லை. அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவார்கள் என்றே நாடு எதிர்பார்க்கிறது. நாம் இத்தோடு நின்றுவிடக் கூடாது.

## ரஷ்ய விமான சேவை...

நடத்த ஏரோஃப்ளோட் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அஸூர் ஏர் விமான நிறுவனத்துக்கும் நவம்பர் தொடக்கத்தில் இருந்து வாரத்துக்கு நான்கு விமானங்களை இயக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையை கணிசமாக அதிகரிக்குமென அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள ரஷ்யத் தூதரகம் மற்றும் ரஷ்யாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் ஹரின் பெர்னாண்டோ தனது டுவிட்டர் மூலம் தெரிவித்துள்ளார்.

## வழிபாட்டுத்தலங்களுக்கு...

இதன்படி, 65 ரூபாவாக உள்ள மின்சார அலகு ஒன்றுக்கான கட்டணம் 32 ரூபாவாக குறைக்கப்படுமென அதன் தலைவர் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

பொது பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் நேற்று மல்வத்து அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது மதஸ்தலங்களில் ஏற்பட்டுள்ள மின்சார கட்டண பிரச்சினைக்கு நிவாரணம் வழங்குவது குறித்து அவர் விபரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு ...

உரிய நேரத்தில் அவர்களுக்கு 15,000 ரூபாய் முற்பணம் கிடைக்குமெனவும் அவர் மேலும் கூறியுள்ளார். இதே நேரம், ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையின் கீழுள்ள பெருந்தோட்டங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இம்முறை 10,000 ரூபா தீபாவளி முற்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சாம்பல் மேட்டிலிருந்து...

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் தெரிவித்தனர். "ஒன்றிணைந்து எழுவோம், களுத்துறையில் ஆரம்பிப்போம்"எனும் தொனிப் பொருளின் கீழ் களுத்துறையிலுள்ள ரோஹித்த அபேகுணவர்த்தனவின் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் பொதுஜன பெரமுன கட்சியின் மக்கள் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதன்போதே இவ்வாறு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் மொட்டுக் கட்சி ஆட்சி தொடரும். தேவையான நேரங்களில் உரிய அஸ்திரங்கள் பயன்படுத்தப்படும் என்றும் இக் கூட்டத்தில் அவர்கள தெரிவித்தனர். அத்துடன், மொட்டுக் கட்சி ஆட்சி மீது மக்கள் மத்தியில் அதிருப்தி உருவாவதற்கு விமல், கம்மன்பில, டலஸ் போன்ற உள்ளகச் சதிகாரர்களும் பிரதான பங்கை வகித்தனரென விமர்சனங்கள் இதன்போது தெரிவிக்கப்பட்டதுடன், இரசாயன உரப் பாவனைக்கு தடை விதிப்பதற்கு கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முடிவும் பின்னடைவுக்குக் காரணமெனவும் சுட்டிக்காட்டினர்.

மே 09 தாக்குதல்கள், வீடெரிப்பு சம்பவத்துக்குப் பிறகு மொட்டுக் கட்சி முக்கியஸ்தர்கள் பொதுவெளியில் ஒரே மேடையில் சங்கமித்தது இதுவே முதன்முறையாகும்.

## நாட்டில் சிறுபான்மையினர்...

சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் 12 தேசிய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். யார் எவ்வாறு அர்த்தம் கற்பித்தாலும் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இன்றுள்ளது போல் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும்,அது குறையவோ,அதிகரிக்கப்படவோ கூடாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை கடற்பரப்பு...

தமிழக அரசுக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி பி.ஜெகன்நாத் என்பவரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தை, பொருளாதார நெருக்கடி காரணமாக மீண்டும் செயற்படுத்துவதற்கான சாத்தியம் உள்ளதாக அவர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் பாகிஸ்தான் , ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து வரும் பயங்கரவாதிகள் இலங்கையிலிருந்து இந்தியாவை தாக்கக் கூடுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மாநில அரசாங்கத்தை இழிவுப்படுத்துதல், வதந்தியை பரப்புதல் மற்றும் அச்சத்தை ஏற்படுத்துதல் என்பவற்றுக்காக இப் பொது நல வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லையென்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## முக்கிய போதைப் பொருள்...

நபர்கள் அம்பாறை நகர் பகுதியை சேர்ந்த 33, 37, 38 வயது மதிக்கத்தக்கவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சந்தேக நபர்கள் பயணம் செய்த கருப்பு நிற கொரோல்லா கார் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் 06 கிராம் 840 மில்லிகிராம், பணம் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் சான்று பொருட்களுடன் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக சம்மாந்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப் படை முகாமுக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து வெள்ளிக்கிழமை (7) அதிகாலை மற்றுமொரு நபர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை மத்ரஸா வீதியில் விசேட அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இந் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான நபர் கல்முனைகுடி பகுதியை சேர்ந்த 34 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசமிருந்து ஹெரோயின் போதைப்பொருள் 07 கிராம் 870 மில்லி கிராம் உள்ளிட்ட சந்தேக நபர் பயன்படுத்திய கைத்தொலைபேசி என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர், சான்று பொருட்களுடன் கல்முனை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## IMF உடனான...

நிதிய அதிகாரிகளைச் சந்திக்கவிருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டதைத் தொடர்ந்து, நாம் கடன்மறுசீரமைப்பை மேற்கொள்வதை இலக்காகக் கொண்டு இருதரப்பு மற்றும் பல்தரப்புக் கடன் வழங்குனர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

தெளிவூட்டல், காட்சிப்படுத்தல் மூலம் கடந்த மாதம் 23 ஆம் திகதி இது குறித்து அனைத்துக் கடன் வழங்குனர்களுக்கும் விளக்கமளித்தோம். இருதரப்புக் கடன்வழங்குனர்களுடனான பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுத்திருக்கின்றோம்' என்று சுட்டிக்காட்டியுள்ள ஆளுநர் நந்தலால் வீரசிங்க, அதேவேளை ஜனாதிபதியின் ஜப்பான் விஜயத்தின்போது அந்நாட்டு உயர்மட்ட அதிகாரிகளுடனும், இங்கிலாந்து விஜயத்தின்போது அரச தலைவர்கள் சிலருடனும், மணிலாவில் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை 'கடன் மறுசீரமைப்பினூடாக முதலாவதாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவியைப் பெறுவதற்கும் இரண்டாவதாக உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச பொதுக் கட்டமைப்புக்களிடமிருந்தும் உதவிகளைப் பெறுவதற்கும் எதிர்பார்க்கின்றோம்.

அதுமாத்திரமன்றி மூன்றாவதாக கடன்மறுசீரமைப்பின் ஊடாக மீளச்செலுத்தவேண்டியுள்ள கடன்களின் அளவைப் பெருமளவுக்குக் குறைத்துக்கொள்வதன் மூலம் வெளிநாட்டுக்கையிருப்பின் அளவை சாதகமான மட்டத்துக்குக் கொண்டு வருவதற்கும், முதலீட்டாளர்கள் மத்தியில் மீண்டும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் எதிர்பார்க்கின்றோமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரச சுற்றுலா வலயமாக...

சீத்தாவக்கபுர இராசதானியின் அவிசாவளை 'வக' பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலா வலயமாக மாற்றுவது தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் போக்குவரத்து அமைச்சில் அண்மையில் நடைபெற்றது. அந்தப் பிரதேசங்களிலுள்ள சீதாவக்க தாவரவியல் பூங்கா, லபுகம மற்றும் கலட்டுவன நீர்த்தேக்கங்களின் அழகிய மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தச் சுற்றுலா வலயத்தை உருவாக்குவது அமைச்சரின் யோசனையாகும்.

இந்த பகுதியை பூர்வீகமாகக் கொண்ட விலங்குகள் மற்றும் பறவைகளைப் கண்டு களிக்கும் வாய்ப்பையும் இதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் பெறுவார்கள். ஏற்கனவே வார இறுதி நாட்களில் சுமார் 2,000 சுற்றுலாப் பயணிகள் இந்தப் பகுதிக்கு வருகை தருவதாக இந்த கலந்துரையாடலின்போது தெரியவந்தது.

சுற்றுலாப் பயணிகளுக்காக வார இறுதி நாட்களில் காலை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து 'வக' புகையிரத நிலையத்துக்கும், பிற்பகல் வக ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கும் விசேட ரயிலும் இயக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக அவிசாவளை மற்றும் ஹோமாகம டிப்போக்களிலிருந்து அந்த இடங்களைப் பார்வையிடுவதற்கான விசேட பஸ் சேவையை ஆரம்பிப்பது தொடர்பிலும் அமைச்சர் கவனம் செலுத்தியுள்ளார்.

## அமைச்சர் டக்ளஸுக்கு...

மற்றும் கடற்றொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா இன்று (10.10.2022)தனது 65ஆவது அகவையில் தடம் பதிக்கின்றார்.

என்றும் இவர் தமிழ் மக்களுக்கான சேவையை முன்னெடுப்பதில் அல்லும் பகலுமாக செயற்படுபவர். குறிப்பாக வடக்கு மக்களுக்கு தனது அரசியல் வாழ்வில் அர்ப்பணிப்புடன் சேவைகளை முன்னெடுத்து வருகின்றார். எப்பொழுதும் யதார்த்தமாக சிந்திக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மென்மேலும் அவரது சேவையை தொடரவும் அவரது அரசியல் வாழ்வு பலமடையவும் சர்வதேச இந்துமத பீடம் சார்பாக இறைவனை மனதார பிரார்த்தித்து ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதாக கலாநிதி சிவ ஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## எதிர்வரும் 10...

இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட உரத் தொகைக்கு மேலதிகமாக இந்த உரம் கொண்டு வரப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது விவசாயிகள் பெரும் போக செய்கைக்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கமைய, இந்த முறை பெரும் போகத்தின் போது நெல் உற்பத்திக்காக 70 சதவீத இரசாயன உரத்தை பயன்படுத்துவதற்கு விவசாய அமைச்சு பரிந்துரைத்துள்ளது.

பெரும்போகத்துக்கு தேவையான 150,000 மெற்றிக் யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கையை விவசாய அமைச்சு முன்பே ஆரம்பித்தது.

இதன்படி, பெரும் போகத்துக்கு தேவையான யூரியா உரத்தை இறக்குமதி செய்வதற்காக கோரப்பட்டிருந்த முதலாவது கேள்வி மனு தோல்வியடைந்தமையை அடுத்து இரண்டாவது கேள்வி மனுவுக்காக மூன்று நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். இந் நிறுவனங்கள் தொடர்பான விபரங்கள் அமைச்சரவை அனுமதிக்காக இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதி ரணிலின்...

முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோமென முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

'ஒன்றிணைந்து எழுவோம் களுத்துறையில் ஆரம்பிப்போம்' என்ற தொனிப்பொருளில் களுத்துறையில் சனிக்கிழமை (08) நடைபெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

கட்சியும், நாங்களும் அரசியல் ரீதியில் உறக்கத்திலுள்ள போது களுத்துறையில் இடம்பெற்ற மாநாடு எமக்கு உத்வேகத்தை அளித்துள்ளது. நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையை மக்கள் நன்கு அறிவார்கள். புதிதாக குறிப்பிட வேண்டிய தேவையில்லை.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.நாடு என்ற ரீதியில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளோம். அரசியல் ரீதியான நெருக்கடிகளுக்கு ஒன்றிணைந்து தீர்வு காண வேண்டும். நெருக்கடிகளுக்கு தீர்வு காண ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென குறிப்பிட்டார்.

## ஆபத்தான தருணங்களில்....

லயன் சிறிதர் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கும் இந்தியாவுக்குமான தொடர்பு மிகவும் நெருக்கமானதும் ஆழமானதுமாகும். எமது கட்சியின் தலைவரும், நடிகருமான கமல்ஹாசன் தமிழ் மக்களுடன் நெருங்கிப் பழகும் ஒருவராக காணப்படுவதுடன் எந்த நாட்டுக்கு சென்றாலும் தமிழ் உறவுகளை சந்தித்து கலந்துரையாடுவது அவரது பழக்கம்.

நான் ஆறு வருடங்களுக்கு பிறகு யாழ்ப்பாணம் வந்துள்ளதால் பாரிய மாற்றத்தை காண்பதோடு சென்னையை ஒப்பிடும்போது யாழ்ப்பாணம் மிகவும் அழகாக காட்சியளிக்கிறது.

கோவிட் 19 தாக்கத்துக்கு பின்னர் இலங்கையில் தற்போது பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் யாழ்ப்பாணம் மக்களின் வாழ்வியலை நான் உள் நுழைந்து பார்க்கவில்லை.

இலங்கையில் மக்கள் கஷ்டப்படுகின்றார்கள் என்பதற்காக தமிழ்நாட்டு அரசின் உதவிகள் மத்திய அரசின் ஊடாக இலங்கைக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடி ஒரு சில வருடங்களில் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. அயல் நாடான இந்தியா தொடர்ந்தும் இலங்கை மக்களுக்கு உதவிகளை வழங்கும்..

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பை தாண்டும்போது கைது செய்யப்படுவதும் அதேபோல் இலங்கை மீனவர்கள் இந்தியா கடற்பரப்பைத் தாண்டும்போது கைது செய்வதும் வழமையாக காணப்படுகின்றது.

இரு நாடுகளும் நல்ல நண்பர்கள் ஆகையால் எல்லை தாண்டும் மீனவர்களை கைது செய்து சிறையில் அடைப்பதை விடுத்து நல்லெண்ண அடிப்படையில் அணுக வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறோம்.

தமிழக அகதி முகாம்களில் இலங்கையிலிருந்து வந்த ஈழத்தமிழ் மக்கள் துன்பப்படுவதாக தமிழக முதல்வருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, முதல்வர் 350 கோடி ரூபாவை அவர்களது நலத்திட்டத்திற்காக ஒதுக்கியுள்ளார். எமது கட்சியினுடைய தலைவர் கமல்ஹாசன் ஈழத்தமிழர்களுக்காக அவர்களுடைய போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து குரல் கொடுத்து வருகின்றார்.

குறிப்பாக அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகள் நிகழும் போது கறுப்புச்சட்டை அணிந்து போராட்ட களத்திலே எதிர்ப்புகளில் ஈடுபட்டவர். ஆகவே தமிழக மக்களின் தொப்புள் கொடி உறவான ஈழத்தமிழ் மக்கள் எங்கெல்லாம் துன்பப்படுகின்றார்களோ அவர்களுக்காக மக்கள் நீதி மையம் தொடர்ந்தும் குரல் கொடுக்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அநுராதபுரத்துக்கான...

காரணம் தொடர்பில் தற்போது அமைச்சு மட்டத்தில் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு மேலதிகமாக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யுமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேற்படி ரயில் அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் நேற்று முன்தினம் 8 ஆம் திகதி காலை 9.20 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்பட தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் அமைச்சர் வருகைதந்த பின்னரும் 30 நிமிடங்கள் குறித்த ரயில் குறிப்பிட்ட பிரயாண மேடைக்கு வந்திருக்கவில்லை.

அமைச்சரின் பணிப்புரைக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிற்கிணங்க பேலியகொடை பாலத்திற்கருகில் சமிக்ஞை கேபிள் வெட்டப்பட்டிருந்ததால் சமிக்ஞை தாமதமாகி ரயில் வருகை தருவதற்கு தாமதமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது.

வேறு முறைமையொன்றை உபயோகித்து சமிக்ஞை வழங்கப்பட்டதையடுத்து மேற்படி ரயில் அநுராதபுரத்தை நோக்கி சென்றிருந்தாலும் மீண்டும் தம்புத்தேகம சௌரத்கம பிரதேசத்தில் உத்தரதேவி ரயில் தடம்புரண்டதால் அதற்கப்பால் ரயில் பயணிக்க முடியாத நிலை காணப்பட்டது. இறுதியில் பஸ் வண்டிகள் மூலம் ரயில் பயணிகளை அநுராதபுரம் வரை அழைத்துச் செல்வதற்கு ரயில்வே அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

காலை 9.20 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்ட ரயில் பிற்பகல் 1.42 மணிக்கு அநுராதபுரத்திற்கு செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிலையில், அந்த வெள்ளோட்ட ரயில்சேவை மாலை 6.30 மணிவரை தாமதமாகியுள்ளது.

இதன் பின்னணியில் சதி நடவடிக்கைகள் உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ள நிலையில் அமைச்சரின் பணிப்புரைக்கமைய உள்ளக விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன.

ரயில்வே திணைக்களத்தினால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள எல்ல ஓடிசி மற்றும் கென்டி ஓடிசி சொகுசு ரயில் சேவைகள் வெற்றிகரமாக இடம்பெற்றுவரும் நிலையில் அநுராதபுரம் ரயில் சேவைக்கு ஏற்படுத்தப்பட்ட தடை திட்டமிட்ட குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட சதியா என்பதை ஆராயும் வகையிலேயே அமைச்சின் செயலாளர் ரஞ்சித் பிரேமசிறி இன்று குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தில் அது தொடர்பில் முறைப்பாடொன்றை முன்வைக்கவுள்ளார்.




# வெள்ளிவிழா காணும் நியமன ஆசிரியர்கள்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்



நியமனம் பெற்ற ஆசிரியர்களின் 25ஆம் ஆண்டு பூர்த்தி வெள்ளி விழா 2022 நேற்று ஹற்றன் , சாரதா மஹால் மண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில், எஸ். முரளிதரன் (கல்விப் பணிப்பாளர் பெருந்தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்திப்பிரிவு) பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். 1996 1997 இடைப்பட்ட காலப்பகுதியில் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள்.

மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஹற்றன் வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.ஆர். சத்தியேந்திரா சிறப்பு அதிதியாகவும் கல்விப்பணிப்பாளர் மத்திய மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் பி.ஶ்ரீதரன் கௌரவ அதிதியாக கலந்துகொண்டார். இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் நினைவு பரிசில்களும் வழங்கப்பட்டது.

1996/1997ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே தமிழ் மொழி மூல தகுதிகாண் ஆசிரிய பதவிக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் இருபத்தைந்து வருடத்தை எட்டியுள்ளனர்.

மலையக பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கென வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களுள் 96/97 ஆண்டுகளில் வழங்கப்பட்ட நியமனம் முக்கியமானதொன்று என்பதை மலையகக் கல்வி வளர்ச்சியில் இவர்களது பங்களிப்பு குறித்த தரவுகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பல்வேறு பாடத்துறைகளுக்கும் நியமனம் பெற்ற இவர்கள் ஊடாக பெருந்தோட்டப் பாடசாலைகள் புதிய வீச்சோடு பயணித்து பரீட்சைப் பெறுபேறுகளிலும். கல்வி அடைவுகளிலும் அசைவியக்கத்தை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இந்நியமனங்களில் பலர் தமது தகைமைகளோடு, ஆற்றல், அனுபவம், ஆளுமை என்பவற்றினால் பதவி உயர்வு பெற்று கல்விப்பணி ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதிபர்களாக, ஆசிரிய ஆலோசகர்களாக, உதவி கல்விப்பணிப்பாளர்களாக, கோட்ட கல்விப்பணிப்பாளர்களாக, ஆசிரிய கல்வியியலாளர்களாக, விரிவுரையாளர்களாக என பல்வேறு பதவி நிலைகளில் பணியாற்றி வருகின்றமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

# எட்டியாந்தோட்டை கந்தலோயா பாடசாலைக்கு பஸ் நூலகம்

(அவிசாவளை நிருபர்)

"புத்தகங்கள் நம் கண்கள்" எனும் தொனிப்பொருளில் 25ஆவது பஸ் நூலகம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவவினால் எட்டியந்தோட்டை கந்தலோயா தமிழ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு பாடசாலை அதிபர் மு. கருணாகரன் தலைமையில் இடம் பெற்றது.





இதுதொடர்பில் கருத்து தெரிவித்த சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ, மிகவும் கடினமான பாடசாலைகளை மையப்படுத்தி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் இந்த பஸ் நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இதற்காக மனுசத் தெரண, இலங்கை போக்குவரத்து சபை, இலங்கை ரெலிகொம், நூலக சேவைகள் சபை இணைந்து இதனை நடைமுறைப்படுத்தியது. பாவனைக்கு ஒவ்வாத பணி நீக்கம் செய்யப்பட்ட ஶ்ரீலங்கா பஸ் நூலகமாக மாற்றப்பட்டு, அதற்குத் தேவையான உபகரணங்களும் புத்தகங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

முன்னதாக, ஹெலியகொட விஜய குமாரதுங்க மகா வித்தியாலயத்திலும் இதேபோன்ற நூலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்க, மாகாண கல்வி செயலாளர் சுஜானி விஜேதுங்க, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மஞ்சுல இடிகஹவெல, திட்டமிடல் பணிப்பாளர் நெவில் குமாரகே, சிரேஷ்ட உதவி செயலாளர் ரவீந்திர மலானி, மேலதிக கல்விப்பணிப்பாளர் டயஸ் புஸ்பகுமார, உதவிக் கல்வி பணிப்பாளர் நிஹால் வசந்த, தமிழ்ப்பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளர் சகுந்தலா மனோகரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# ஐந்து உயிர்களை காவு கொண்ட இராகலை தோட்ட தீ விபத்து சம்பவத்துக்கு ஒருவருட பூர்த்தி

முழு மலையக மக்களையும் கலங்க வைத்த இராகலை முதலாம் பிரிவு தோட்டம் மத்தியப் பிரிவில் இடம்பெற்ற தனிவீட்டு தீ விபத்து சம்பவம் இடம்பெற்று ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் 07.10.2021 இரவு 10 மணியளவில் இடம்பெற்ற தீ விபத்து இன்றும்

இராகலை தோட்டம் மக்களை மட்டுமின்றி அனைத்து மனித மனங்களையும் விட்டு நீங்காத சம்பவமாக இடம்பிடித்துள்ளது.

மண் சுவராலும்,பொலித்தின் ரெட்டுகளாலும்,மறைக்கப்பட்டு தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த வீடே தீ பிடித்து சாம்பலானது .

இச்சம்பவத்தில் ஐந்து உயிர்கள் சத்தமில்லாமல் எரிந்து கருகியது.

இச்சம்பவத்தின் போது இவ் வீட்டில் வசித்த (27)வயதுடைய தங்கையா இரவீந்திரன் என்பவர் மாத்திரம் வீட்டுக்கு வெளியே மதுபோதையில் இருந்தமையால் உயிர் தப்பியிருந்தார். ஆனால் வீட்டுக்குள்ளே இருந்த தந்தை,தாய்,மகள், மற்றும் ஒருவயது மற்றும் 12 வயதுடைய பேரப்பிள்ளைகள் இருவர் என ஐவர் தீயில் கருகி உயிரிழந்திருந்தனர். இராமையா தங்கையா (வயது 61) முழுமையாக எரிந்து வீட்டின் முதல் அறையில் உயிரிழந்தார்.



அவரின் மனைவி செவனமுத்து லெட்சுமி (வயது 57), நதியா வயது (34), துவாரகன் (13), மற்றும் ஹெரோசன் (வயது 01) ஆகியோர் வீட்டின் பின் அறையில் ஒரே இடத்தில் தீ பிடித்த நிலையில் ஒருவர் மீது ஒருவராக உயிரிழந்திருந்தனர்.

அதேநேரத்தில் சம்பவத்தில் உயிரிழந்த தங்கையா மற்றும் லெட்சுமிக்கு பிறந்த இரவீந்திரன் வயது (27) என்பவரே உயிர் தப்பியுள்ளவராவார். இவரே தற்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆறுமுகம் ரமேஸ்

இரத்தினபுரி மாவட்டத்தில்

# மண்சரிவு அபாயத்துக்கு மத்தியில் 319 குடும்பங்கள் வசிப்பதாக தகவல்

## பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல மக்கள் மறுப்பு

### சப்ரகமுவ மாகாண மேலதிக செயலாளர் ஜீ.டீ. உதய குமாரி



(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தம் ஏற்படும் அவதானமான பிரதேசங்களாக அடையாளப்படுத்தப் பட்டுள்ள பிரதேசங்களில் அதிகமான மக்கள் வசித்து வருவதாக சப்ரகமுவ மாகாண மேலதிக செயலாளர் ஜீ.டீ. உதய குமாரி தெரிவித்துள்ளார்.

இயற்கை அனர்த்தங்களின் போது பொதுமக்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஊடகங்களை அறிவுறுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில், 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டுவரை இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண் சரிவு, கடுங்காற்று போன்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உதவிகள் செய்யப்பட்டுள்ளன.இவர்களில் ஆபத்தான பிரதேசங்களில் மேலும் 2557 பேர் வசித்து வந்தனர்.

இவர்களில் 1367 பேருக்கு பாதுகாப்பான வசிப்பிடங்கள் வழங்கப்பட்டுள்ளன.எனினும் இப்பகுதிளில் வசிக்கும் மேலும் 319 குடும்பங்களைச் சேர்ந்த 1673 பேர் இப்பிரதேசங்களிலிருந்து அரசாங்கம் வழங்கும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல மறுக்கின்றனர். இதனால் இவர்களது உயிர்களுக்கு அச்சுறுத்தல் நிலவுகிறது. அத்துடன் இவர்களது உயிர்களுக்கு அவர்களே பொறுப்பு என உறுதிப்படுத்தி ஒவ்வொருவரும் சத்தியக்கடதாசி சமர்ப்பித்துள்ளனர்.மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவது எமது பொறுப்பாக இருக்கின்ற போதிலும் தனிப்பட்ட இடங்களிலுள்ள மக்களை எம்மால் வெளியேற்ற சட்டம் இடம் கொடுப்பதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# இராகலை புனித ஜெபமாலை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா

ஆ.ரமேஸ்

கண்டி மறை மாவட்டத்துக்குட்பட்ட இராகலை நகரில் வரலாற்று சிறப்புமிக்க புனித ஜெபமாலை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா ஆலய பங்குதந்தை அருட்.பணி ஜெயநாத் பெரேரா தலைமையில் நேற்று (09) காலை விமரிசையாக கொண்டாடப்பட்டது.



கடந்த (02.10.2022) கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்த திருவிழாவின் கூட்டுத்திருப்பலி மறை. மாவட்ட குரு.முதல்வர் அருட்பணி எல்வின் பீட்டர் பெர்ணன்டோ பிள்ளை அடிகளாரினால் (09) காலை ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து திருவிழா ஊர்வலம் ஆரம்பிக்கப்பட்டு சப்பரத்தில் அன்னை ஜெபமாலை மாதா இராகலை நகரில் வலம் வந்து ஆசிர்வதித்தமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா பேரிடர் காரணமாக இவ் ஆலயத்தில் கடந்த இரு ஆண்டுகளாக வருடாந்த திருவிழா இடம்பெறவில்லை. இந்நிலையில் இவ்வருடம் மிக சிறப்பாக திருவிழா கொண்டாடப்பட்டது.

திருவிழாவை காண பல்லாயிரக்கணக்கான மக்கள் இராகலை நகருக்கு வருகை தந்திருந்தனர். இராகலை பொலிஸார் பாதுகாப்பை பலப்படுத்தியிருந்தனர்.

# இரத்ததான முகாம்

(பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)

தேசிய மீலாத் தினத்தை முன்னிட்டு கண்டி மடவளை பஸார் வை. எம். எம். ஏ. அமைப்பினால் 16 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் நேற்று (09) மடவளை சன்ஷைன் திருமண மண்டபத்தில் அமைப்பின் தலைவர் ஏ எல் எம் ரிஷாட் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் இஹ்ஸான் ஹமீத், முன்னாள் தலைவர் சஹீத் எம். ரிஸ்மி, மடவளை பஸார் வை. எம். எம். ஏ. அமைப்பின் பொதுச் செயலாளர் ஏ.எம். ஹசன் பிராஸ் கலந்துகொண்டனர்.

# முச்சக்கர வண்டி பாதையை விட்டு விலகி விபத்து



(கினிகத்தேனை தினகரன் நிருபர்)

ஹற்றன் ரொத்தஸ் கொலனியில் பாதையை விட்டு முச்சக்கர வண்டி ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் 8.9.2022 இடம் பெற்றுள்ளதாக அறியமுடிகின்றது. இரவுநேரத்தில் முச்சக்கர வண்டியை செலுத்தி வரும் போது குறுக்கே காட்டுப் பன்றி ஒன்று பாய்ந்தமையால் சாரதி தனது வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளதாக தெரியவருகின்றது. இதன் போது முச்சக்கர வண்டியில் இருவர் பயணம் செய்துள்ளனர். எவருக்கும் காயம் ஏற்படவில்லை.இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

திகதி 08.10.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4902
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,944,420.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 9 5 5 1 0 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,962,171.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 932
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,196,760.00
வெற்றி இலக்கினம் D வெற்றி இலக்கங்கள் 23 36 43 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 129,071,400.80

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3144
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,565,700.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 03 08 33 43
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,526,378.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 211
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,510,165.00
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 16 26 47 57
விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1357
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,792,320.00
வெற்றி இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 2 2 8 4 9 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,142,446.80

கோடி 27 + Mega Power மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1250
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,269,460.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 274,910,422.00
K 10 14 47 49 76
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

திகதி 07.10.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4901
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,325,030.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 4 0 6 9 8 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,428,737.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 931
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,300,960.00
வெற்றி இலக்கினம் G வெற்றி இலக்கங்கள் 07 31 32 39
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 128,917,030.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3143
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,619,920.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 15 18 40 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,265,949.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 210
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,966,820.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 06 16 36 48
விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,885,405.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1356
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,927,260.00
வெற்றி இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 5 1 4 7 9 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,093,970.80

கோடி 27 + Mega Power மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1249
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,471,080.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 274,692,854.00
I 02 07 16 43 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஒக்டோபர் 10
திங்கட்கிழமை

# மாந்தை கிழக்கு பகுதியில் காட்டுயானைகள் தொல்லை

(பரந்தன் குறுப் நிருபர்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு வடகாட்டுப்பகுதியில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக்காணப்படுவதாக விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் பெருமளவான பயிர்கள் அழிந்துவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு வடகாட்டுபகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் பயிர் செய்கை நிலங்கள் ஆகியவற்றுக்குள் தொடர்ச்சியாக காட்டுயானைகள் உட்புகுந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. மாலை 6.00 மணிக்கு பின்னர் ஊர்மனைகளுக்குள் புகும் காட்டுயானைகள் பயிர்களையும் ஏனைய மா, பலா, தென்னை, போன்ற மரங்களையும் அழித்து வருவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



கடந்த வெள்ளிக்கிழமை (2022.10.07)ஊர்மனைக்குள் புகுந்த காட்டுயானைகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளன. கடந்த காலங்களை விட யானைகளின் தாக்கம் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாகவும் தென்பகுதியிலிருந்து வளர்ப்பு யானைகளே இவ்வாறு இப்பகுதியில் இறக்கிவிடப்பட்டிருப்பதாகவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழா





கரவெட்டிதினகரன் நிருபர்

வரலாற்று சிறப்பு மிக்க துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் காலை ஏழு நாற்பத்தி ஐந்து மணியளவில் வசந்த மண்டபப் பூஜைகள் இடம் பெற்றதை தொடர்ந்து ஆஞ்சநேயர் முன்வர விநாயகப் பெருமான், மற்றும் வள்ளி தெய்வானையுடன் முருகப் பெருமானும் கூட வர வல்லிபுர ஆழ்வார் தேரேறி வலம்வந்தார். பக்தர்கள் ஆயிரக்கணக்கான தேங்காய்களை உடைத்தும், அங்கப்பிரதட்சணம் செய்தும், தமது நேர்த்திக்கடன்களை தீர்த்தத்துடன் தூக்குக்காவடி, பால் காவடி நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றினர்.

நேற்றையதினம் வல்லிபுர பெருமானுக்கு பிற்பகல் சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம்பெற்றது.

# த.க மூத்த உறுப்பினர் கட்சியிலிருந்து விலகல்

யாழ். விசேட நிருபர்



தமிழரசு கட்சியின் சகல பதவிகளிலிருந்தும் விலகுவதாக தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினரும், வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அரியகுட்டி பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

தனது பதவிவிலகல் கடிதம் தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

கோப்பாய் தொகுதி சம்பந்தமான விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே கட்சி தலைமை பீடத்திற்கு பல கடிதங்கள் எழுதி பல விடயங்கள் தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தேன்.

அதேவேளை கட்சியிலும் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பில் நான் பல கோரிக்கைகளை முன் வைத்து கடிதங்கள் அனுப்பியிருந்தேன்.

அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு உரிய பதில்கள் அனுப்பப்படவில்லை.

தமிழரசு கட்சியின் உபகுழுக்கள், மத்திய செயற்குழு கோப்பாய் தொகுதி கிளை குழுவின் இணைத் தலைவர் ஆகிய பதவிகளிலிருந்து நான் விலகுவதாக கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தி கட்சியின் சகல பொறுப்புகளிலிருந்தும் நான் விலகுகின்றேன் என்றார்.

# இராணுவத்தினரிடமிருந்து எமது காணிகளை மீட்பதற்கு உதவி புரியுங்கள்

## 35 வருடங்களாக அகதி முகாமில் வசிக்கின்றோம்

### யாழ்.பொலிகண்டி நலன்புரி மக்கள் ஆதங்கம்



மன்னார் குறுப் நிருபர்



இராணுவத்தினரிடமிருந்து எமது காணிகளை மீட்பதற்கு உதவி புரியுங்கள் என 35 வருடங்களாக அகதிகள் முகாமில் வசிக்கும் யாழ்ப்பாணம் பொலிகண்டி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் மெசிடோ நிறுவனத்தால் யாழ் பருத்தித்துறை பொலிகண்டி நலன்புரி நிலையங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை(8) மதியம் இடம்பெற்றது.

இதன்போது இலங்கையில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக பலாலிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து, கடந்த 35 வருடங்களுக்கு மேலாக யாழ். பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பொலிகண்டி கிராம சேவையாளர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சின்னவலை, பாலாவி, நிலவன், ஆகிய அகதி முகாமில் வசிக்கும் வருமானத்தை இழந்த 75 குடும்பங்களுக்கான உலருணவுப் பொருட்கள் இதன் போது வழங்கப்பட்டன. மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிராடோவினால் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போதே அகதிமுகாமில் வசிக்கும் மக்கள் தமது கோரிக்கைகளை முன் வைத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாக பலாலிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த நாங்கள் இங்கு தனியார் காணிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளோம். காணி உரிமையாளர்கள் தங்களது காணிகளை விட்டு விலகுமாறு வற்புறுத்துகின்றனர். எங்களது சொந்தக்காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து பலன் தரும் மரக்கன்றுகளை உருவாக்கி அனுபவித்து வருகின்றனர். ஆனால் நாங்கள் அநாதைகளாக ஓலைக் குடிசைகளில் மழை வெள்ளத்திற்குள் சுகாதார சீர்கேடுகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறோம்.

எனவே, இலங்கை ஜனாதிபதி இவ்விடயத்தில் தலையீட்டு இராணுவத்தினரிடமிருந்து எமது காணிகளை மீட்டு மீள் குடியேற்றத்துக்கு உதவி செய்ய வேண்டும் என பொலிகண்டி அகதிகள் முகாமில் வசிக்கும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இலக்கண நூல் வெளியீட்டு விழா



தென்மராட்சியின் புகழ்பூத்த தமிழாசிரியர் அ.க. தர்மராஜா எழுதிய தீந்தமிழ் இலக்கணம் என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெற்றது.

தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு தெஹிவளை தமிழ் மகா வித்தியாலய அதிபர் சோம.முரளி தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் வாழ்த்துரைகளை யா/டிறிபேர்க் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர்களான மு.நாகேந்திரராஜா, க. அருந்தவபாலன் மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந. சர்வேஸ்வரன், பலாலி ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலை அதிபர் கு. சதாசிவமூர்த்தி, தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் வே. உதயகுமார், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறை முதுநிலை விரிவுரையாளர் க. அருந்தாகரன் ஆகியோர் ஆற்றினர்.

நூலின் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதிமுதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும் ஆய்வுரையை தென்மராட்சி கல்வி வலய தொழில்வழிகாட்டல் அலுவலர் க.க. ஈஸ்வரனும் ஆற்றினர். நூலின் முதற்பிரதியை செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் வெளியிட்டு வைக்க அதிபர் சோம. முரளி பெற்றுக்கொண்டார். தமிழாசிரியர் தர்மராஜாவிற்கு யாழ். ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம் சார்பில் அதன் பணிப்பாளர் கலாநிதி பா. தனபாலன் 'தர்மத்தமிழழகு' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தார். இந்நிகழ்வை இலக்கிய அணித் தலைவர் சோ. கோகுலன் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் நூலாசிரியரின் மாணவர்கள் மற்றும் உடன் கற்பித்த ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் அளித்த சேவை பாராட்டு விழா



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராகச் சேவையாற்றி இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்குப் பதவி உயர்வு பெற்றுள்ள அ. உமாமகேஸ்வரனுக்கு வடக்கு மாகாண இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் சேவை பாராட்டு விழா நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் காலை நாவலர் வீதியில் அமைந்துள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வடபிராந்தியப் பணிமனையில் பிரகதீஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இவர் வடக்கு மாகாண அமைச்சின் உயர் பதவியைப் பெற்றுக்கொள்வதற்காக தெரிவாகியுள்ளார்.

இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், யாழ். பல்கலைக் கழக இந்து கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர்களான சி. ரமணராஜா, தி. செல்வமனோகரன் இந்துசாதனம் பத்திராதிபர் தியாக. மயூரகிரிக் குருக்கள் ஆகியோர் வாழ்த்துரைகளையும் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பராட்டுரைகளையும் வழங்கினர். உமாமகேஸ்வரன் இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளராகச் சேவையாற்றிய எட்டு ஆண்டுகளில் பிரதேச வேறுபாடுகள் இன்றி அவர் ஆற்றிய பன்முகப்பட்ட பணிகள் பாராட்டத்தக்கவை என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்து விவகார செயற்பாடுகளில் அவர் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலம் பொற்காலம் எனவும் பாராட்டினர்.

# கச்சாய் வடக்கில் இளைஞன் சடலமாக மீட்பு

சாவகச்சேரி விஷேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் வடக்கு பகுதியில் இளைஞன் ஒருவர் சடலமாக நேற்று 09/10 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மீட்கப்பட்டுள்ளார்.

கச்சாய் வடக்கைச் சேர்ந்த 28 வயதான இளைஞனே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

அதிகாலை வேளையில் அவரது வீட்டு முற்றத்திலிருந்து இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# கௌரவமான அரசியல் தீர்வை கோரும் கவனயீர்ப்பு போராட்டத்தின் 70ஆவது நாள்

மன்னார் குறுப் நிருபர்)

வடக்குகிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 70 ஆவது நாள்கவனயீர்ப்பு போராட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்தின்பூநகரி முழங்காவில் கிராமத்தில் இடம்பெற்றது.

100 நாள் செயல் முனைவின் 70ஆம் நாள் போராட்டத்தில் முழங்காவிலுள்ள பெண்கள், ஆண்கள்,இளைஞர்கள், மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் எனபலர்கலந்துகொண்டனர்.

'வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்' ' நாங்கள் நாட்டை துண்டாடவோ தனியரசோ கேட்கவில்லை.



இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல்தீர்வையே கேட்கிறோம்''

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் ' ' 13ஆவது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப்பரவலாக்கத்துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்' எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மததலங்களின் புனிதத்தை கொச்சைப்படுத்தாதே, இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுபீகரிக்காதே என பல கோரிக்கைகளை இதன்போது முன்வைத்தனர்.

# வல்லிபுரத்தில் 15 பவுண் தங்க நகைகள் திருட்டு

யாழ். விசேட நிருபர்

வரலாற்று சிறப்புமிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழாவில் பங்கேற்ற அடியவர்களிடம் 15 பவுண் தங்கநகைகள் திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

வரலாற்று சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

தேர்த்திருவிழாவின் போது கிடைக்கப்பெற்ற 7 முறைப்பாடுகளின் அடிப்படையில் 15 பவுண் தங்கநகைகள் திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கின் குரல்



# சாய்ந்தமருதில் கைவிடப்பட்ட சிறுவர் பூங்கா



நாவிதன்வெளி தினகரன் நிருபர்

சாய்ந்தமருது கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவானது. முன்னாள் மாநகர சபை மேயர் சிராஸ் மீராசாஹிப் மேயராக இருந்த காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஒன்றாகும். மிகவும் நேர்த்தியான முறையிலும் பல மில்லியன் ரூபா செலவிலும் நிர்மாணிக்கப்பட்ட இப்பூங்காவானது தற்போது கவனிப் பாரற்று கிடக்கின்றது. இந்தப் பூங்காவானது சாய்ந்தமருது கடற்கரை ஓரத்தில் அமைந்திருக்கின்ற போதிலும் இது இப்பிரதேசத்தில் சிறுவர்கள் விளையாட கூடியதான பாரிய பூங்காவாக காணப்படுகின்றது. ஆனால் சிறுவர் பூங்கா உடைக்கப்பட்டு, தகர்க்கப்பட்டு விஷமிகளால் சேதப்படுத்தப்பட்டு காணப்படுகிறது. இதனால் சிறுவர்கள் விளையாடுவதற்கு உகந்ததாக இல்லாமல் இருக்கும் இப்பூங்கா சிறுவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த கூடியதாக காணப்படுவது மிகவும் வேதனை அளிக்கின்றது.





பல மில்லியன் ரூபா செலவில் மிகவும் விசாலமான முறையில் கட்டப்பட்ட இந்த சிறுவர் பூங்காவில் இருப்பதற்கு ஒரு ஆசனம் கூட இல்லாத நிலையில் உடைக்கப்பட்டு காணப்படுகின்றன. பூங்காவில் அமைந்துள்ள கொங்கிறிட் ஆசனங்கள் உடைக்கப்படுள்ளது.

சிறுவர் பூங்காவுக்கு முன்னால் பாதுகாப்பு படையினரின் முகாம் உள்ளது. அதை தொடர்ந்து சிறுவர் பூங்காவிலிருந்து 500 மீட்டர்கள் தூரத்தில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. இவ்வாறு இருக்கும்போது இப்பூங்கா யாரால் உடைக்கப்படுகின்றது.

இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் கல்முனை மாநகர சபை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இது நிச்சயமாக இது எந்த நோக்கங்களுக்காக கைவிடப்பட்டது என்பது தெரியவில்லை.

# பாலமுனையில் இரண்டு வீடுகளை உடைத்து சேதப்படுத்திய காட்டுயானைகள்



பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்

பாலமுனை குடியிருப்பு பிரதேசங்களுக்குள் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகள் இரண்டு வீடுகளை உடைத்து சேதப்படுத்தியதுடன் வீட்டுத்தோட்ட பயிர்களையும் அழித்து துவம்சம் செய்துள்ளன.



இதன் போது வீட்டில் உறக்கத்தில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

பாலமுனை பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லையினால் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருவதாக அங்கு வாழ்ந்து வருகின்ற மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாலமுனை பிரதேசத்தில் மக்கள் குடியிருப்பு பிரதேசங்களுக்குள் அடிக்கடி வரும் யானைகளினால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்ற அம்மக்கள் இரவு நேரங்களில் தமது வீடுகளில் நிம்மதியாக உண்பதற்கும் உறங்குவதற்கும் முடியாதுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

பாலமுனை ஹிறாநகர் மீள்குடியேற்ற கிராம மக்கள் மற்றும் பாலமுனை வயல் பிரதேசங்களை அண்டிவாழ்ந்து வருகின்ற மக்கள் தொடர்ந்து காட்டு யானைகளின் தொல்லையினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அங்கு வாழும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பயங்கரவாத தடைச் சட்டத்தை நிறுத்தக் கோரி பேரணி

மட்டக்களப்பு விசேட நிருபர்



பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அனைத்து வன்முறைச் சட்டங்களையும் நிறுத்துதல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு நகரில் பேரணியொன்று நேற்று முன்தினம் (08) நடைபெற்றது. அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் தொழில் சங்க மக்கள் ஒன்றியம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இப்போராட்டப் பவனி மட்டக்களப்பு காந்திப் பூங்காவிலிருந்து பார் வீதி, புதிய கல்முனை வீதி வழியாக கல்லடிப் பாலம், விளையாட்டு மைதானம் வரை சென்றடைந்ததும் கூட்டம் ஆரம்பமானது. மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், மாநகர முதல்வர் தி.சரவணபவன் உள்ளிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், தொழில் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## உலமாக்கள் கௌரவிப்பு



திராய்க்கேணி தினகரன் நிருபர்

ஜம்மியத்துல் உலமாவினால் பிரதேச உலமாக்கள் கௌரவிப்பு நிகழ்வு உலமா சபையின் தலைவர் மௌலவி பி.டி. அபுல் ஹஸன் தலைமையில் அட்டாளைச்சேனை ஜும்ஆ பள்ளிவாசல் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் செயலாளர் அல்ஹாபில் எம்.அர்கம் நுரானி கலந்து சிறப்பித்தார். இதில் 60 வயதிற்கு மேற்பட்ட உலமாக்கள் கௌரவிக்கப்பட்டதுடன் மரணித்த உலமாக்களும் நினைவு கூரப்பட்டனர். உலமாக்கள் பற்றிய சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# அம்பாறை சேனநாயக்க சமுத்திரத்தில் ஏர்பூட்டு விழா

ஒலுவில் விசேட நிருபர்)

2022/2023ம் ஆண்டு பெரும் போக நெற் செய்கைக்கான ஏர்பூட்டு விழா அம்பாறை சேனநாயக்கா சமுத்திர நீர்ப்பாசன குளத்தில் சனிக்கிழமை (08) அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் தலைமையில் நடைபெற்றது.

மூவின மக்களும் ஒன்றிணைந்து இலங்கை வாழ் மக்களுக்காகவும், விவசாயச் செய்கை மேற்கொள்வதற்காக மும்மத விசேட பிரார்த்தனைகளும், மதவழிபாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டதாக, அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட விவசாயிகள் நாட்டின் தேசிய உற்பத்திக்கு பெரும் பங்களிப்புச் செய்து வருகின்றார்கள். 16 மாவட்டங்களில் நெல் உற்பத்தி செய்கை பண்ணப்படுகின்ற போதிலும் அம்பாறை மாவட்டம் 25 வீதமான நெல் உற்பத்தியை ஈட்டி தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு வழங்கி வருகின்றது.

அம்பாறை சேனநாயக்கா சமுத்திரத்தில் தற்போது 01 இலட்சத்து 14 ஆயிரம் ஏக்கர் சதுர அடி நீர் மட்டம் காணப்படுகின்ற போதிலும் மழையை நம்பி அனைத்துப் பிரதேசங்களிலும் நெற் செய்கையை மேற்கொள்ள முடியுமென தெரிவித்தார்.

# சம்மாந்துறை ஹோலிகுறோஸ் மகா வித்தியாலய அதிபர்; சிறந்த அதிபராக தெரிவு




ஒலுவில் விசேட நிருபர்)

சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட ஹோலிகுறோஸ் மகா வித்தியாலயத்தின் அதிபர் அருட்சகோதரி எம். சிறியபுஷ்பம் சிறந்த அதிபராக தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்பட்டுள்ளார்.

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வியாழக்கிழமை (06) கல்வி அமைச்சில், கல்வி அமைச்சர் டாக்டர் ஏ.டி. சுசில் பிரேமச்சந்திர தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தொற்றுநோய் கால கட்டத்தில் சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை தொடர்ச்சியாக நடைமுறைப் படுத்தியதன் காரணத்தால் அவரது சேவையைப் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அதிகஷ்ட பிரதேச, பொதுப் போக்குவரத்து வசதிகள் அற்ற ஏறக்குறைய 200 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட கத்தோலிக்க பாரம்பரியமான 1சீ பாடசாலையாகும்.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் அருட்சகோதரி எம். சிறியபுஸ்பம் இப்பாடசாலையின் அதிபராக கடமையாற்றுகின்றார்.

2020ம் ஆண்டு இடம்பெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சம்மாந்துறை வலயத்தில் அதிகூடிய புள்ளியான 191ஐ இப்பாடசாலையின் மாணவன் ஜொனி பிரபாகரன் ஜொகிர்தன் பெற்றிருந்தார்.

அத்துடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாணவன் சகாயதேவன் அனோஜன் முதல் தடவையாக 3ஏ சித்திகளைப் பெற்றதுடன் 03 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.



அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் மாவட்டப் பணிப்பாளர்களுக்கு உத்தியோகபூர்வமாக நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட் தலைமையில் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (08) மதியம் நடைபெற்ற இரண்டாவது நிருவாகக் கூட்டத்தில் இந்நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்ட போது...
(படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

# பொத்துவில் செங்காமம் அல்-மினா வித்தியாலயத்தில் முப்பெரும் விழா

பாலமுனை விசேட நிருபர்



சர்வதேச சிறுவர் தினம், சர்வதேச ஆசிரியர் தினம் மற்றும் முதியோர் தினம் ஆகியவற்றை சிறப்பிக்கும் வகையில் பொத்துவில் செங்காமம் அல்மினா வித்தியாலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சிட்டுக்களை கொண்டாடுவோம் மாபெரும் முப்பெரும் விழா அண்மையில் (06) இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஏ.தாஜஹான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.எம்.பிர்னாஸ் பிரதம அதிதியாகவும், பொத்துவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ.எம்.கே.டீ.சேனவிரத்தன, பிரதேச சபை உறுப்பினர் ஆதம் சலீம் உள்ளிட்ட பலர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

செங்காமம் அல்மினா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள், பாடசாலைச் சமூகத்தினர், சிரேஷ்ட பிரஜைகள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் இந்நிகழ்வின்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

துயர் துடைப்போம் அமைப்பின் ஏற்பாட்டில் சிறுவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் என பல்வேறு நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சித்தாண்டி இளஞ்சைவ மாணவ மன்ற பொன்விழா விருது வழங்கல்

பாசிக்குடா நிருபர்

சித்தாண்டி இளஞ்சைவ மாணவ மன்ற பொன்விழா விருது வழங்கல் நிகழ்வு நேற்றுக் காலை இளஞ்சைவ மாணவ மன்ற தலைவர் வி. உதயகுமார் தலைமையில் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பொன் விழாவின் ஆரம்ப நிகழ்வில் வரலாற்று சிறப்பு பெற்ற சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயிலில் இருந்து பூஜைகள் ஆரம்பமானது.

நந்திக் கொடி அத்துடன் இளஞ்சைவ மாணவமன்ற கொடிகள் புடைசூழ தேவார முதலிகளின் திருவுருவப்படங்கள் தாங்கி திருமுறைகள் ஓத சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோவிலில் இருந்து முச்சந்தி பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்ததும் முச்சந்திப் பிள்ளையாருக்கு விஷேட பூசை இடம்பெற்றது.

பொன் விழாவை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டது.

# கஞ்சிகுடிச்சாறு மக்களுக்கு காணி ஆவணங்கள் வழங்கல்

காரைதீவு குறூப் நிருபர்

திருக்கோவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு கிராமத்தை சேர்ந்த 75 பேருக்கு காணி ஆவணப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



இந் நிகழ்வு, திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (07) திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு கிராமத்தில் காணி ஆவணங்கள் இல்லாமல் குடியிருக்கும் மற்றும் பயிர் செய்யும் மக்களுக்கு இவ் காணி ஆவணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் , திருக்கோவில் பிரதேச செயலக சிரேஷ்ட நிருவாக உத்தியோத்தர் ரி. மோகனராஜன், காணி உத்தியோகத்தர்களான பி.கோவிந்தசாமி, திருமதி.ரி.லோஜினி, திருக்கோவில் பிரதேச செயலக நிருவாக பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோத்தர் ரி.சசிந்திரன், திருக்கோவில் பிரதேச செயலகத்தின் காணிப் பிரிவு உத்தியோத்தர்கள், கிராம சேவையாளர்கள் கிராம சங்க உறுப்பினர்கள் பொதுமக்கள் ஆகியோர் இன் நிகழ்வில் கலந்து கொண்டு தெரிவு செயப்பட்ட மக்களுக்கு காணி ஆவணப்பத்திரங்கள் வழங்கி வைத்தனர்.

## காத்தான்குடியில் இன ஐக்கிய மீலாதுன் நபி விழா

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடியில் இன ஐக்கிய மீலாதுன் நபி விழா (09) நேற்று காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது.

ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான ஆலீம்கள் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மௌலவி எச்.எம்.ஸாஜஹான் தலைமையில் இந்த இன ஐக்கிய மீலாதுன் நபி விழா நடைபெற்றது. மீலாதுன் நபி தினத்தையொட்டி நடைபெற்ற இவ் விழாவின் ஆரம்ப நிகழ்வாக காத்தான்குடி பிரதான வீதியில் மீலாத் ஊர்வலமொன்று இடம் பெற்றது.





தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் அனுசரணையில் 'நேர முகாமைத்துவம்' தொடர்பான கருத்தரங்கு வெள்ளிக்கிழமை வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயத்தில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் திருமதி அருந்ததி இராஜவிஜயன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் தினகரன்,வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஆசிரியர் செந்தில் வேலவர்,பிரதம துணை ஆசிரியர் சிறிகாந்த்,விளம்பர முகாமையாளர் பிரசாத்,வளவாளர் மக்ஸுட் மற்றும் சிறப்பதிதியாக லயன்ஸ் கொழும்பு வட்டாரத் தலைவர் சிவசுப்பிரமணியம் மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.கருந்தரங்களில் 400க்கும் மேற்பட்ட மாணவிகளும், ஆசிரியர்களும் பங்கு பற்றினர்.

படங்கள்: அஷ்ரப் சமட்








# விலை மனுக்களுக்கான அழைப்பு (IFB)

## வலயக் கல்விப் பணிமனை - மட்டக்களப்பு மேற்கு

1. கீழே தரப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம் கிழக்கு மாகாணம் மாகாண கல்வித் திணைக்களத்தின் GEM திட்டத்தின் கீழ் தேசிய போட்டி கேள்வி முறைமையின் ஊடாக கீழக்காணும் வேலைகளை மேற்கொள்வதற்கு தகைமையுள்ள நிர்மாண ஒப்பந்தக் காரர்களிடமிருந்து மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிமனை, வலயக் கல்விப் பணிப்பாளரின் பெறுகைக் குழுத் தலைவரால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| பொதி இல. | பாடசாலையின் பெயர் மற்றும் வேலையின் விபரம் | விலைமனுவின் தேவைப்படும் தரம் | விலைமனுப் பிணை (ரூ.) | பொறியியலாளர் மதிப்பீடு (ரூ.) மில். | முடிவடையும் கால எல்லை (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| GEM/ EP/W/2022/ MLP/01/09-01 | BT/BW/ இலுப்படிச் சேனை அம்பாள் வித்தியாலயத்தில் வகுப்பறை கட்டிடதுடன் 15.50m x9.60m இரண்டு மாடிகள்) ஆய்வுகூடத்தை நிர்மாணித்தல் | C6/C5 | 142,000.00 | 14.10. | 90 |

02. விலைமனுக்கள் தேசிய போட்டி கேள்வி முறைமையூடாக நடத்தப்படும்.

03. ஒப்பந்தங்களை வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனு தாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெறாது அல்லது தவறிழைக்காது இருத்தல் வேண்டும். அத்துடன் விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனு முறையின் ஊடாக நடத்தப்படும் (NCB) இப் பெறுகையின் கீழான செயற்பாடுகளுக்கான வேலையின் மதிப்பிடப்பட்ட பெறுமதி (VAT மற்றும் ஏனைய வரிகள் நீங்களாக) 50 மில். இற்கு குறைவாக இருப்பதால் பிராந்திய முன்னுரிமை மற்றும் பொது நீதி சுற்றுநிருபம் 04/2016 (iii) இல் குறிப்பிட்டுள்ள பிரகாரம் CIDA தர முன்னுரிமை வழங்கப்படும்.

04. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கான தேவைப்படும் தகைமைகள் பின்வருமாறு

| தொழில்நுட்ப தேவைப்பாடுகள் | நிதி தேவைப்பாடுகள் | சட்ட தேவைப்பாடுகள் |
|---|---|---|
| தகைமை மற்றும் அனுபவத்துடனான குறைந்த பட்ச அலுவலர்கள்<br>1. தொழில்நுட்ப அலுவலர் -01 தொழில் நுட்பவியல் (NDT Civil) தேசிய டிப்ளோமா அல்லது சமமான தகைமையுடன் 03 வருட அனுபவம் அல்லது தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் (NCT - Civil) அத்துடன் 05 வருட அனுபவம் (பகுதி நேரம்) | மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டட்ட வங்கியில் இருந்து விலைமனுத் தொகையின் 20% (2.80 மில்லியன்) இற்கான கடன் வசதிகளை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>● கடந்த 5 ஆண்டுகளில் சராசரி வருடாந்த புரள்வு 21.10 மில்லினுக்கு குறையாது இருத்தல்<br>● விலைமனு தொகையின் 70% இற்கு குறையாமல் கடந்த 3 ஆண்டுகளில் சமமான தன்மையுடைய குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தையேனும் விலைமனுதாரர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். | ● விலைமனுதாரர் ஓர் பதிவு செய்யப்பட்ட சட்ட ரீதியான தரத்தில் இருத்தல் வேண்டும். (மொத்த உரிமையாளர் பங்குதாரர், கம்பனி போன்றன)<br>● பொது நிதித் திணைக்களம் அல்லது எந்த ஏனைய முகவர்களினாலும் விலைமனுதாரர் ஓர் அபகீர்த்தியானோர் பட்டியல் இடப்பட்ட /தவறிழைக்கப்பட்ட ஒப்பந்தக்காரராக பிரகடனப்படுத்தப்படாது இருத்தல் வேண்டும். |

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணியகம் பாடசாலை வேலைக் கிளை மாவட்ட பொறியியலாளர் (பாடசாலை வேலைகள்) இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

6. ஓர் மீளிளிக்கப்படாத கட்டணம் ரூ. 4,000.00 செலுத்துவதன் பேரில் 2022.10.10 முதல் 2022.10.26 வரை மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிமனைக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வ முள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்துதல் காசாக மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் கணக்கியல் கிளையில் இடம் பெறல் வேண்டும்.

7. விலைமனுக்கள் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு நகல்களுடன் விநியோகிக்கப்படல் வேண்டும். அல்லது 2022 ஒக்டோபர் 27ம் திகதி 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்தல் வேண்டும். தாமதமான விலை மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் மூடப்பட்ட பின் உடனடியாக திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட இறுதித் தினத்திற்குப் பின்னர் 77 நாட்கள் வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

9. எல்லா விலைமனுவுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட ஓர் நம்பகமான வங்கியிலிருந்து அல்லது நிர்மாண உத்தரவாத நிதியம் (VGF) இலிருந்து ஓர் விலைமனுப் பிணையை இணைத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது 105 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். (10.12.2022)

10. எல்லா விலைமனுக்களுக்கான விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2022.10.20 மு.ப. 10.00 மணிக்கு மட்டக்களப்பு மேற்கு வலய கல்விப் பணிமனையில் நடைபெறும்.

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**வலயக் கல்விப் பணிமனை,**
**மட்டக்களப்பு மேற்கு.**

திகதி: 10.10.2022



ஜாஎல நகர சபை

# 2023 ஆம் ஆண்டிற்காக வரிக்கட்டண வரி விதித்தல்

1939 இல 61 நகர சபை சட்டத்தின் 166 பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய மாநகர சபை சட்டத்தின் 238(1) பிரிவின் விதிமுறைகளின் பிரகாரம் ஜாஎல நகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2023 ஆண்டுடன் சம்பந்தப்பட்ட வரிக்கட்டண வரியை தீர்மானிக்கும் முகமாக ஜாஎல நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள் கட்டிடங்கள், காணிகள், வீட்டு மனைகளின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு 2023 ஆம் ஆண்டில் ஏற்கப்பட்டு விதிப்பதற்கு 2022 செப்டம்பர் 16ம் திகதி நடைபெற்ற மகா சபையின் இல (ஈ) 01-10-(ஈ) 01-11 மற்றும் (ஈ) 01-12 இன் கீழ் சபையில் நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

1939 இல 61 நகர சபை சட்டத்தின் 166ஆம் பிரிவின் கீழ் ஜாஎல நகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள வீடுகள், கட்டிடங்கள், காணிகள், வீட்டு மனைகளின் வருடாந்த பெறுமதிக்காக 2016 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு 2023ஆம் ஆண்டிற்காக மதிப்பீடாக அங்கீகரிக்கப்படல் வேண்டும் எனவும், 1939 இல.61 நகர சபை சட்டத்தின் 160(1) மற்றும் 160(1அ) பிரிவின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மேற்படி மதிப்பீட்டின் கீழ் அச் சொத்துக்காக மேற்படி வருடாந்த பெறுமதியில் குடியிருப்பு சொத்துக்கள் சார்பாக மூன்று வீதம் (3%) 2ம் வர்த்தக சொத்துக்காக பத்து வீத (10%) 2ம் வருடாந்த வரிக் கட்டளை வரியாக தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும்

2023ம் ஆண்டிற்குள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் ஒவ்வொரு காலாண்டு சார்பாகவும் அதன் முன்னால் காணப்படும் தினத்திற்கு முன் அப்போது தீர்மானிக்கப்படும் வருடாந்த வரிக்கட்டண வரி நகர சபை நிதிக்கு செலுத்த வேண்டியது எனவும், அவ்வாறு முழுமையாக வருடாந்த வரிக்கட்டண வரி (நிலுவை இல்லாத போது) 2023ம் ஆண்டில் ஜனவரி 31ம் திகதி அல்லது அதற்கு முன்பு செலுத்துவதாயின் வருடாந்த வரிக் கட்டணத்தின் அளவில் பத்து வீத (10%) கழிவும், அதன் அட்டவணையில் ஒவ்வொரு காலாண்டிற்கு முன்னால் மூன்றாம் நிரலில் காணப்படும் தினத்திற்கு முன்பு குறித்த வரிக்கட்டண வரித்தொகையை நகர சபை நிதிக்கு செலுத்துவதாயின் ஒரு காலாண்டிற்கு குறித்த தொகையின் ஐந்து வீத (5%) கழிவையும் நகர சபையினால் வழங்கப்பட வேண்டும் எனவும் 2022 ஆண்டுடன் சம்பந்தப்பட்ட வரிக்கட்டண சலுகை அட்டவணை II நிரலில் உள்ளவாறு குறித்த காலாண்டு இத்திகதி அல்லது அதற்கு முன்பு செலுத்தி முடிக்கவில்லையெனில் குடியிருப்புச் சொத்துக்களுக்கு 15% இற்கு அதிக கட்டணமும் குடியிருப்பு அல்லாத சொத்துக்களுக்கு 20% அதிகட்டணமும் வரிக்கட்டண வரிக்கு சேர்க்கப்படல் வேண்டும் என்பதையும் இத்தால் அறிவிக்கிறேன்

**மேற்படி அட்டவணை**

| Iம் நிரலில் காலாண்டு | II ம் நிரலில் செலுத்த வேண்டிய தினம் | III ம் நிரலில் 5% கழிவுக்காக தீர்மானிக்கப்படும் இறுதித்திகதி |
|---|---|---|
| முதலாம் காலாண்டு | 2023.03.31 | 2023.01.31 |
| இரண்டாம் காலாண்டு | 2023.06.30 | 2023.04.30 |
| மூன்றாம் காலாண்டு | 2023.09.30 | 2023.07.31 |
| நான்காம் காலாண்டு | 2023.12.31 | 2023.10.31 |

**எம்.சம்மிக்க டயஸ்**
**தலைவர்**
**நகர சபை, ஜாஎல**

**2022 செப்டெம்பர் 29ம் திகதி**
**ஜாஎல நகரசபை அலுவலகத்தில்**

# மட்டக்களப்பு ஹற்றன் நஷனல் வங்கியினால் கர்ப்பிணித் தாய்மாருக்கு போசாக்கு உணவுகள்

அரச வைத்தியசாலை கிளினிக் செல்லும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் கர்ப்பிணிப் பெண்களின் போசாக்கினை மேம்படுத்தும் நோக்கோடு போசாக்குமிக்க உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு ஹற்றன் நஷனல் வங்கியினர் தாமாகவே முன்வந்து 'உங்களுக்காகவே நாம்' எனும் தேசிய போசாக்குத் திட்டத்தினூடாக தலா ரூபா 5,000 பெறுமதியான போசாக்கு உணவுப் பொதி மற்றும் ரூபா 1,000 பெறுமதியான பண வவுச்சர் ஆகியவற்றை 25 பேருக்கு வழங்கி வைத்தனர். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன. வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில், சுகாதாரத் திணைக்களத்தில் ஆலோசனைக்கமைய இத்திட்டமானது இலங்கையின் 10 பிரதேசங்களில் நடைபெற்று வருகிறது. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோணமலை, மூதூர், மட்டக்களப்பு பிரதேசங்களில் 100 பேருக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்ட மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் உரையாற்றுகையில், "பெண்கள் கருவுற்ற காலத்திலிருந்து குழந்தையைப் பிரசவிக்கும் வரையில் ஊட்டச் சத்துக்கள நிறைந்த உணவுகளை உட்கொள்ளல் வேண்டும். கர்ப்பம் தரித்த காலத்திலிருந்து 3 மாதம் வரையும் அதே குழந்தையை பிரசவித்து குழந்தைக்கு 5 வயது வரையிலும் சிறுவர்களின் நரம்பு மண்டலம் மற்றும் மூளை வளர்ச்சிக்கு சமச்சீரான போசாக்கு மற்றும் ஊட்டச் சத்துக்கள் அடங்கிய உணவுப் பொருட்களை வழங்கப்பட வேண்டும்.

ஏனெனில் இக்காலத்தில்தான் குழந்தையின் உடல் மற்றும் உள ஆரோக்கியம் மேம்படுத்தப்பட வேண்டிய காலமாகும்" எனத் தெரிவித்தார்.

மண்முனை வடக்கு பிரதேசத்தில் உள்ள 48 கிராம சேவகர் பிரிவுகளிலுமிருந்து வாழ்வாதார வசதியற்ற கர்ப்பிணிப் பெண்கள் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மூலம் தெரிவு செய்யப்பட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இடர்காலங்களில் ஹற்றன் நஷனல் வங்கி தனது சமூகநல நோக்கில் கர்ப்பிணிப் பெண்களின் நலன்களில் அக்கறை கொண்டு செயற்படுவது மெச்சத்தக்கது என்றும் அவர் தெரிவித்தார். ஹட்டன் நஷனல் வங்கியின் விற்பனைப் பிரிவு பிராந்திய முகாமையாளர் என்.கேதீஸ்வரன், கடன் பிரிவின் தலைமை முகாமையாளர் ஜே.சத்தியசீலன், மட்டக்களப்பு கிளையின் முகாமையாளர் ஏ.நிர்மலகுமார், சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரப் பிரிவு வைத்தியர் தர்சினி முருகுப்பிள்ளை, ஆகியோர் கலந்து கொண்டு போசாக்கு உணவுப் பொதிகளையும பண வவுச்சர்களையும் வழங்கி வைத்தனர்.

**– சிவம் பாக்கியநாதன்**
மட்டக்களப்பு விஷேட நிருபர்







## அரச ஊழியர் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுகோள்



இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவாக மக்கள் அன்றாடம் வாழ்க்கைச் சுமையை எதிர்நோக்கியுள்ளனர் என்று அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க தலைவர் கே. முஹம்மட் கபீர் தெரிவித்தார்.

அவர் தெரிவிக்கையில், தொடர்ச்சியான விலையேற்றத்தால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய மாதாந்த சம்பளமானது வாழ்க்கைச் செலவுக்கு போதாமல் உள்ளது என்று குறிப்பிட்டார்.

கடந்த மாதம் முன்வைக்கப்பட்ட நாட்டின் இடைக்கால வரவுசெலவு திட்டத்தில் கூட அரச ஊழியர்களுக்கு இடைக்கால கொடுப்பனவு முன்வைக்கப்படவில்லை. எனவே அரசாங்கம் இதனை உடனடியாக கவனத்தில் எடுத்து அரச ஊழியர்களின் சம்பளத்தை நாட்டின் பணவீக்கத்தை சமாளிக்க கூடிய அளவுக்கு உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இது விடயமாக ஜனாதிபதி, பிரதமர், பொதுநிர்வாக அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் சம்பள ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**– எம். எப். நவாஸ்**
(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

## யாழிலில் சிலைகள் திறப்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சுவாமி விபுலானந்தர் மற்றும் பாரதியாரின் திருவுருவச்சிலை நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

சுவாமி விபுலானந்தரின் திருவுருவச் சிலை தென் கையிலை ஆதின குருமுதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனால் திறந்து வைக்கப்பட்டது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாருடைய திருவுருவ சிலையினை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா மற்றும் யாழ்.மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி றெமிடியசினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தென் கையிலை ஆதின குரு முதல்வர் தவத்திரு அகத்தியார் அடிகளார், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா, யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், யாழ் .மாநகர ஆணையாளர் ஜெயசீலன் ,மாநகர சபை உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## 16 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்; சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிப்பு

**யாழ்.விசேட நிருபர்**

சிறுமியை பாலியல்துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வயோதிபரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலையில் 16 வயது சிறுமியொருவரை முதியவர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி கர்ப்பமாகியுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கடந்த வாரம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கோப்பாய் பொலிஸாருக்கும் அறிவித்திருந்தது.

இதனையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார் வயோதிபரை கைது செய்தனர்.

அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமியிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் அவரை நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

சிறுமியை தாயாரின் பாதுகாப்பில் வைத்திருக்க அனுமதியளித்து நீதிமன்றம் கட்டளையிட்டது.

இந்நிலையில் 16 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் முதியவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நளினி சுபாகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பிணை விண்ணப்பத்தை முன்வைத்தார்.

எனினும் பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிமன்றம் , சந்தேக நபரை இன்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

**நீர்ப்பாசன அமைச்சு**

## பதவி வெற்றிடங்கள்

**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு திட்டம் (MWSIP)**

**நிதியிடல் வளம்: ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)**

2024 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பாக்கப்படும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் சலுகை கடன் வசதியுடன் நீர்ப்பாசன அமைச்சினால் அமுல்நடாத்தப்படும் மகாவலி பலநோக்கு அபிவிருத்தி திட்டத்தின் பாரிய திட்டத்தின் ஒரு பகுதியே மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு திட்டமாகும்.

**விண்ணப்பங்கள்:**

ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிக்காக இலங்கையின் பொருத்தமான தகைமையுடைய பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்களின் சுயதரவு மற்றும் கல்விசார், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் போன்ற அடிப்படை தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர் மற்றும் தொடர்பு விபரங்கள் ஆகியவற்றை பதிவுத் தபாலில் 2022.10.25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரியான திட்டப் பணிப்பாளர், மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு திட்டம், இல. 493-1/**1, T.B.** ஜாயா மாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை தயவு செய்து குறிப்பிடவும். மேலதிகமாக, விண்ணப்பதாரிகள் அவர்களின் மேற்குறிப்பிட்ட அதே விண்ணப்பத்தின் முற்பிரதியொன்றை pdadbproject@gmail.com என்ற முகவரிக்கும் hr.mwsip@gmail.com என்ற முகவரிக்கு அதன் பிரதியையும் அனுப்புவதுடன் மின்னஞ்சலின் விடய வரியில் (subject line) விண்ணப்பிக்கும் பதவியையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1. தேசிய ஒருங்கிணைப்பாளர் - வனசீவராசி முகாமைத்துவ திட்ட அமுலாக்கம் (பிஎஸ்04 வகுதி ஏ)

   பணிக்கான நிலையம்: மடாத்துகம/ பொல்பித்திகம – 01 பதவி வெற்றிடம்.

**பணிக்கான குறிப்பு:**

- ✷ வனசீவராசிகள் முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கம் மற்றும் கண்காணித்தல். வன விலங்குகள், குளங்களின் சூழலியல் மீள்நிர்மாணம், யானைகளின் வழிகளை அடையாளம் கண்டு அவற்றை பிரகடணப்படுத்தல், நெல் வயல்களின் வேலிகள் மற்றும் நிரந்தரமான கிராம வேலிகள், யானைகளின் இருப்பிட தகவலறியும் சமிக்ஞை சாதனம் இன்னும் பலவும் ஆகியவற்றில் அனுபவம்.
- ✷ உரித்தான பங்காளர் முகவராண்மைகளுடன் ஒருங்கிணைந்து திட்டமிட்ட செயற்பாடுகளை அமுல்நடாத்துவதற்கான ஆதரவை பெற்றுக் கொள்ளல்.
- ✷ வனசீவராசி முகாமைத்துவ திட்ட செயற்பாடுகளுக்காக வருடாந்த அமுல்நடாத்தல் திட்டங்கள் மற்றும் பெறுகை திட்டங்களை தயாரித்தல்.
- ✷ செயற்திட்ட அமுல்நடாத்தல் அலகுகள் மட்டத்தில் வனசீவராசி முகாமைத்துவ திட்ட செயற்பாடுகளை அமுல்நடாத்துவதற்காக அவர்களுக்கு உதவி செய்வதற்காக உரித்தான செயற்றிட்ட அமுல்நடாத்துவதற்காக சிரேஷ்ட சூழல் அலுவலர்களை நெருக்கமாக ஒருங்கிணைத்தல்.
- ✷ வனசீவராசி முகாமைத்துவ திட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் அடங்கலான மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகளை தயாரித்தல்.
- ✷ வனசீவராசி முகாமைத்துவ திட்ட அமுல்நடாத்தல் பிரதேசங்களுக்காக சிரேஷ்ட சூழல் அலுவலர்களினால் வழங்கப்பட்ட விபரங்களை பாவித்து GIS வரைபடங்களை தயாரித்தல் மற்றும் இற்றைவரையாக்கல்.
- ✷ வனசீவராசி முகாமைத்துவ திட்ட செயற்பாடுகளுக்காக செயற்றிட்ட அமுல்நடாத்தல் அலகுகளின் ஊழியர்களின் ஒருங்கிணைப்புடன் விலைமனு ஆவணங்களை தயாரித்தல்.

**தகைமை மற்றும் அனுபவம்**

✷ 01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் கீழே குறிப்பிட்டுள்ள தகைமைகள், அனுபவம் மற்றும் சம்பள மட்டங்கள் அமைந்துள்ளன.

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தான துறையில் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டப் படிப்பு.

   அல்லது

   உரித்தான துறையில் பட்டப் படிப்பிற்கு நிகரான தகைமையொன்றென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.

   அல்லது

   உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்ற இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரானதொரு தொழில்சார் தகைமை.

   அத்துடன்

   உரித்தான துறையில் ஆகக் குறைந்தது 9 வருட பட்டப்பின் தகைமைப் பட்டம்.

2. உரித்தான துறையில் நாடளாவியரீதியிலான அரசாங்க சேவையின் III/II அல்லது மேற்பட்ட அல்லது நிகரான நிலபரத்தையுடைய அலுவலரொருவர்.

   அத்துடன்

   III/II வகுப்பின் பதவியில் ஆகக் குறைந்தது 9 வருட அனுபவம்.

   சம்பள மட்டம்: பிஎஸ்-4, வகுதி ஏ - 155,000 ரூபாவிலிருந்து 170,000 ரூபா வரையும்.

✷ **01/2019** என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு சம்பளங்களுக்கு மேலாக வாழ்க்கைச் செலவு படியும் வழங்கப்படும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரிகள் 64 வயதிற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
2. அனைத்து அலுவலர்களும் அவர்களின் கடமைகளை உரித்தான அரசாங்க அமைப்புக்கள் மற்றும் ஏனைய முகவராண்மைகளுடனான தொடர்பிலும் ஒருங்கிணைப்பிலும் செயற்படுத்தல் வேண்டும்.
3. இவ்வாறான பதவிகளுக்கு ஆங்கில தேர்ச்சி, அரசாங்க ஒழுங்குவிதிகள் மற்றும் கணனி புலமை ஆகியன கட்டாயமான முன்தேவைப்படுத்தல்களாகும்.
4. வேலைக்கான ஒப்பந்தமானது ஒரு வருடத்திற்காக அமைந்திருப்பதுடன் செயற்பாடு மற்றும் திட்டங்கள்/ செயற்றிட்டங்களின் தேவைப்படுத்தல் ஆகிய அடிப்படையில் வருடாந்தம் நீடிக்கப்படும்.
5. 01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரமும் அதன் பின்னரான எந்தவொரு திருத்தங்கள் அடிப்படையிலும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள மட்டங்கள் மற்றும் படிகளும் வழங்கப்படும்.
6. நீண்ட நேரங்களிலும் வார இறுதிகளிலும் வேலை செய்வதற்கான ஆற்றல்.

அதியுயர் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்டையொன்றிற்கு அழைக்கப்பட்டு திறமை அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும். எனவே, எவ்வித செல்வாக்கு அல்லது நியமன செயற்பாட்டிற்கு பிரதிநிதித்துவம் செய்தல் விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு வழிவகுக்கும். அரசாங்க சேவை/ நியதிச்சட்ட சபைகள்/ கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறான தலைமைகள் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படின், முழு நேர அடிப்படையில் விடுவிக்கப்படுவார்களா என்பதையும் குறிப்பிடல் வேண்டும். மேலேயுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**நீர்ப்பாசன அமைச்சு.**

**2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்**

**பாதுகாப்பு அமைச்சு**

01. பின்வருமாறு பட்டிலிடப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் பின்வரும் நிறுவனங்கள் மற்றும் முகவரகங்களுக்கு 2023ஆம் வருடத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், உள்நாட்டு உற்பத்தியாளர்கள், உள்நாட்டு வழங்குநர்கள், சிவில் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசகர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ❖ பாதுகாப்பு அமைச்சு
- ❖ இலங்கைத் தரைப்படை
- ❖ இலங்கை கடற்படை
- ❖ இலங்கை வான் படை
- ❖ அரச நுண்ணறிவு சேவை
- ❖ சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
- ❖ கரையோர பாதுகாப்புத் திணைக்களம்
- ❖ சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
- ❖ பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை பாடசாலை
- ❖ தேசிய மாணவர் படையணி
- ❖ பாதுகாப்புப் படை தலைமையக கட்டிடத்தொகுதி செயற்றிட்டம்

02. விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளல்

அ. 2022-10-10ஆம் திகதி முதல் 2022-11-11ஆம் திகதி வரை பின்வரும் இணைய தளத்திற்குப் பிரவேசித்து விண்ணப்பப் படிவங்கள் தரவிறக்கம் (Download) செய்துகொள்ளலாம்.

பாதுகாப்பு அமைச்சு - www.defence.lk

ஆ. பதிவு செய்து கொள்வதற்கு இயைபான விண்ணப்பப் படிவத் தொகுதி 59 பக்கங்களைக் கொண்டுள்ளதுடன் அதில் பின்வரும் பகுதிகளை அடங்கியுள்ளன.

1. பிரதான விண்ணப்பப் படிவம்
2. வெளிநாட்டு வழங்கல் நிறுவனத்தின் தரவுப் படிவம் (இணைப்பு A)
3. அறிவுரைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய படிவம்
4. சுமார் 52 பக்கங்களைக் கொண்ட பொருட்களின் விபரப் பட்டியல்

03. வகுதிக் கட்டணம் செலுத்துதல்

அ. உள்நாட்டு வழங்குநர்களிடம் ஒரு வகுதிக்காக 1800.00 ரூபா கட்டணம் அறவிடப்படும்.

ஆ. வெளிநாட்டு வழங்குநர்களிடம் ஒரு வகுதிக்காக 18 அமெரிக்க டொலர்கள் அறவிடப்படும். உள்நாட்டு முகவர்கள் ஊடாக கொடுப்பனவைச் செலுத்தும்போது ஒரு வகுதிக்காக 6000.00 ரூபா கட்டணம் அறவிடப்படும்.

இ. 2023ஆம் வருடத்தில் வழங்குநராகப் பதிவு செய்து கொள்வதற்காக வகுதிக் கட்டண செலுத்தல்களை பாதுகாப்பு அமைச்சினால் இலங்கை வங்கி தப்ரபேன் கிளையில் பேணப்படும் 7040119ஆம் கணக்கிலக்கத்திற்கு வரவாகும் வகையில் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் வைப்புச் செய்யலாம். பணம் வைப்புச் செய்கையில் பயன்பெறுநரின் பெயர் ''பாதுகாப்புச் செயலாளர்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் வைப்புச் சீட்டில் ''வழங்குநர் பதிவு வகுதிக்கான கட்டணம் - 2023'' எனக் குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

ஈ. வெளிநாட்டு வழங்குநர்கள் (உள்நாட்டு முகவர்கள் இல்லாதபட்சத்தில்) 2022ஆம் வருடத்திற்கு பதிவு செய்தல் வகுதிக் கட்டணத்தை Swift Code பயன்படுத்தி இலங்கை வங்கிக்குச் செலுத்தலாம்.

Swift No - BCEYLKLX
Branch Code - 747
Account No. - 7040119

உ. வகுதிக்காக கட்டணத்தைச் செலுத்தும்போது முற்படுத்தும் வங்கி சான்றுபடுத்திய பண வைப்புப் படிவத்தை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (வகுதிக் கட்டணமாக பணம் செலுத்தப்பட்டதாக சான்றுபடுத்தும் வகையில்)

ஊ. உள்நாட்டு வழங்குநர்கள் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்கள் வகுதிக் கட்டணத்தை 2022-10-10ஆம் திகதி முதல் 2022-11-11ஆம் திகதி வரையான காலப்பகுதியில் செலுத்தி முடிக்கப்படுதல் வேண்டும். 2022-11-11ஆம் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வகுதிக் கொடுப்பனவுகளுக்கு பாதுகாப்பு அமைச்சு பொறுப்புகூற மாட்டாது.

04. யாராவது விண்ணப்பதாரரொருவரால் செலுத்தப்பட்ட வகுதிக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. விண்ணபதாரர் தவறுதலாக அல்லது கவனிக்காமல் ஏதாவது தகவலை வழங்காதிருத்தல், பிழையான வகுதியை அடையாளமிட்டிருத்தல் போன்ற காரணங்களினால் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படலாம் என்பதுடன் அவ்வாறான வேளையில் வகுதிக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது என்பதும் அறிவிக்கப்படுகின்றது.

05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இயைபுடைய ஆவணங்கள் சகிதம் 2022 நவம்பர் மாதம் 11ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கணக்காளர் (வழங்கல்),
பாதுகாப்பு அமைச்சு,
பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி,
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உள்நாட்டு வழங்குநர்கள் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023 (உள்நாடு)'' எனவும் வெளிநாட்டு வழங்குநர்கள் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023 (வெளிநாடு)'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

06. 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்துகொள்ளல் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமையை பாதுகாப்பு அமைச்சு செயலாளர் தன்னத்தே கொண்டுள்ளார்.

**செயலாளர்,**
**பாதுகாப்பு அமைச்சு.**

# பெறுகை அறிவித்தல்

## ரம்புக்கன புதிய சந்தைக் கட்டிடத்தொகுதியின் கடை அறைகளை குத்தகைக்கு வழங்குதல் 2022ஆம் வருடம்

ரம்புக்கன பிரதேச சபையின் புதிய சந்தைக் கட்டிடத்தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பின்வரும் வகையிலான 02 கடை அறைகள் மற்றும் கட்டிடத்தில் வியாபாரம் செய்வதற்குப் பொருத்தமான வெற்றிடங்களினுள் கடை அறைகளை நிர்மாணித்து வியாபாரங்களை நடாத்துவதற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- விலைமனுக் கோரல் 2022-10-14ஆம் திகதி முதல் 2022-11-07ஆம் திகதி வரையாகும்
- விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2022-11-08ஆம் திகதி

| கடை அறைகள் | ஆகக் குறைந்த விலைக் கோரல் தொகை |
|---|---|
| புதிய முதலாம் சந்தைக் கட்டிடத்தொகுதியின் தரைத் தளம் 09ஆம் இலக்க கடை அறை | 330000.00 |
| புதிய முதலாம் சந்தைக் கட்டிடத்தொகுதியின் தரைத் தளம் 10ஆம் இலக்க கடை அறை | 330000.00 |
| புதிய சந்தைக் கட்டிடத்தொகுதியின் தரைத் தளம் படிக்கட்டின் கீழுள்ள வெற்றிடம் | 275000.00 |
| புதிய சந்தைக் கட்டிடத்தொகுதியின் தரைத் தளம் வலதுபக்க படிக்கட்டின் கீழுள்ள வெற்றிடம் | 185000.00 |
| புதிய முதலாம் சந்தைக் கட்டிடத்தொகுதியின் தரைத் தளம் 14ஆம் இலக்க கடை அறைக்கு அண்மையிலுள்ள வெற்றிடம் (வலதுபக்க படிக்கட்டிற்கு மேற்புறமுள்ள இடம்) | 150000.00 |

02. 2022-10-14ஆம் திகதி முதல் 2022-11-07ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் பிரதேச சபை அலுவலகத்திற்கு மீளளிக்கப்படும் 10000.00 ரூபா வைப்பு மற்றும் மீளளிக்கப்படாத 2500.00 ரூபா படிவக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் விலைக்கோரல் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு விலைமனுதாரருக்கு ஒரு கடை அறைக்காக ஒரு விலைமனுப் படிவம் மட்டுமே வழங்கப்படும். ஒரு விலைமனுதாரருக்கு எத்தனை எண்ணிக்கையான கடை அறைகளுக்கும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். விலைமனுதாரர்களுக்குத் தேவையான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளவும்.

ஆர்.எம். பிரியதர்ஷனி ரத்நாயக்க
செயலாளர்,
ரம்புக்கன பிரதேச சபை,
ரம்புக்கன.
தொலைபேசி இல. 035-2265275

ஷஷீலா ஹேனகஆரச்சி,
அபிவிருத்தி அதிகாரி,
ரம்புக்கன பிரதேச சபை,
ரம்புக்கன.
தொலைபேசி இல. 035-2265275

**தலைவர்,
ரம்புக்கன பிரதேச சபை,
ரம்புக்கன.
2022-10-07ஆம் திகதி.**

**விசாரணை: 035-2265275**
**மின்னஞ்சல்:** rambukkanaps@gmail.com/info@rambukkana.ps.gov.lk



# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தொழில் திணைக்களம் - கொழும்பு-05

## பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக சேவை வழங்குநரொருவரை தெரிவு செய்தல் – 2022

**FG/TB/46/2022**

கொழும்பு-05, நாராஹேன்பிட்டவில் அமைந்துள்ள தொழில் செயலக கட்டிடம் மற்றும் 'மெஹேவர பியச' ஆகியவற்றிற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தொழில் ஆணையாளர் நாயகம் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

2. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அவரது நிறுவகத்தில் ஆகக் குறைந்தது 50 ஊழியர்களையாவது வேலையில் அமர்த்தியிருத்தல் வேண்டுமென்பதுடன் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதில் 5 வருட அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், தகுதியுள்ள விலைமனுதாரரானவர் பாதுகாப்பு சேவைகளை வழங்குநரொருவராக பாதுகாப்பு அமைச்சில் பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.
3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-05, 'மெஹேவர பியச', 9 ஆம் மாடியின் தொழில் திணைக்கள நிதிக் கிளையின் பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 011-2104837) 2022 ஒக்டோபர் 11 ஆம் திகதியிலிருந்து 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் இலவசமாக விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படாத கட்டணமாக 4,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், 2022 ஒக்டோபர் 11 ஆம் திகதியிலிருந்து 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொழும்பு-05, 'மெஹேவர பியச', 9 ஆம் மாடியின் தொழில் திணைக்கள நிதிப் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்திலேயே அமைந்திருத்தல் வேண்டும்).
6. 2022 நவம்பர் 1 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுவானது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்), நிதிப் பிரிவு, 9 ஆம் மாடி, தொழில் திணைக்களம், கொழும்பு-05 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் கொழும்பு-05, 'மெஹேவர பியச', 9ஆம் மாடி, தொழில் திணைக்களம், நிதிப் பிரிவில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2023 சனவரி 03 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. 2023 சனவரி 17 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் நிபந்தனையற்றதும் உடனடியாக மாற்றக்கூடிய உத்தரவாதத்துடனான பாங்கில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து 150,000 ரூபா தொகைக்கு பெற்றுக் கொண்டதும் VII ஆம் பிரிவின் பிரகாரமுமான விலைமனு பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. 2022 ஒக்டோபர் 25 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு கொழும்பு-05, தொழில் செயலக கட்டிடத்தின் 4 ஆம் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**தொழில் ஆணையாளர் நாயகம்,
தொழில் திணைக்களம்,
கொழும்பு-05.**

**தொலைபேசி:** 011-2104825/ 011-2104837
**தொலைநகல் இலக்கம்:** 011-2581393
**மின்னஞ்சல் முகவரி:** dol.fin.procurement@gmail.com


# 'அல் குர்ஆன் வன்முறையைத் தூண்டுகிறதா?' குவைத்தில் நூல் வெளியீட்டு நிகழ்வு



மிஷ்காத் ஆய்வு நிறுவனத்தின் தலைவர் உஸ்தாத் அஷ்ஷெய்க். எம்.ஏ.எம் மன்ஸூர் அவர்களால் எழுதப்பட்ட 'அல் குர்ஆன் வன் முறையைத் தூண்டுகிறதா?' நூல் வெளியீட்டு நிகழ்வை கடந்த 07.10.2022, வெள்ளிக்கிழமை குவைத் வாழ் இலங்கை முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பான 'இக்ரஃ இஸ்லாமிய சங்கம்', ஜம்மியத்துல் இஸ்லாஹ் அல்இஜ்திமா கேட்போர்



கூடத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக குவைத்துக்கான இலங்கைத் தூதுவர் உத்மான் லெப்பை முகம்மத் ஜவ்ஹர் , விஷேட அதிதிகளாக ஜம்மியத்துல் இஸ்லாஹ் அல்இஜ்திமா' தலைவர் கலாநிதி அஷ்ஷெய்க் காலித் அல்மத்கூர், குவைத்துக்கான இலங்கை தூதரக உயர் அதிகாரி அப்துல் ஹலீம், மக்தப் அல்தஆவுன் அல்இஸ்லாமியின் தலைவர் அப்துல் முஹ்ஸின் ஆகியோரும், இலங்கை, இந்திய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மற்றும் இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தின் தலைவர் உட்பட அதன் நிர்வாக உறுப்பினர்கள், நலன் விரும்பிகளும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் நூலாசிரியரின் நூல் அறிமுகம் காணொளிப்படுத்தப் பட்டது. அங்கு உரை நிகழ்த்திய

இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தின் சிரேஷ்ட நிர்வாக சபை உறுப்பினர் அஷ்ஷெய்க் எம். ஐ. எம் மன்சூர் நளீமி, இந்நிகழ்வு ஒரு ஆரம்ப நிகழ்வு எனவும் இந்நூலை மக்கள் மத்தியில் பரவலாக விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் தூதுவர் மற்றும் ஜம்மியத்துல் இஸ்லாஹ் அல்இஜ்திமா தலைவர் ஆகியோரது விஷேட உரைகளும் இடம்பெற்றதுடன், கலந்து கொண்டோர் அனைவருக்கும் மும்மொழிகளிலுமானபுத்தகப்பிரதிகள்கையளிக்கப்பட்டன.

அஷ்ஷெய்க் மம்ஷாத் நளீமி இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து வழங்கினார்.

ஜம்மியத்துல் இஸ்லாஹ் அல்இஜ்திமா மற்றும் குவைத் அமானத்துல் அவ்காப் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து இந்த நூலை பிரசுரிக்க உதவியமை குறிப்பிடத்தக்கது.

_ஹரீஸ் ஸாலிஹ்


**ஊவா மாகாண சபை**

# பெறுகை அறிவித்தல்

## பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரல் - 2022/2023

01. ஊவா மாகாண சபையின் பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்தில் பெறுகைக் குழுத் தலைவரினால் ஊவா மாகாண சபை கட்டிடத் தொகுதி மற்றும் ஊவா மாகாண சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ள ஏனைய நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகாலம் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
02. விலைமனு ஆவணங்களை 2022-10-10ஆம் திகதி முதல் 2022-10-31ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான கடமை நேரங்களில் பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்திலிருந்து அல்லது www.up.gov.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
03. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் பெறுகைக் குழுவிற்கு 2022-10-31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு பதுளை, ஊவா மாகாண சபை பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். இயைபுடைய மேலதிக விபரங்களை 055-2229393 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொண்டு இந்த அலுவலகத்திலிருந்து அல்லது www.up.gov.lk எனும் இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
04. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,
பெறுகைக் குழு,
பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகம்,
ஊவா மாகாண சபை, பதுளை.
2022-10-06.**



CSIAP THE WORLD BANK

**ஆர்வ வெளிப்படுத்தலுக்கான வேண்டுகோள்**

**கமத்தொழில் அமைச்சு**

## காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் செயற்றிட்டம் (CSIAP) – IDA 6346 LK

## செயற்றிட்ட செயற்பாடுகளுக்காக தர உத்தரவாதத்திற்காக சுதந்திரமான தொழில்நுட்ப கணக்காய்வாளர்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல்

**Reference No.: LK-MOA-248527-CS-LCS**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கியிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் செயற்றிட்ட ஆகுசெலவிற்காக கடன் நிதியொன்றை பெற்றுள்ளதுடன் பெறுகைகளின் பகுதியொன்றை 'செயற்றிட்ட செயற்பாடுகளுக்காக தர உத்தரவாதத்திற்காக சுதந்திரமான தொழில்நுட்ப கணக்காய்வாளர்களை உசாத்துணை சேவைக்காக பெற்றுக் கொள்ளல்' ஆகுசெலவிற்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. Reference No. LK-MOA-248527-CS-LCS.

உசாத்துணை சேவைகளானது (''சேவைகள் என அழைக்கப்படுவது'') மீள்நோக்கல், அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் தொழில் வழங்குநருக்கு செயற்றிட்ட அமுல்நடாத்தல் தொடர்பாக, குறிப்பாக, சிவில் வேலைகளின் தரம் மற்றும் பொறியியலாளர் / ஒப்பந்தக்காரரினால் பின்பற்றப்படும் செயற்பாடு மற்றும் நடைமுறைகள் CSIAP இனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்கள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் செயற்றிட்ட அமுல்நடாத்தல் திட்டத்திற்கு அமைவாக செயற்படுகின்றதா ஆகியவற்றை அடக்குகின்றது.. ஒப்பந்தக்காரரானவர் ஆரம்ப விசாரணை அறிக்கை சமர்ப்பித்தல், முழுமையான விசாரண அறிக்கை சமர்ப்பித்தல், சாத்தியமான ஆய்வுகள், வடிவமைப்புக்கள் மற்றும் ஆகுசெலவு மதிப்பீடுகள், பெறுகை செயற்பாடு, ஒப்பந்த முகாமைத்துவம், பொறியியலாளரின் மேற்பார்வையின் செயல்வலுத்தன்மை, தரக் கட்டுப்பாடு மற்றும் ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்படும் தர உத்தரவாத நடவடிக்கைகள், ஒப்பந்த முன்னேற்றம் மற்றும் அமுல்நடாத்தும் முகவராண்மைகளினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைக்கப்படும் பணக்கொடுப்பனவுகள் மற்றும் செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம் மற்றும்/ அல்லது செயற்றிட்ட முகாமைத்துவ அலகினால் இன்னும் பலவற்றினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றதாவென மீள்நோக்கம் செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இதற்கு மேலாக, விவசாய அமைப்பு, சமூக கணக்காய்வு குழுவின் பங்கேற்றல் மற்றும் செயற்றிட்டத்தின் செயல்வலுத்தன்மை ஆகியவற்றை உசாத்துணையாளர் மீள்நோக்கம் செய்து அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். உசாத்துணைக் காலப்பகுதியானது பன்னிரண்டு (12) மாதங்களாகும். பணிநியமனத்தின் எதிர்பார்க்கப்படும் ஆரம்ப திகதியானது 2022 டிசம்பர் 30 ஆம் திகதியாகும்.

பின்வரும் இணையதளத்தில் பணிநியமனத்திற்கான விபரமான நியதிக் குறிப்புக்களை காணலாம். www.csiap.lk, www.agrimin.gov.lk அல்லது ராஜகிரிய, மாதின்னாகொட, எம்.டி.ஏச். ஜயவர்தன மாவத்தை, 61/1, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்ட, செயற்றிட்ட முகாமைத்துவ அலகு, பெறுகை விஷேடத்துநர் என்ற முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்பாசன விவசாய செயற்றிட்டத்தின் சார்பாக அமைச்சு உசாத்துணையாளர்கள் பெறுகைக் குழுவானது சேவைகளை வழங்குவதில் அவர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு தகுதியுள்ள உசாத்துணை நிறுவனங்களை (''உசாத்துணையாளர்கள் என அழைக்கப்படுவது'') அழைக்கின்றது. ஆர்வமுள்ள உசாத்துணையாளர்கள் சேவைகளை செயற்படுத்துவதற்காக தேவைப்படும் தகைமைகள் மற்றும் உரித்தான அனுபவம் அவர்களுக்கு அமைந்துள்ளதென காட்சிப்படுத்தும் தகவலை வழங்கல் வேண்டும். தெரிவு செய்யப்படுவதற்கான தகவுத்திறனானது நிறுவனத்தின் பிரதான வர்த்தகம் மற்றும் வர்த்தகத்தின் வருடங்கள், உரித்தான அனுபவம், தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவரீதியிலான ஆற்றல். முக்கிய வல்லுநர்கள் தெரிவு செய்யப்படும் கட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட மாட்டார்கள்.

உலக வங்கியின் ஆர்வ முரண்பாட்டு கொள்கையில் முன்வைக்கப்பட்டுள்ளவாறு (''பெறுகை ஒழுங்குவிதிகள்'') 2017 நவம்பர் மற்றும் 2018 ஓகஸ்டில் திருத்தப்பட்டவாறான 2016 ஜூலை "Procurement Regulations for IPF Borrowers" என்பதன் III ஆம் பிரிவின் 3.14, 3.16 மற்றும் 3.17 ஆகிய பந்திகளுக்கு ஆர்வமுள்ள உசாத்துணையாளர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

உசாத்துணையாளர்கள் ஏனைய நிறுவனங்களுடன் அவர்களின் தகைமைகளை மேம்படுத்துவதற்காக இணைந்து செயற்படலாம் ஆனால் நிறுவனமானது கூட்டுமுயற்சி மற்றும்/ அல்லது ஒரு உபஉசாத்துணை என்பதனை தெளிவாக குறிப்பிடல் வேண்டும். கூட்டுமுயற்சியாயின் கூட்டுமுயற்சியின் அனைத்து பங்காளர்களும் தெரிவு செய்யப்படின் முழு ஒப்பந்தத்திற்குமாக இணைந்தும் தனித்தும் பொறுப்பு கூறல் வேண்டும்.

பெறுகை ஒழுங்குவிதிகளில் முன்வைக்கப்பட்டுள்ள ''ஆகக் குறைந்த ஆகுசெலவு தெரிவு செய்தல்'' நடைமுறைக்கு அமைவாக உசாத்துணையாளரொருவர் தெரிவு செய்யப்படுவார்.

மேலதிக தகவலை ராஜகிரிய, மாதின்னாகொட, எம்.டி.ஏச். ஜயவர்தன மாவத்தை, 61/1 ஆம் இலக்கத்திலுள்ள காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் பெறுகை விஷேடத்துநரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 0112053252. தொலைநகல்: 0112053167.

2022 ஒக்டோபர் 25 ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஆர்வ வெளிப்பாடானது எழுத்துருவில் கீழேயுள்ள முகவரிக்கு (நேரடியாக அல்லது தபால் மூலமாக) ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,
செயற்றிட்ட முகாமைத்துவ அலகு,
காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம்,
இல.: 61/1, எம்.டி.ஏச். ஜயவர்தன மாவத்தை,
மாதின்னாகொட, ராஜகிரிய.
தொலைபேசி: 0112053252.
தொலைநகல்: 0112053167**

**தலைவர்,
அமைச்சு உசாத்துணையாளர்கள் பெறுகைக் குழு,
கமத்தொழில் அமைச்சு,
இல.: 80/5, ''கொவிஜன மந்திரய",
ரஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்ல.
2022 ஒக்டோபர் 10 ஆம் திகதியன்று.**


# மருதமுனை சைக்கிளிங் கிறீன் அமைப்பினால் நீண்ட தூர சைக்கிள் அஞ்சலோட்டம் நிகழ்வு



மருதமுனை'சைக்கிளிங் கிறீன்' கழகம் இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துடனும்,இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துடனும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள'இலங்கையை பசுமையாக்குவோம்' என்ற கருப்பொருளிலான சைக்கிள் அஞ்சலோட்ட நிகழ்வு கடந்த 8ஆம் திகதி காலை பதுளை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகியது. அஞ்சலோட்டம் சம்மாந்தறை தென்கிழக்குப் பல்கலைக்ழகம் வரையானதாகும்.

இந்த சைக்கிள் அஞ்சலோட்ட நிகழ்வு பதுளை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திலிருந்து 08ஆம் திகதி காலை ஆரம்பமாகி மகியங்கனை, பதியதலாவ, மகாஓய, செங்கலடி, மட்டக்களப்பு, கல்முனை ஊடாக சம்மாந்தறை தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தை வந்தடைவதற்குத் திட்டமிடப்பட்டது.

இந்த சைக்கிள் அஞ்சலோட்டத்தின் மூலம் மரம் நடுகை, சைக்கிள் பயணத்தை ஊக்குவித்தல், இலங்கையை பசுமையாக்குதல், உடல் ஆரோக்கியத்திற்கான ஆலோசனை போன்ற பல விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த சைக்கிளிங் கிறின் கழகத்தின் அஞ்சலோட்டத்தில் பங்குபற்றும் வீரர்கள் எம்.எப்.ஹிபத்துல் கரீம்(பதிவாளர் உவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்), கலாநிதி பிர்தௌஸ் சத்தார்(பிரதிக் கல்விப் பணிப்பாளர்), ஏ.எம்.றியாஸ் அகமட்(சிரேஸ்ட விரிவுரையாளர்), ஏச். நைறூஸ்கான்(பிரதிக் கல்விப் பணிப்பாளர்), டொக்டர் எம்.ஏ.எம்.அஸீம்(மருத்தவ அதிகாரி), எம்.எஸ்.எம்.பஸீல் (பொறியிலாளர்), இஸட்.எம்.றிபான் (அபிவிருத்தி உத்தியோகத்தர்),எம்.எம். முதிஉர் றஹ்மான் (அபிவிருத்தி உத்தியோகத்தர்),எம்.ஆர்.எம்.மிஹ்றின்(கைத்தறி மொத்த விற்பனையாளர்), ,எம்ஐ.எம்.சுகைல்(கணணி நிபுணர்) ஆகியோராவர்.

**–பி.எம்.எம்.ஏ.காதர்**
(மருதமுனை தினகரன் நிருபர்)

# மர்ஹூம் எம்.ஐ எம். மொஹிடீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம்






*அட்டாளைச்சேனை குறூப் நிருபர்*

இலங்கையின் ஒரு சிறந்த ஆய்வாளராக, முற்போக்கு சிந்தனையாளராக, எழுத்தாளராக வாழ்ந்து அண்மையில் இறையடிசேர்ந்த அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட மர்ஹூம் எம்.ஐ எம்.மொஹிடீனை நினைவு கூரும் வகையில் அக்கரைப்பற்றில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள "மர்ஹூம் எம்.ஐ எம். மொஹிடீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம்" வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

அதோடு அன்னாரை கெளரவிக்கு முகமாக அவரின் பிறந்த இடமான அக்கரைபற்று இரண்டாம்,மூன்றாம் குறிச்சி, பொது வீதி அக்கரைபற்று மாநகரசபையால் மொஹிடீன் வீதி என்ற பெயர்ப்பலகையும் மாநகரசபை உத்தியோகத்தர்கள் முன்னிலையில் தலைவர் ஜெளபர் இஸ்மாயிலினால் திரை நீக்கம் செய்யப்பட்டது.

அக்கரைப்பற்று பட்டினப்பள்ளி வீதியில் அமைந்துள்ள இந்த நிலையத்தில் மர்ஹூம் எம்.ஐ எம். மொஹிடீனின் ஆய்வுக்கட்டுரைகள், தகவல் கணிப்பீடுகள், அவரது சிந்தனையில் உருவான கட்டட தொழில் நுட்பங்கள், கருத்துக் கணிப்பீடுகள், அன்னார் கலந்து கொண்ட தேசிய, சர்வதேச ரீதியிலான பேச்சுவார்த்தைகள் பற்றிய துணுக்குகள், சமாதான பேச்சுவார்த்தையின்போது அவர் கூறிய கருத்துகள் ஆகியன சம்பத்தப்பட்ட நூல்கள், பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

# கார்-மோட்டார் சைக்கிள் மோதி விபத்து: ஒருவர் பலி

*அநுராதபுரம் தினகரன் நிருபர்*

புத்தளம் திருகோணமலை பிரதான வீதியின் அம்பதலாகம பகுதியில் கார் ஒன்றுடன் மோட்டார் சைக்கிளொன்று மோதி விபத்துக்குள்ளாகியது. இக்கோர விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை அம்பதலாகம சந்தியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர். குமாரசிங்ககம, மிஹிந்தலை பகுதியை வசிப்பிடமாக கொண்ட 28 வயதுடய இளைஞரொருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து சம்பவத்துடன் தொடர்புடைய காரின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மின்னல் தாக்கி பெண் ஒருவர் பலி

*ஓமந்தை விஷேட நிருபர்*

வவுனியா மாமடுப்பகுதியில் மின்னல் தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் அட்டமஸ்கட பகுதியைச் சேர்ந்த சந்திரலதா வயது 49 என்ற பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த 7ஆம் திகதி மாலை பெண் வீட்டிலிருந்து தாமரை இலை பறிப்பதற்காக குளத்துப்பகுதிக்கு சென்றுள்ளார். இதன்போது மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார். இப்பகுதியில் பெண்ணின் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்த அயலவர்கள் சம்பவம் தொடர்பாக மடு பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் உடற் கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

# ஆசிரியர் தின விழா

*சாவகச்சேரி விஷேட நிருபர்*

தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்தும் ஆசிரியர் தின விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 1.30 மணிக்கு கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் அதிதிகளாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை,இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வின் ஓர் அங்கமாக கடந்த வருடங்களில் ஓய்வு பெற்ற அதிபர்,ஆசிரியர்கள் கௌரவிப்பு மற்றும் ஆசிரியர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வு ஆகியன இடம்பெறவுள்ளன.



நுகேகொடை சென்.ஜோன்ஸ் கல்லூரியில் சிறுவர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வு கல்லூரியின் பிரதி அதிபரின் தலைமையில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். படம்: ரஞ்சித் அசங்க


**மாவட்ட பொது வைத்தியசாலை ஹம்பாந்தோட்டை**

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்தின் பொருட்டு கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள்/முகவர்கள்/ பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்/ கூட்டுத்தாபனங்கள் உட்பட்ட அரசாங்க மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வணிக நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து இவ் வைத்தியசாலையில் பதிவு செய்து கொள்ள விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '2023ஆம் ஆண்டுக்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

| பொருள் இல. | விபரங்கள் |
|---|---|
| 01. | அலுவலக காகிதாதிகள் மற்றும் கணனி காகிதாதிகள், கணனி அச்சுப் பொறிக்கான டோனர் |
| 02. | அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் கண்ணாடி உபகரணங்கள் |
| 03. | கணனிகள், அச்சுப் பொறிகள், புகைப்படப்பிரதி இயந்திரங்கள் போன்ற இயந்திரங்கள் |
| 04. | சுத்திகரிப்புப் பொருட்கள், துப்புரவேற்பாட்டுப் பொருட்கள், பிளாஸ்டிக், அனுமினியப் பொருட்கள், உலோகப் பொருட்கள் போன்ற சிறு பெறுமதியுடைய பொருட்கள் |
| 05. | கட்டிடங்கள், வயரிங், நீர்க்குழாய் பொருட்கள் |
| 06 | துணி வகைகள் |
| 07 | வாகன பற்றரி/ டயர்/ டியூப் |
| 08 | மருந்து உறைகள், எக்ஸ் கதிர் உறைகள் |
| 09 | பெயர்ப் பலகைகள், அடையாள அட்டைகள் |
| 10 | ஆய்வுகூட பரிசோதனைப் பொருட்களை வழங்கல் |
| 11 | எக்ஸ் கதிர் பிரதிகள் மற்றும் அதற்கான இரசாயனப் பொருட்கள் |
| 12 | சத்திர சிகிச்சையக உபகரணங்கள், மருத்துவ உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், எக்ஸ் கதிர் உபகரணங்கள் |
| 13 | மருந்துகள் |
| 14 | சத்திர சிகிச்சைப் பொருட்கள் |
| 15 | சலவையகத்திற்கான கழுவும் மற்றும் இரசாயனப் பொருட்கள் |
| 16 | A/C உதிரிப்பாகங்கள், குளிர்சாதனப்பெட்டி உதிரிப்பாகங்கள் |
| **சேவை இலக்கம்** | **விபரங்கள்** |
| 17 | அலுவலக உபகரணங்கள், மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு |
| 18 | வாகனங்களைச் சேர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள் |
| 19 | வைத்தியசாலை மருத்துவ உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| 20 | பிரேத அறையைப் பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 21 | எரிவாயு/ஒட்சிஜன் உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| 22 | அலுமினிய வேலைகளைச் செய்தல் மற்றும் திருத்தவேலைகள் |
| 23 | உள்ளக மின்சார முறைமை, தொலைபேசி முறைமைகளின் திருத்தவேலைகள் |
| 24 | உரிமை கோராத சடலங்களை புதைத்தல் மற்றும் சடலங்களின் உடற்பாகங்களை அப்புறப்படுத்துதல் |
| 25 | கட்டிட திருத்தவேலைகள் (CIDA பதிவு C-9, C8, C7) |
| 26 | அழுக்குத் துணிகளை சலவை செய்தல் |
| 27 | சலவை இயந்திர திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு |
| 28 | மின்சார முறைமை பராமரிப்புகள் |
| 29 | மின்சார வேலி, தீப் பாதுகாப்பு முறைமை பராமரிப்புகள் |

பதிவு செய்து கொள்வதற்கான மாதிரிப் படிவங்களை 2022-10-10ஆம் திகதி முதல் 2022-11-09ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நேரத்தினுள் ஹம்பாந்தோட்டை மாவட்டப் பொது வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி இல. 047-2256417**

### வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் - 2023

| அலுவலகப் பாவனைக்கு |
|---|
| |

01. விண்ணப்பதாரரின் பெயர்:
02. வியாபாரப் பெயர் மற்றும் முகவரி:
03. வியாபார பதிவுச் சான்றிதழின் இலக்கம் மற்றும் திகதி:
04. தொலைபேசி இல:
 * மின்னஞ்சல் முகவரி: (கட்டாயம்)
05. தொடர்புகொள்ளக்கூடிய நபரின் பெயர்:
06. கையடக்கத் தொலைபேசி இலக்கம்:
07. வழங்க உத்தேசிக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விபரம்:
 வழங்கும் பொருள் இல. ☐☐☐☐☐☐☐☐☐☐
 வழங்கும் சேவைகள் இல. ☐☐☐☐☐☐☐☐☐☐

செலுத்த வேண்டிய தொகை: முதல் உருப்படிக்கு - ரூபா 2000.00
மேலதிக உருப்படிக்கு ரூ. 1000.00 x ☐ - ரூபா ☐
மொத்தம் - ரூபா ☐

பணம் செலுத்திய விதம் :

| | |
|---|---|
| பற்றுச்சீட்டு இலக்கம் | |
| காசுக்கட்டளை இலக்கம் | |
| காசோலை இலக்கம் | |

இந்த நிறுவனத்துக்குக் கடன் வசதிகள் வழங்கும் போது நிபந்தனைகளுக்கேற்ப சம்பந்தப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க கட்டுப்படுவதாக உறுதியளிக்கின்றேன்.

திகதி:................ ..........................................
பணிப்பாளர்/முகாமையாளர்

**நிபந்தனைகள் மற்றும் நியதிகள்**

01. ஒவ்வொரு பொருளுக்காகவும் வெவ்வேறு 2000.00 ரூபா வீதமும் அதற்குப் புறம்பாக மேலதிகமான ஒவ்வொரு பொருளுக்கும் 1000.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத வழங்குநர்கள் பதிவுக் கட்டணமொன்றை வைத்தியசாலையின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை அல்லது பணிப்பாளர், பொது வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை எனும் பெயரில் பெறப்பட்ட காசுக் கட்டளையை அல்லது பணிப்பாளர், பொது வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசோலையை (காசோலை தீர்வைக்கு உட்பட்டதாக) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
02. விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வைத்தியசாலைக்கு வருகை தரவேண்டிய அவசியம் இல்லை என்பதுடன் மேற்படி மாதிரிக்கு அமைவாக A4 அளவில் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். கொடுப்பனவுகள் செலுத்தியதற்கான ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் உரிய மாதிரிக்கமைவாக அல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (விண்ணப்பத்துடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் இணைத்தல் வேண்டும்.)
03. 2023ஆம் வருடத்திற்கான விலைகளைக் கோருதல் மின்னஞ்சல் (E-mail) ஊடாக மேற்கொள்ளப்படும் என்பதால் சரியான மின்னஞ்சல் முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும்.
04. பெறுகை வழிகாட்டிக் கோவை விதிகளின் பிரகாரம் விலைகள் கோரப்படும் என்பதுடன் அதன் இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
05. வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் உரிய தரத்தில் மற்றும் மாதிரிகளுக்கு அமைவானவைகளாக இருத்தல் வேண்டும்.
06. சகல விண்ணப்பங்களும் 2022.11.10ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது கூரியர் சேவை மூலமாகவோ அல்லது நேரில் கொண்டு வந்து நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு உரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதன் மூலம் சமர்ப்பிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட பொதுவைத்தியசாலை,**
**ஹம்பாந்தோட்டை.**


# ஹபரன பகுதியில் இராணுவ சிப்பாய் வெட்டிக் கொலை

*அநுராதபுரம் தினகரன் நிருபர்*

ஹபரனை பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற மோதலின் போது இராணுவ சிப்பாய் ஒருவரை வெட்டிக் கொலை செய்துள்ளதாக ஹபரனை பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் ஹபரனை சேனாதிரியாகம பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும்குற்றத்தடுப்புபிரிவுபொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் 38 வயதுடைய ஹிங்குரன்கொட, கட்டகெத்த பகுதியை வசிப்பிடமாக கொண்ட இராணுவ சிப்பாய் ஒருவர் என்பது தெரியவந்துள்ளது.


**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**

**கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் நங்கூரங்களிலுள்ள பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட வெலிகொவ்வா இயந்திரத்தினை அப்புறப்படுத்துவதற்கான விலைமனுக்கோரல்**

**CFHC/PD/DIS/DRG-WELI/2022/36**

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் நங்கூரங்களிலுள்ள பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட வெலிகொவ்வா இயந்திரத்தினை அப்புறப்படுத்துவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் **2022.10.26** ஆம் திகதி **பி.ப.02.00** மணி வரை கோரப்படும். இது தொடர்பான அனைத்து விபரங்களையும் கூட்டுத்தாபனம் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் **(www.cfhc.gov.lk)** இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கோரலுக்கான விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்வதற்கு மீள்பெறமுடியாத தொகையாக ரூ.5,000.00 மற்றும் மீள்பெறக்கூடிய உத்தரவாதப்பிணை தொகையாக ரூ.200,000.00 செலுத்த வேண்டும். மேலும், விலைமனு வழங்கப்பட்டால் ரூ.1,000,000.00 செயல்திறன் உத்தரவாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**
**எண் 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,**
**கொழும்பு 15.**



## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## பன்வில பிரதேச சபை

2023ஆம் வருடத்தில் கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தகைமையுள்ள உற்பத்தியாளர்கள், நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களைப் பதிவு செய்வதற்கு என்னால் 2022.10.10 முதல் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்வதற்கு முன்னால் தரப்பட்டுள்ள கட்டணத்துடன் நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் சங்கத்தில் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும். சேவைகளை வழங்கும்போது ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுவதுடன் அவசர வேளையில் வெளி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சேவையைப் பெற்றுக்கொள்ளும் உரிமை பிரதேச சபைக்கு உரியதாக இருக்கும். வழங்குநர்களுக்கான பதிவுக் கட்டணம் ஒரு உருப்படிக்கு ரூ. 2,000.00 ஆகும். ஒவ்வொரு உருப்படிக்கும் வேறுவேறாக பதிவுக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும் என்பதுடன் காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் மூலம் செலுத்துவதாயின் "தலைவர், பன்வில பிரதேச சபை" என்ற பெயரில் அத்தொகையைச் செலுத்துதல் வேண்டும். காசோலைகள் அல்லது வேறு விதத்தில் பணம் செலுத்தும் வேளையில் பணம் தீர்வாகும் வரை பதிவு செய்தல் இடம்பெற மாட்டாது.

விண்ணப்பங்களை பன்வில பிரதேச சபையிலிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை 2022.12.15ஆம் திகதிக்கு முன்னர் தலைமையகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். "தலைவர், பன்வில பிரதேச சபை" என்ற பெயரில் அலுவலகத்திற்கு பணம் செலுத்தி பற்றுச்சீட்டொன்றை பெற்றுக்கொள்வதன் மூலம் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தலாம்.

| ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்தவதற்கான கட்டணம் ஒப்பந்தப் பெறுமதி (ரூ) | அறவிடப்படும் கட்டணம் (ரூ) |
|---|---|
| 50000.00 வரை | 1500.00 |
| 50001 - 100000.00 வரை | 1750 |
| 100000 - 500000.00 வரை | 2750.00 |
| 5000000 - 1000000.00 வரை | 3250.00 |
| 1000000.00 - 20000000.00 வரை | 3750.00 |
| 2000001.00 - 50000000.00 வரை (C6) | 7500.00 |
| 50000001.00 - 10000000.00 (C7) | 15000.00 |
| 100000001.00 - 15000000.00 (C6) | 30000.00 |

| | வழங்கல் பொருட்கள்/ உருப்படிகள்/ சேவைகள் | 2023ஆம் ஆண்டிற்கான பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| I. | காகிதாதிகள், பத்திரிகை, சஞ்சிகை புத்தங்கள் வழங்குதல் | 3000.00 |
| II. | அச்சு வேலைகள் போஸ்டர், பதாகை, ஆவண மாதிரிகள் | 3000.00 |
| III. | அலுவலக உபகரணங்கள், மரத்தளபாடங்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள், வீட்டு மி உபகரணங்கள் | 3000.00 |
| IV. | உபகரணங்களைப் பழுதுபார்த்தல் | 3000.00 |
| V. | மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் வழங்குதல் | 3000.00 |
| VI. | நீர்க்குழாய்/ துப்புரவேற்பாட்டு உபகரணம்/ மின் உபகரணங்களை வழங்குதல் | 3000.00 |
| VII. | மின் உபகரண்ங்கள் வழங்குதல் (வயரிங் தேவைகளுக்கு) | 3000.00 |
| VIII. | வாகன உதிரிப்பாகங்கள், டயர், டியூப் வழங்குதல் | 3000.00 |
| IX. | வாகனங்களை சேர்விஸ் செய்தல் | 3000.00 |
| X. | வாகன திருத்தவேலைகள் | 3000.00 |
| XI. | கொங்கிறீட் உற்பத்திப் பொருட்கள், ஹியூம் குழாய்கள், மர வேலைப்பாடு, சிலை, கட்டிட நிர்மாணம் பொருட்கள், நிறப்பூச்சுகள் | 3000.00 |
| XII. | உணவு, சிற்றுண்டி வகை, பரிமாறும் பொருட்களை வழங்குதல் | 3000.00 |
| XIII. | சீருடை, இலச்சினை, திரைச்சீலை வழங்குதல் | 3000.00 |
| XIV. | மோட்டர் கிரேடர், மட்டமாக்கும் இயந்திரம், JCB, வெல்டிங் வேலைகள் | 3000.00 |
| XIV. | கணனி மற்றும் கணனி துணைப்பாக விற்பனை நிறுவனம்/ டோனர் | 3000.00 |
| XV. | நில அளவையாளர் சேவை சட்டத்தரணி சேவை வழங்குதல் | 3000.00 |
| XVI. | டிரேலர், கைவண்டிகள், நீர் பவுசர் விற்பனை முகவர் நிறுவனங்கள் | 3000.00 |
| XVII. | கணனி உபகரணங்கள் பழுதுபார்த்தல் | 3000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணபத்துடன் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பித்தல் கட்டாயமானது.
02. பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து விலைகள் கோரப்படும் என்பதுடன் சந்தர்ப்பத்திற்கேற்ப வெளியிலிருந்தும் விலைகளைக் கோரி பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமையை பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
03. கோரும் போது விலைகளைச் சமர்ப்பிக்காத, தருவித்தற் கட்டளையின் போது சரியான நேரத்தில், பொருட்களை ஒப்படைக்காத வழங்குநர்களின் பெயர்கள் முன்னறிவிப்பின்றி பதிவுப் பட்டியலில் இருந்து நீக்கப்படும்.
04. 2022.12.25ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

தொடர்புகள் : தொலைபேசி இல:- 081-2472028

**ஏ.ஜீ. செனவிரத்ன**
**தலைவர்,**
**பன்வில பிரதேச சபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

### இரத்மலானை பொறியியல் பீடத்தின் சுத்திகரிப்பு மற்றும் திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்தும் சேவைக்காக விலைமனுக்கள் கோருதல் (இரத்மலானை மற்றும் ராவத்தாவத்த வளாகம் மற்றும் பூங்காப் பிரதேசம் உட்பட)

**ஒப்பந்த இல. - USJP/EIS/CL/FOE/2022/2023**

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திலுள்ள திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்தல் மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக (இரத்மலானை மற்றும் ராவத்தாவத்த வளாகம் மற்றும் பூங்காப் பிரதேசம் உட்பட) தகுதி மற்றும் தகைமை வாய்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது கோருகிறார். 2022-23.
2. சேவைக் காலம் 365 நாட்களை உள்ளடக்குகின்றது.
3. இந்தக் விலைக்கோரல் செயற்பாடுகள் தேசிய போட்டி விலைக்கோரல் ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும்.
4. இது தொடர்பில் ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் / நிறுவனம் (தகவல் மற்றும் சேவைகள்) அவர்களிடமிருந்து 011-2802856 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் பின்வரும் முகவரியில் 2022-10-10ஆம் திகதி முதல் 2022-10-31ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வாரத்தின் எந்தவொரு வேலை நாளிலும் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-10-10ஆம் திகதி முதல் 2022-10-31ஆம் திகதி வரையான காலத்தில் மூவாயிரம் ரூபா (3000.00 ரூபா) மீளளிக்கப்படாத கட்டணத்தையும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றையும் செய்வதன் பேரில் முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். இக்கொடுப்பனவுகளை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வேலை நாட்களில் பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாக மட்டும் செலுத்தப்படல் வேண்டும்.
6. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்திலுள்ள பணியாட்தொகுதியினர் கூட்ட மண்டபத்தில் 2022-10-20ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.
7. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்திலுள்ள பணியாட்தொகுதியினர் கூட்ட மண்டபத்தில் 2022-11-01ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுப் படிவங்கள் திறக்கப்படும்.
8. விலைமனுப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம், விலைக்கோரலின் விபரம் மற்றும் திறக்கப்படும் திகதி என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 2022-11-01ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கங்கொடவில, நுகேகொடயில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் / நிறுவனம் (தகவல் மற்றும் சேவைகள்) அவர்களுக்கு பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கலாம் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலே விலைமனுதாரருக்கு திருப்பியனுப்பப்படும். தாமதம் தொடர்பில் தபாலில் அனுப்பப்பட்டதை உறுதி செய்யும் சாட்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி (ஒரு விலைமனுதாரருக்கு ஒரு பிரதிநிதி என்ற விகிதத்தில்) விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.
9. இது தொடர்பில் திணைக்கப் பெறுகைக் குழுவினரே இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வர்.
10. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் முதல் 2023-01-17ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
11 விலைமனுக்களுடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரின் பெயருக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட 2023-02-14ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் 112,000.00 ரூபா பெறுமதிக்கான விலைக்கோரல் பிணை முறியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
12. தெரிவுசெய்யப்பட்ட சேவை வழங்குநர் நாட்டில் நிலவும் தொழிலாளர் சட்டத்திற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

**மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு இயைபான முகவரியானது பின்வருமாறாகும்.**

**கேள்விப் படிவங்களைப் பரீட்சித்தல், கேள்விப் படிவங்களைச் சமர்ப்பித்தல், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஒப்படைத்தல்**

உதவிப் பதிவாளர் / நிறுவனம் (தகவல் மற்றும் சேவைகள் பிரிவு),
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,
கங்கொடவில, நுகேகொடை.

**விலைமனுக்கள் திறக்கப்படும் முகவரி:**

நிர்வாகக் கட்டிடத்தின் பணியாட்தொகுதியினர் கூட்ட அறை,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,
கங்கொடவில, நுகேகொடை.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.**
2022-10-07

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

# 16வது வெளிவாரி பட்டமளிப்பு விழா

### புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்வதற்காக தகுதி வாய்ந்த நிறுவனத்தை தெரிவுசெய்தல்

2022 நவம்பர் மாதம் 20ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நிகழவுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 16வது வெளிவாரி பட்டமளிப்பு விழாவில் சுமார் 1500 பட்டதாரிகளை புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்தல் வேலைக்காக தகைமை வாய்ந்த நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

1. இதற்காக தெரிவு செய்யப்படும் புகைப்படக் கலைஞர் / நிறுவனம் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அல்லது அதற்குச் சமமான விழாக்களில் புகைப்படமெடுத்தல் தொடர்பில் ஆகக்குறைந்தது 05 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் புகைப்படக் கலைஞர் / நிறுவனத்திற்கு பட்டதாரிகள் அசௌகரியப்படாத வகையில் முறையாக மற்றும் போதுமான அளவு புகைப்படங்களை எடுப்பதற்கு பட்டமளிப்பு விழா நடைபெறும் நாளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தின் பிரதான மண்டபத்திற்கு வெளியே ஆகக் குறைந்தது 10 புகைப்படமெடுக்கும் கூடாரங்களை வழங்குவதற்கான இயலுமை கட்டாயம் இருத்தல் வேண்டும்.
3. இதில் ஆர்வமுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்கள் வேலை நாட்களில் அலுவலக நேரத்தினுள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் / நிறுவனங்கள் (தகவல் மற்றும் சேவைகள்) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் கேள்வி கோரல் படிவங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொலைபேசி இல. 011-2802856)
4. கேள்விப் படிவங்களை பல்கலைக்கழகத்தின் சிறாப்பர் கருமபீடத்திலிருந்து 2022-10-10ஆம் திகதி முதல் 2022-10-28ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை மீளளிக்கப்படாத 1000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
5. இது தொடர்பான கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2022-10-18ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிடத்திலுள்ள பணியாட்தொகுதியினர் கூட்ட மண்டபத்தில் இடம்பெறும். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளுதல் கட்டாயமாகும்.
6. அனைத்து விண்ணப்பதாரர்களும் கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது 25,000.00 ரூபா மீளளிக்கப்படும் வைப்புத் தொகையொன்றை பல்கலைக்கழகத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.
7. இரு நகல்களில் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை மாதிரிகளுடன் 2022-10-31ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கேள்விப் படிவங்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறான இரு உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் தனியொரு உறையில் இட்டு அந்த மூன்று உறைகளின் இடதுபக்க மேல் மூலைகளிலும் ''16வது வெளிவாரி பட்டமளிப்பு விழாவில் புகைப்படமெடுத்தல் - 2022'' எனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்து உதவிப் பதிவாளர் / நிறுவனங்கள் (தகவல் மற்றும் சேவைகள்), ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொடை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் / நிறுவனங்கள் (தகவல் மற்றும் சேவைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
8. நகல் பிரதியானது மூலப் பிரதியின் சான்றுப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதியாகவிருத்தல் வேண்டும்.
9. 2022-10-31ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பணியாட்தொகுதியினர் கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இவ்வேளையில் கலந்து கொள்ளலாம்.
10. முழுமையற்ற மற்றும் பிந்திக் கிடைக்கும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. தாமதம் தொடர்பில் தபாலில் அனுப்பப்பட்டதை உறுதி செய்யும் சாட்சிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**பதிவாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில, நுகேகொடை.**
2022-10-06.

## சியம்பலாண்டுவ பிரதேச சபை

# வாரச் சந்தை பெறுகை அறிவித்தல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாரச் சந்தைகளில் 2023 ஜனவரி 01ஆம் திகதி முதல் 2023 டிசம்பர் 31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு வரிகளை அறவிடும் உரிமையை வழங்குவற்கான பெறுகைகள் கோரப்படுகின்றன.

இதன்பொருட்டான பெறுகை கோரல் படிவங்களை 2022-10-11ஆம் திகதி முதல் 2022-10-31ஆம் திகதி வரையில் பி.ப. 1.00 மணி வரை சியம்பலாண்டுவ பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பெறுகைப் விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்யலாம் அல்லாவிடில் அலுவலகத்தின் பெறுகைப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிட்டு பெறுகைகளைச் சமர்ப்பிக்கலாம். 2022-11-01ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

01. பிரதேச சபையினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் மொனராகலை மாவட்டத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட தொண்டர் அமைப்புகள் மட்டுமே விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம்.

02. விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும்போது குறித்த வாரச் சந்தையை கொண்டு நடாத்துவதற்கு போதுமான வருமானம் உள்ளதென்பதற்காக பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட வருமானச் சான்றிதழ் அல்லது சொத்துச் சான்றிதழ் மூலம் விலைமனுதாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறே தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக தேசிய அடையாள அட்டை மற்றும் வதிவிடத்தை நிரூபிப்பதற்காக அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம சேவையாளரின் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. அட்டவணை

| தொ. இல. | வாரச் சந்தையின் பெயர் | மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப்படும் பெறுகை வைப்புத் தொகை (ரூபா) | ஆகக் குறைந்த விலைக்கோரல் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | சியம்பலாண்டுவ வாரச் சந்தை | 5,000.00 | 25,000.00 | 3097200.00 |
| 02 | தொம்பகஹவெல வாரச் சந்தை | 5,000.00 | 25,000.00 | 4506000.00 |
| 03 | பல்லேவெல வாரச் சந்தை | 5,000.00 | 25,000.00 | 3217200.00 |
| 04 | அத்திமலே வாரச் சந்தை | 5,000.00 | 25,000.00 | 1933200.00 |

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் அலுவலகத்திற்குச் சமுகம் தந்தோ அல்லது 055-5672776, 055-2279166, 055-2279171 எனும் தொலைபேசி எண்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**டப்.பீ. சமன் வர்ணகுலசூரிய,**
**தலைவர்,**
**சியம்பலாண்டுவ பிரதேச சபை.**

**2023-10-10ஆம் திகதி.**

## கொத்மலை பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

### 2023ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்குதல்

கொத்மலை பிரதேச சபைக்குரித்தான இங்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபார நிலையம், காணி, மலசலகூடம் மற்றும் விற்பனை உரிமையை 2023-01-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் 2022-11-01ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விப் படிவங்கள் திறக்கப்படும்.

உரிய வகையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை இரு பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறு உறையில் இட்டு அதன் வெளிப்பும் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். அந்த இரு உறைகளில் இடதுபக்க மேல் மூலையில் சமர்ப்பிக்கப்படும் கேள்வி தொடர்பான விபரங்களைக் குறிப்பிட்டு மற்றும் கடித உறையின் இடதுபக்க கீழ் மூலையில் கேள்விதாரரின் பெயர் மற்றும் முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் படிவங்களை ''தலைவர், கேள்விச் சபை, கொத்மலை பிரதேச சபை, பூண்டுலோயா'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து பூண்டுலோயா பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

கேள்விப் படிவங்களை 2022-10-10ஆம் திகதி முதல் 2022-10-31ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரையில் குறித்த கேள்விப் பிணை மற்றும் படிவக் கட்டணத்தை (பின்வருமாறு காட்டப்பட்டுள்ள வகையில்) செலுத்தியதன் பின் இந்த அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் விண்ணப்பப் படிங்களைப் பெற்றுக்கொள்ளும்போது கேள்வி விண்ணப்பதாரரினால் தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். இந்த ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் கேள்வித் தொகை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளுக்கும் உட்படும்.

மேலும் இறைச்சிக் கடைகளுக்கான இறைச்சியை அனுமதிக்கப்பட்ட கொலைக்களத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட குத்தகைதாரர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இது தொடர்பிலான மேலதிக விபரங்களை வார நாட்களில் அலுவலக நேரங்களினுள் கொத்மலை பிரதேச சபை பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்து அல்லது 051-2233227 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு விசாரித்தறியலாம்.

| தொ. இல. | ஆதனத்தின் / விற்பனை உரிமையின் பெயர் | கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | பூண்டுலோயா மாட்டிறைச்சிக் கடை | 2000.00 | 2,286,000.00 | 114,300.00 |
| 02 | மாட்டிறைச்சி விற்பனை உரிமை குத்தகைக்கு வழங்குதல் - ஹெல்பொடை / தவலந்தென்னை | 1000.00 | 220,000.00 | 11,000.00 |
| 03 | மாட்டிறைச்சி விற்பனை உரிமை குத்தகைக்கு வழங்குதல் - ஹப்புகஸ்தலாவ | 1000.00 | 375,000.00 | 18,750.00 |
| 04 | ஆட்டிறைச்சிக் கடை - பூண்டுலோயா | 1000.00 | 150,500.00 | 7,525.00 |
| 05 | பூண்டுலோயா மீன் கடை - 01 (புதிய வாரச்சந்தை இடப்பரப்பு) | 2000.00 | 696,000.00 | 34,800.00 |
| 06 | பூண்டுலோயா மீன் கடை - 02 (புதிய வாரச்சந்தை இடப்பரப்பு) | 2000.00 | 725,000.00 | 36,250.00 |
| 07 | மீன் விற்பனை உரிமையை குத்தகைக்கு வழங்குதல் - ஹப்புகஸ்தலாவ | 1000.00 | 112,500.00 | 5,625.00 |
| 08 | கெட்டபூலா மீன் தட்டை குத்தகைக்கு வழங்குதல் | 1000.00 | 42,500.00 | 2,125.00 |
| 09 | தவலந்தென்னை மீன் தட்டை குத்தகைக்கு வழங்குதல் | 1000.00 | 136,900.00 | 6,845.00 |
| 10 | மீன் விற்பனை உரிமையை குத்தகைக்கு வழங்குதல் - கொரக்கஓய | 1000.00 | 32,000.00 | 1,500.00 |
| 11 | உலப்பனை காணி | 200.00 | 7,500.00 | 1,000.00 |
| 12 | பொது மலசலகூடம் - பாலுவத்த | 200.00 | 12,000.00 | 1,000.00 |
| 13 | பொது மலசலகூடம் - புதிய நகரம், கொத்மலை | 200.00 | 80,000.00 | 2,000.00 |
| 14 | பொது மலசலகூடம் - பூண்டுலோயா | 200.00 | 120,000.00 | 2,000.00 |
| 15 | பொது மலசலகூடம் - ஹப்புகஸ்தலாவ | 200.00 | 15,500.00 | 1,000.00 |
| 16 | பொது மலசலகூடம் - தவலந்தென்னை | 200.00 | 12,000.00 | 1,000.00 |
| 17 | பூண்டுலோயா வாரச்சந்தை சிற்றுண்டிச்சாலை | 500.00 | 48,000.00 | 2,400.00 |
| 18 | பூண்டுலோயா உத்தேச பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள கடை அறை இல. 01 | 500.00 | 96,000.00 | 4,800.00 |
| 19 | பூண்டுலோயா உத்தேச பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள கடை அறை இல. 02 | 500.00 | 120,000.00 | 6,000.00 |
| 20 | பூண்டுலோயா உத்தேச பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள கடை அறை இல. 03 | 500.00 | 96,000.00 | 4,800.00 |
| 21 | ரம்பொட புதிய விற்பனை நிலைய 03 கடை அறைகள் (ஹெல போஜுன் சாலைக்கு அருகில்) | 500.00 | 60,000.00 | 3,000.00 |

**2022-10-05ஆம் திகதி**
**கொத்மலை பிரதேச சபை அலுவலகத்தில்**

**சுசந்த பிரதீப் குமார ஜயசுந்தர,**
**கேள்விச் சபையின் தலைவர் மற்றும் தலைவர்,**
**கொத்மலை பிரதேச சபை.**

SUNDAY OBSERVER adZ தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| ரூ. 500/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 700/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 950/- |

- ISLANDWIDE -

MONARAGALA
MONARAGALA ........ 077 6 565 653
SRI RAMYA STORES, NO 19, 20, MONARAGALA.

MATARA
MATARA ........ 047 2 230 093
NILMINI STORE - NO 69, DHARMAPALA MAWATHA, MATARA

ANURADAPURA
THABUTTEGAMA ........ 025 2 276 431
MUTHUKUDA PAPER CORNER - No 86, Thambuttegama

ANURADHAPURA ........ 025 2 221 411
MAHAJANA BOOK SHOP - Anuradhapura

ANURADHAPURA ........ 025 2 222 806
SATHSARA BOOK SHOP - 40, JAYANTHI MAWATHA, ANURADHAPURA

ANURADHAPURA ........ 025 2 222 575

RATHNAPURA
RATHNAPURA ........ 071 2 900 35
NO 35, CHURCH ROAD, RATNAPURA

RATHNAPURA ........ 045 2 223 883
LAKE HOUSE ADVERTISING CENTER - NO 83, MAIN STREET, RATNAPURA

HAMBANTHOTA
MIDDENIYA ........ 047 2 27 245
SOMASIRI STORES - HUNGAMA ROAD, MIDDENIYA.

TANGALLE ........ 047 2 240 402

HAMBANTOTA ........ 077 0 051 975

AMBALANTOTA ........ 047 2 223 152
SUMITHRA TRADE CENTER - NO 11, MAIN STREET, AMBALANTOTA.

TISSAMAHARAMA ........ 047 2 239 088
T.D. MADANAYAKE & COMPANY (PVT) LTD - MAIN STREET, TISSAMAHARAMA

BATTICALO
KATHTHANKUDY ........ 077 7 435 566
A.L.M. UMAIS, OLD POST OFFICE BUILDING., KATHTHANKUDY.

BATTICALA ........ 065 2 226 034

POLONNARUWA
POLONNARUWA ........ 077 9 627 542
PARAKUM BOOK SHOP - HOSPITAL JUNCTION, POLONNARUWA.

KADURUWELA ........ 076 4 201 263
GALLE CITY STORES - KADURUWELA, POLONNARUWA

KANDY
HIDAGALA ........ 081 3 813 666
ANURA STORES - BOLUWA ROAD, HINDAGALA,

KANDY ........ 081 2 222 780
JAYAKODY TRADERS (PVT) LTD - NO.229/A, PERADENIYA ROAD, KANDY.

GAAMPOLA ........ 081 2 354 994
DAMMIKA CENTER - NO.14., STATION ROAD., GAMPOLA.

NAWALAPITIYA ........ 077 3 039 996
CHEAP SIDE BOOK SHOP - NO 46, GAMPOLA ROAD, NAWALAPITIYA

MATHALE
MATALE ........ 066 5 671 304
MALAKA TRADERS (PVT) LTD - NO.55-57, MAIN STREET, MATALE

NUWARA ELIYA
N.ELIYA ........ 052 2 234 660
NO 06., NEW MARKET BUILDING., NUWARA ELIYA

KEGALLA
KEGALLA ........ 035 2222427
SALGADO BAKERY & HOTEL - KEGALLE

KEGALLA ........ 035 2 221 721
RED ROSE BOOK SHOP - NO.252/B., MAIN STREET, KEGALLE

BADULLA
BANDARAWELA ........ 071 0 796 060
NAYANA BOOK SHOP - NO 343, BANDARAWELA

BADULLA ........ 055 2 225 616
ADVERTISING OFFICE (LAKE HOUSE) - NO. 14, BADULLA

DEMODARA ........ 055 2 225 616
ADVERTISING AGENCY - NEAR MUTHIYANGANA CLOCK TOWER, BADULLA.

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

# இலங்கை முதலீட்டுச் சபை
## பெறுகை அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள பெறுகைக்கான விலைமனுக்களுக்கான அழைப்பானது 2022 ஒக்டோபர் 8 ஆம் திகதியன்று ''டெயிலி நியுஸ்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் **www.investsrilanka.com** என்ற இலங்கை முதலீட்டுச் சபையின் இணையதளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**இலங்கை முதலீட்டுச் சபையின் தகுதியுள்ள ஊழியர்களுக்காக சீருடை துணிகளை வழங்குவதற்கான அழைப்பு**

**ஒப்பந்த இல.: BOI/S&S/Q/087/2022**

இப்பெறுகை தொடர்பான விலைமனுக்கோரல் ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ''டெயிலி நியுஸ்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்திற்கமைவாகவும் **www.investsrilanka.com** என்ற இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கமைவாகவும் செயற்படலாம்.

விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை நிருவாகத்திற்கான சிரேஷ்ட பிரதி பணிப்பாளரிடமிருந்து 011 2543041/074 1531432 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

---

ஆரச்சிகட்டுவ பிரதேச சபை

## 2023ஆம் ஆண்டிற்கான வரைவு வரவு செலவு அறிக்கையை பரிசீலனை மேற்கொள்ளல்

2023ஆம் ஆண்டிற்கான ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் வரைவு வரவு செலவு அறிக்கையானது பொது மக்களின் பரிசீலனைக்காக 2022 ஒக்டோபர் 07 முதல் நவம்பர் 08 வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

**கே. தெச்சனாமூர்த்தி**
**தலைவர்,**
**பிரதேச சபை,**
**ஆரச்சிகட்டுவ.**
**தொலைபேசி: அலுவலகம்: 032 2259783**

---

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

---

## சிறு விளம்பரம்



it's what you want
www.adz.lk

வேலைவாய்ப்பு

318



**வெற்றிடங்கள்**
**டிரைவர்கள்**

கொள்ளுபிட்டிய/ வெள்ளவத்தை வீ ட்டில் தங்கி ஒடோ (Auto) கார் ஓட்டக்கூடிய கொழும்பு பாதைகள் பற்றி நல்ல அனுபவமுடைய 4060 வயதுக்கு இடைப்பட்ட சாரதிகள் (Drivers) தேவை. நல்ல சம்பளத்துடன் இலவச தங்குமிட வசதி அல்லது தினமும் காலை வந்து இரவு வேலையை முடித்து வீட்டுக்குச் செல்ல முடியும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை . தொ. பே. இல. 07 6 6200300 059217

---

**பெயர்மாற்றம்**

இலக்கம் 317, அல்ஹிலால் வீதி, சாய்ந்தமருது - 15ல் வசிக்கும் றா.அஹமத்ஸகீ ஆகிய நான் எனது சொந்த விருப்பத்தின்பேரில் எனது பெயரை றா.அஹமட்ஸஹீ என மாற்றி உள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் றா. அஹமட் ஸஹீ என கையொப்ப மிடுவென் என்பதையும் இத்தால் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.
றா.அஹமட்ஸஹீ

---

# கேள்வி அறிவித்தல்
## தம்புள்ளை பிரதேச சபை
## குத்தகைக்கு வழங்குதல் - 2023

தம்புள்ளை பிரதேச சபைக்கு உட்பட்ட சீகிரிய புதிய நகரத்திலுள்ள வாகன தரிப்பிடத்தில் வாகனங்களுக்கான கட்டணத்தை அறவிடும் உரிமையை 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் திகதி வரையிலான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2022.10.31 ஆம் திகதி செவ்வாய் கிழமை பி.ப. 1.30 மணி வரை முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் "கௌரவ தவிசாளர், தம்புள்ள பிரதேச சபை, சீகிரிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலோ இடலாம்.

பிரதேச சபைக்கு கொடுக்கப்பட வேண்டிய குறைவு தொகையை செலுத்த வேண்டியவர்களுக்கும் பிரதேச சபையினால் தடை செய்யப்பட்ட நபர்களுக்கும் மற்றும் அவர்களது இரத்த சொந்தங்களுக்கும் விண்ணப்பிக்க முடியாது. அவ்வாறானவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**கேள்வி கோரல்கள் விண்ணப்பங்கள் வெளியிடுதல்:**

2022.10.10ஆம் திகதி முதல் 2022.10.28ஆம் திகதி பி.ப 03.00 மணி வரை (அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் மு.ப 09.00 மணி முதல் பி.ப 03.00 மணி வரை) அலுவலகத்தில் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்கள் கோரல் 2022.10.31 ஆம் திகதி பி.ப 01.30 மணியுடன் முடிவடையும்.

கிடைக்கப்பெற்ற கேள்வி அறிவித்தல்கள் 2022.10.31 ஆம் திகதி செவ்வாய் கிழமை பி.ப 2.00 மணிக்கு பிரதேச சபை கேட்போர் கூடத்தில் கேள்வி அறிவித்தல் குழு மூலம் திறக்கப்படும்.

**கட்டணங்கள் பற்றிய விபரம்**

| விபரம் | வருடாந்த ஆகக் குறைந்த குத்தகை | மீண்டும் செலுத்தப்படும் குத்தகை பிணை வைப்புத் தொகை | கேள்விப் பத்திரங்களுக்கான கட்டணங்கள் |
|---|---|---|---|
| சீகிரிய புதிய நகரத்திலுள்ள தரிப்பிடத்தில் தரித்து நிற்கும் வாகனங்களுக்கான கட்டணத்தை அறவிடுதல் | ரூ.2,500,000.00 | ரூ.10,000.00 | ரூ.1,000.00 |

(மேற்குறிப்பிட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக அரசவரிகளும் அறவிடப்படும்.)

மேலதிக விபரங்களுக்கு - 066-2053250 (காரியாலயம்)

2022.10.07

**கே.ஜீ.சோமதிலக**
**கௌரவ தலைவர்,**
**தம்புள்ள, பிரதேச சபை**
**சீகிரிய.**

---

# சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை வெலிசறை
## பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023

2023ஆம் ஆண்டில் கீழ்குறிப்பிடப்படும் பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக இலங்கைப் பிரசைகளான வழங்குநர்கள்/பதிவு செய்யப் பெற்றுள்ள வணிகக் கம்பனிகள்/ கூட்டுறவுச் சங்கங்கள்/ கூட்டுத்தாபனங்கள் உட்பட அரச நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. அனைத்து விண்ணப்பங்களும் 2022 நவம்பர் 10 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு 'பணிப்பாளர் சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை வெலிசறை' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் '2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்' எனக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**(அ) வழங்கல்கள்**

1. அச்சு இயந்திரங்கள்/ ரோணியோ இயந்திரங்களிற்கு தேவையான ரிபன்/ டோனர்/ காட்ரிஜ் உட்பட அலுவலக எழுது கருவிகள்
2. இரும்பு/ மரத்தளபாடங்கள் மற்றும் அலுவலாக உபகரணங்கள்
3. கணனி இயந்திரங்கள்/ தொலைநகல் இயந்திரங்கள்/ நிழற்பட பிரதியிடல் இயந்திரங்கள்/ரோணியோ இயந்திரங்கள்/ டுப்ளோ இயந்திரங்கள் மற்றும் கணனி மென் பொருட்கள், வன்பொருட்கள் போன்ற துணை உறுப்புக்கள்
4. மெத்தைகள்/ தும்புத்தடிகள்/ கூட்டுமாருகள்/ தூரிகைகள் மற்றும் அனைத்து வகையான தும்பு/ இறப்பர் கலவை உற்பத்திகள்
5. சுகாதாரப் பாதுகாப்பு நுகர்வோர் பதார்த்தங்கள்/ கழிவகற்றல் பொலித்தீன் உறைகள்/ Luch sheets/ உணவு பொதியிடல்களிற்கான வெள்ளைக் கடதாசி போன்றவை
6. ஹாட்வெயார் பண்டங்கள் (இரும்பு, நீர்க்குழாய்/ கட்டிட உபகரணங்கள் மற்றும் மின் உருப்படிகள் உட்பட)
7. வாகன உதிரிப்பாகங்கள்/டயர்/டியூப் மற்றும் பொட்டறிகள்
8. பெயர்ப்பலகைகள் மற்றும் அறிவித்தல் பலகைகள்
9. மின்சாரத் துணை உறுப்புக்கள் மற்றும் உபகரணங்கள் (வளிச்சீராக்கி இயந்திரங்கள், குளிரூட்டிகள் மற்றும் மின் விசிறிகள் உட்பட மின்சார சாதனங்கள்)
10. அச்சு வேலைகள்/ (மருந்து உறைகள்/ எக்ஸ்கதிர்படிவங்கள் C.T. படிவங்களை அடக்கும் உறைகள்/ கார்ட்போட் உமிழ்நீர் துப்பும் கலம்/ ஆய்வுகூட அறக்கைப் பிரதிகள் போன்றவை)
11. பாதணிகள்/(Boots மற்றும் CANVASS)/செருப்புகள்/ ரெக்சின் மற்றும் இறப்பர் உற்பத்திகள்
12. வைத்தியசாலைத் துணிமனிகள்/கட்டில் விரிப்புக்கள் கட்டமிடப்பட்ட துணிவகைகள் நுளம்பு வலைகள், துவாய்கள், திரைச்சீலைகள்/ சீருடைகள் போன்றவை
13. பிணியாளர் காவி, ட்ரொளி, சக்கர நாட்காலிகள், சேலைன் ஸ்டேண்ட், உணவு ட்ரொளிகள் போன்ற உபகரணங்கள்
14. ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சைக்கான நுகர்வோர் பதார்த்தங்கள்
15. கதிர்வீச்சுப் பிரிவுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள்
16. ஆய்வு கூடத்திற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் நுகர்வோர் பதார்த்தங்கள்

**(ஆ) சேவைகள்**

17. அலுவலக உபகரணங்களை சர்விஸ் செய்தல்/ புதுப்பித்தல் போட்டோ கொப்பி இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள், கணனி, தட்டச்சுக்கள், தொலைநகல் இயந்திரங்கள் போன்றவை
18. அனைத்து வகையான வாகனங்களினதும் புதுப்பித்தல்கள், வாகன வளிச்சீராக்கிகள் மற்றும் மின் தொகுதிகளின் புதுப்பித்தல்கள் பூச்சு வேலைகள் மற்றும் சேவை செய்தல்கள்
19. இரும்பு/ மரத்தளபாடங்களின் புதுப்பித்தல்கள் (பிரம்புக் கதிரைகளை வேய்தல் உட்பட)
20. இரும்புக் கட்டில்கள்/பிணியாளர் காவி/ சக்கர நாற்காலிகள்/சேலைன் நிறுத்திகள் போன்ற மருத்துவ உபகரணங்களின் புதுப்பித்தல்கள்
21. குளிரூட்டிகள் மற்றும் வளிச்சீராக்கிகளின் சேவைகள் மற்றும் புதுப்பித்தல்கள்
22. மின் உபகரணங்களைப் புதப்பித்தல்கள்
23. மின் சுற்றுக்கள்/ மின் கம்பிகள் மற்றும் மின் வழங்களுடன் தொடர்புள்ள புதப்பித்தல்கள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
24. பிரேத அறையின் குளிரூட்டிகளைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
25. வாயு அடுப்புக்களைப் புதுப்பித்தல்
26. உரிமை கோரப்படாத பிரேதங்களை அடக்கம் செய்தல்
27. மின் பிறப்பாக்கிகளைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்கள்
28. இறப்பர் முத்திரைகளைத் தயாரித்தல்

02. ஒவ்வொரு உருப்படிக்கும் மற்றும் சேவைகளிற்காக பின்வரும் மாதிரிப்படிவத்தின் பிரகாரம் A4 காகிதத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் 2023**
**சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசறை**

1. வழங்குநரின்/ ஒப்பந்தக்காரரின் பெயர்
2. முகவரி
3. தெலைபேசி இலக்கம். நடமாடும்/நிலையான (கட்டாயம்)
4. தொலைநகல் இலக்கம்
5. மின்னஞ்சல் முகவரி
6. சமூக ஊடகத் தொலைபேசி இலக்கம் (உ+ம் WhatsAPP)
7. விண்ணப்பிக்கும் வழங்கல்/சேவைக்கான தொடர் இலக்கம்
8. வியாபாரத்தின் பெயர்
9. வியாபாரத்தின் முகவரி
10. வியாபாரப் பதிவு இலக்கம்
(விண்ணப்பிக்கும் சேவைக்கான/ வழங்கலிற்கான வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று கண்டிப்பாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)
11. வழங்குநர்களின் தன்மை (வர்த்தக முகவர்/விநியோகத்தர்/உற்பத்தி நிறுவனம்/பிரதிநிதிகள்)
12. கடன் வசதிகள் காலவரை/ கடன் வசதிகள் தொகை மற்றும் ஏற்றி இறக்கல் வசதிகள் வழங்கல் தொடர்பான விபரங்கள்
13. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு/ காசுக்கட்டளை இலக்கம் மற்றும் தொகை
14. திகதி
15. வியாபாரப் பணிப்பாளர்/முகாமையாளரின் கையொப்பம்

03. விண்ணப்பதாரர்கள் தாம் பதிவு செய்துகொள்ள விரும்பும் ஒவ்வொரு பண்டத்திற்கும்/ சேவைக்குமாக ஒவ்வொரு உருப்படிக்கும் மீளளிக்கப்படாத ரூபா 700.00 இற்கான தொகையை வைப்புச் செய்தல் வேண்டும். அத்தொகையானது ராகம பிரதான தபால் அலுவலகத்தில் மாற்றிக் கொள்ளக் கூடியவாறு பணிப்பாளர், சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை, வெலிசறை என்ற பெயரில் பெற்றுக் கொள்ளப்பட்ட காசுக்கட்டளையொன்றாக அல்லது காசாகச் செலுத்தி இவ்வைத்தியசாலையின் கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டின் பிரதியொன்று விண்ணபத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். காசேலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. பதிவு செய்து கொள்ளும் வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுவதுடன் அங்கிகரிக்கப்பட்ட ஏனைய வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படலாம். விலைமனுக்களைக் கோருகையில் உடன்பட்ட நிபந்தனைகளிற்கமைவாகப் பண்டங்கள்/ சேவைகளை வழங்கத்தவறும் வழங்குநர்களிற்கு எந்தவித முன்னறிவித்தலுமின்றி அவர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும். மேலும் இரண்டிற்கு மேற்பட்ட முறைகள் விலை மனுக்களைச் சமர்ப்பிக்காத நிறுவனங்கள்/ நபர்கள் மீண்டும் விலைமனுக்களைக் கோருவதற்கு தகுதியற்றவர்களெனக் கணிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

05. கேட்கப்பட்டுள்ள தகவல்களை வழங்கத் தவறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. சேவை வழங்கல்களிற்காக வைத்தியசாலைக்கு அண்மித்த பிராந்திய அதிகாரப் பிரிவின் (கம்பஹா, வத்தளை, ஜா-எல, ராகம, வெலிசறை, நீர்கொழும்பு போன்ற) சேவை வழங்குநர்களிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**பணிப்பாளர்,**
**சுவாச சோய்களுக்கான தேசிய வைத்தியசாலை,**
**வெலிசறை,**
**தெலைபேசி இல. 011-2958271 நீடிப்பு 111/112**

---

# கொத்மலை பிரதேச சபை
## 2023 ஆம் ஆண்டிற்கு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

01. 2023 ஆம் ஆண்டிற்கு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள், கட்டிட அமைப்பாளர்கள் பதிவு செய்து கொள்ளல் விண்ணப்பபடிவம் கோரப்படுகின்றது.
02. விண்ணப்பப் படிவம் 2022.12.31 ஆம் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ குறிப்பிட்ட விண்ணப்பப் படிவம் பூரணப்படுத்தி தலைவர், கொத்மலை பிரதேச சபை - பூண்டுலோயா என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பபடுவதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் -2023 என குறிப்பிடப்பட வேண்டும்.
03. தங்களால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பத்திற்கு அமைவான சான்றிதழ்களது பிரதி (அனைத்து விடயம் அடங்கலாக ) இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
04. தங்களது கொடுப்பனவினை தலைவர் -கொத்மலை பிரதேச சபை எனும் பெயரிற்கு பணக் கட்டளை மூலமாமகவோ அல்லது காசோலை மூலமாகவோ அல்லது காரியாலயத்திற்கு வருகை தந்து செலுத்த முடியும்.

| தொடர் இல | வழங்கல் பொருள் /சேவை | பதிவு கட்டணம் |
|---|---|---|
| 01 | அனைத்து காரியாலய உபகரணங்கள் மற்றும் கடிதப் பொருட்கள் | 1500.00 |
| 02 | காரியாலய உபகரணங்கள், தகர அலுமாரி, கெபினட், பிளாஸ்டிக் கதிரை மற்றும் ஏனையவை | 1500.00 |
| 03 | அனைத்து அச்சிடல் வேலைகள் | 1000.00 |
| 04 | உணவு பொருள் விநியோகம் | 1000.00 |
| 05 | ஒலிபெருக்கி இயந்திரம் மற்றும் பாகங்கள் | 750.00 |
| 06 | கணனி,கணனி உபகரணங்கள் (டோனர்) CD/DVD, ரிபன் போன்றவை | 1000.00 |
| 07 | கணனி உபகரணங்கள் ரயிடர் அச்சு இயந்திரம் ரோனியோ இயந்திரம் | 1000.00 |
| 08 | தெரு மின்னினைப்பிற்கு தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் அலுமினியம் ஏணி போன்றவை | 500.00 |
| 09 | றப்பர் சீல், பெயர் பலகை, தின குறியீடு, அறிவித்தல், பெனர் | 1000.00 |
| 10 | சுத்திகரிப்பு பொருட்கள் தும்புதடி, ஈக்கிள்கள், மொப், சவல், கழிவுக் கூடை, குழாய், கழிவு கரத்தை, கழிவு வண்டி, மலசல கூட பிரஸ், கிருமிநாசினி, வாளி போன்ற சுகாதார பொருட்கள் | 1000.00 |
| 11 | வாகன டயர், டியுப், பெட்டரி | 1000.00 |
| 12 | மோட்டார் வாகன பாகங்கள் (டீசல், பெட்ரோல்) | 1000.00 |
| 13 | துணிவகைகள், சீருடை மற்றும் தேவையான துணி பட்டன், மழை கோட், பூட்ஸ், பாதணி போன்றவை | 500.00 |
| 14 | கொங்கிறீட் வேலைகள் (கொங்கிறீட் தூண், சீமெந்தி கல் போன்ற கொங்கிறீட் உற்பத்தி) | 750.00 |
| 15 | கருங்கல், ஆற்றுமணல், செங்கற்கள், இரும்பு, சுண்ணாம்பு, விறகு, பலகை, சீமெந்தி, போன்ற கட்டிட பொருட்கள் போன்றவை | 750.00 |
| 16 | கிருமிநாசினி பொருட்கள் | 1000.00 |
| 17 | தொழிநுட்ப உபகரணங்கள் மரம் வெட்டும் இயந்திரம், மரம் இழுக்கும் இயந்திரம், புல் வெட்டும் இயந்திரம் போன்றவை | 1000.00 |
| 18 | சமையலறை உபகரணங்கள் (பெரிய அளவிலான சாஸ்பான், பீங்கான் ,கண்ணாடி கிளாஸ் போன்றன) | 750.00 |
| 19 | விசிறி கத்தி மண்வெட்டி, முள், மேசைகரண்டி உபகரணம் | 750.00 |
| 20 | நீர் பாசனம், நீர் கொள்கலன் | 750.00 |
| 21 | கூறை, பலகை, பறாலை | 750.00 |
| 22 | சீருடை தையல் | 750.00 |
| | **சேவைகள்** | |
| 01 | வாகனம் சர்விஸ் செய்தல் | 1000.00 |
| 02 | வாகனம் திருத்துதல் | 500.00 |
| 03 | காரியாலய இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் சர்விஸ் செய்தல் (கணனி, ரயிடர், அச்சு இயந்திரம், ரோணியோ இயந்திரம்) | 500.00 |
| 04 | கணனி உபதேச சேவை | 500.00 |
| 05 | மின் உபகரணங்கள் திருத்துதல் | 500.00 |
| 06 | சுத்திகரிப்பு பொருட்கள் திருத்துதல், வேல்டின் வேலைகள் கதவு, கேட் போன்றவை | 1000.00 |
| 07 | நீதி மற்றும் சட்டதரணி சேவை | 1000.00 |
| 08 | அளவீட்டு சேவை | 1000.00 |
| 09 | கழிவு அகற்றும் இயந்திரம் (Gully service) | 1000.00 |
| 10 | நீர் மோட்டர் திருத்துதல் | 500.00 |
| 11 | ஆபத்தான மரங்கள் வெட்டுதல் | 500.00 |
| 12 | சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டிட வரைபடம் வரைதல் | 1000.00 |
| **தொடர் இல** | **அமைப்பீட்டு ஒப்பந்தக்காரர்கள்** | **பதிவு கட்டணம்** |
| 01 | ரூபாய் 50000.00 வரை | 500.00 |
| 02 | ரூபாய் 50001.00 தொடக்கம் 100000.00 வரை | 1000.00 |
| 03 | ரூபாய் 100001.00 தொடக்கம் 500000.00 வரை | 1500.00 |
| 04 | ரூபாய் 500001.00 தொடக்கம் 1000000.00 வரை | 2000.00 |
| 05 | ரூபாய் 1000000.00 தொடக்கம் 2000000.00 வரை | 2500.00 |
| 06 | ரூபாய் 2000000.00 மேல் | 3500.00 |

**பொது நிபந்தனைகள்**

01. தேவையான சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் தவிர்ந்த ஏனைய வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களது சேவை பெறும் அதிகாரம் சபைக்குள்ளது.
02. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் குறிப்பிட்ட நேரத்திலோ மற்றும் முறையான தகவல்களை வழங்காதவிடத்து எவ்வித அறிவித்தலுமின்றி வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
03. சபைக்கு வழங்கும் சேவைக்கு முற்பணம் கோரும் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களினை பதிவு செய்யப்பட மாட்டாது.
04. குறைந்த பட்சம் 60 நாட்களுக்கான காலத்துக்கு கடன் வசதி கொடுக்கப்பட வேண்டும்.
05. ஒப்பந்தக்காரர்கள் பதிவதற்கு விண்ணப்பிக்கும் தகைமை மற்றும் சொத்து விபரம் விண்ணபத்துடன் ஒப்பந்தம் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட இக்டாட் பதிவு மற்றும் மத்திய மாகாண சபையின் பதிவு சான்றிதழ் இருத்தல் வேண்டும். கொத்தமலை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பதிவுடையவருக்கு முதலிடம் வழங்கப்படுவதுடன் அனுபவ சான்றிதழ் முன்வைக்கப்பட வேண்டும்.
06. வெட் வரி சம்பந்தமாக பதிவு இருப்பின் அச்சான்றிதழினது பிரதி முன்வைக்கப்பட வேண்டும்.
07. பிரதேச சபை சட்டம் மற்றும் முதல் நீதி மற்றும்அரசினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் விதிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுக்கும் உடன் பட வேண்டும்.

**எஸ்.பீ.கே.ஜயசுந்தர,**
**தலைவர் கொத்மலை பிரதேச சபை,**
**பூண்டுலொயா.**

திகதி :2022.10.05

# இலங்கை அணியின் பயிற்சி போட்டி நாளைக்கு மாற்றம்

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணப் போட்டிக்காக இலங்கை அணி இன்று (10) விளையாடவிருந்த சிம்பாப்வே அணியுடனான பயிற்சிப் போட்டி நாளைய (11) தினத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதன்படி இந்தப் பயிற்சிப்போட்டி மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் வரும் செவ்வாய்க்கிழமை உள்ளூர் நேரப்படி மாலை 2.30க்கு ஆரம்பமாகவுள்ளது. சிம்பாப்வே அணியின் பயண அட்டவணையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாகவே பயிற்சிப் போட்டியிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

16 அணிகள் பங்கேற்கும் உலகக் கிண்ணத்தின் முதல் சுற்றில் ஆடவுள்ள எட்டு அணிகளுக்கான பயிற்சிப் போட்டிகள் ஒக்டோபர் 10 தொடக்கம் 13ஆம் திகதி வரை மெல்போர்னில் நடைபெறவுள்ளது. இலங்கை அணி இந்தத் தொடருக்கான இரண்டாவது பயிற்சிப் போட்டியில் வரும் வியாழக்கிழமை அயர்லாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.



# இலங்கை அணி இலகு வெற்றி

பங்களாதேஷில் நடைபெற்று வரும் மகளிர் ஆசிய கிண்ண டி20 தொடரில் மலேஷியாவுக்கு எதிரான போட்டியில் 72 ஓட்டங்களால் இலகு வெற்றியீட்டிய இலங்கை அணி ஏழு அணிகள் பங்கேற்றிருக்கும் தொடரின் புள்ளிப் பட்டியலில் மூன்றாவது இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது. சில்ஹெட்டில் கடந்த சனிக்கிழமை (08) நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை பெண்கள் 20 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளை இழந்து 105 ஓட்டங்களை பெற்றது. கடைசி வரிசையில் வந்த ஓஷதி ரணசிங்க அதிகபட்சம் 23 ஓட்டங்களை பெற்றார். இந்நிலையில் பதிலெடுத்தாடிய மலேசிய அணியை 33 ஓட்டங்களுக்கு சுருட்ட இலங்கை அணியால் முடிந்தது. மல்ஷா ஷெஹானி 1.4 ஓவர்களில் 2 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளை விழ்த்தினார்.





நாலந்தா கல்லூரியின் அண்மைய கிரிக்கெட்டுக்கு பங்களிப்புச் செய்த தனி நபர்கள் மற்றும் சங்கங்களை பாராட்டும் நிகழ்வொன்றை நலந்தா கல்லூரியின் முன்னாள் கிரிக்கெட் வீரர்களின் சங்கம் அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இலங்கை முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜயவர்தன பிரதம அதிதியாக பங்கேற்ற இந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படத்தினை காரணலாம்.

# கல்லாறு அணி சம்பியன்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய காரியாலயத்திற்குட்பட்ட ஊழியர்களுக்கிடையில் விளையாட்டு திறன் மற்றும் நட்புறவை கட்டியெழுப்பும் வகையில் சனிக்கிழமை (08) களுவாஞ்சிகுடி பொது விளையாட்டு மைதானத்தில் முகாமையாளர் காரியாலயம் ஏற்பாடு செய்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கல்லாறு அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. 12 அணிகள் பங்குகொண்ட இந்தத் தொடரின் இறுதிப்போட்டியில் கல்லாறு அணியும் வாணிப பிரிவு அணியும் மோதின. நீர்வழங்கல் சபையின் கிழக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் (செயற்பாடு) டீ.ஏ. பிரகாஷ் பிரதம அதிதியாக இந்த நிகழ்வில் பங்கேற்றார்.





கொழும்பு சாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் விளையாட்டு தின நிகழ்வு அண்மையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் ஒட்டு மொத்த சாம்பியன்களான குழாத்தினரை படத்தில் காணலாம். படம்: ருஸைக் பாரூக்

# கால்பந்தில் அதிக ஊதியம் பெறுபவராக ம்பப்பே முதல் இடத்திற்கு முன்னேற்றம்

கடந்த எட்டு ஆண்டுகளில் முதல் முறையாக லியோனல் மெஸ்ஸி அல்லது ரொனால்டோ இல்லாது உலகில் அதிக ஊதியம் பெறும் கால்பந்து வீரராக பரிஸ் செயின்ட் ஜெர்மைன் வீரர் கைலியன் ம்பப்பே முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

போபஸ் சஞ்சிகை வெளியிட்டிருக்கும் தகவலின்படி 2022–23 பருவத்தில் முகவர்களின் கட்டணங்களுக்கு முன்னதாக 23 வயதான ம்பப்பே 128 மில்லியன் டொலர்களை ஈட்டி இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் பீ.எஸ்.ஜி அணியின் சக வீரரான மெஸ்ஸி 120 மில்லியன் டொலர்களுடன் இரண்டாவது இடத்திலும் மான்செஸ்டர் யுனைடட் அணியின் ரொனால்டோ 100 மில்லியன் டொலர்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

மெஸ்ஸி மற்றும் ரொனால்டோ தமது பெருமை மிக்க கால்பந்து வாழ்வின் இறுதிக் காலத்தை நெருங்கி இருப்பதாக போபஸ் குறிப்பிட்டுள்ளது.

கால்பந்து விளையாட்டில் அதிக ஊதியம் பெறுபவர் பட்டியலில் முதல் பத்து இடங்களில் இருப்பவர்கள் ஈட்டும் மொத்த வருமானம் இந்தப் பருவத்தில் சாதனை தொகையாக 652 மில்லியன் டொலர்களாகும். கடந்த ஆண்டில் அது 585 மில்லியன் டொலர்களாக இருந்த நிலையில் 11 வீத அதிகரிப்பாக இது உள்ளது.



# நரேந்திர மோடிக்கு நியூசி. வர அழைப்பு



தமது நாட்டுக்கு வருகைதரும்படி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நியூசிலாந்து பிரதமர் ஜசின்டா ஆர்டன் அழைப்பு விடுத்துள்ளார்.

நியூசிலாந்து இந்தியர்களை கௌரவிக்கும் விருது விழாவின் ஒரு பகுதியாக இருந்த 'விஸ்வ சத்பவனா' நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

இந்தியா மற்றும் நியூசிலாந்து தம்மிடையே பல விடயங்களை பகிர்வதாகவும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு வலுவடைந்து வருவதானவும் இதன் போது ஆர்டன் தெரிவித்தார்.

## சர்வதேச செய்திகள்

# தாக்குதலுக்கு இலக்கான கிரிமியா பாலத்தில் மீண்டும் போக்குவரத்து

ரஷ்யாவையும் கிரிமியா வட்டாரத்தையும் இணைக்கும் பாலம் மீண்டும் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டுள்ளது.

லொரியில் வைக்கப்பட்ட வெடிகுண்டு காரணமாக அந்தப் பாலத்தில் பாரிய சேதம் ஏற்பட்டது.

2014ஆம் ஆண்டு உக்ரைனின் கிரிமியா தீபகற்பத்தை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது.

தாக்கப்பட்டிருப்பது கிரிமியாவையும் ரஷ்யாவையும் இணைக்கும் ஒரே பாலமாகும். தற்போது நடைபெறும் போரில் தெற்கு உக்ரைனுக்கு இராணுவத் தளபாடங்களைக் கொண்டு செல்ல அந்தப் பாலமே பயன்படுகிறது.

அது ஐரோப்பாவின் மிக நீண்ட பாலங்களில் ஒன்றாகவும் உள்ளது.

2018ஆம் ஆண்டு அதை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் திறந்துவைத்தார். கடுமையான பாதுகாப்புக் கொண்ட அந்தப் பாலம் எப்படித் தாக்கப்பட்டது, யார் தாக்கியது என்பது குறித்து விசாரணை நடத்துவதற்காக ரஷ்யா உயர்புலனாய்வுக் குழுவை அனுப்பி வைத்துள்ளது.

உக்ரைன் தாக்குதலுக்கு நேரடியாகப் பொறுப்பேற்கவில்லை.



### சம்பவம் குறித்து ரஷ்யா தீவிர விசாரணை

ஆனால் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கியின் ஆலோசகர் மிக்காய்லோ போடோலியாக், கிரிமியா பாலம் ஒரு தொடக்கம் என்று ட்விட்டரில் பதிவு செய்துள்ளார். "சட்டவிரோதமான அனைத்தும் அழிக்கப்படவேண்டும்; திருடிய அனைத்தும் திரும்பத் தரப்படவேண்டும்; ரஷ்யா ஆக்கிரமித்துள்ள அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அது வெளியேற்றப்படவேண்டும்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். போர்முனையில் இருந்து வெகுதூரத்தில் இருக்கும் பாலம் தாக்கப்பட்டிருப்பது குறித்து ரஷ்யாவில் கவலை ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் மீது படையெடுத்துள்ள ரஷ்ய இராணுவத்திற்கு எதிராக உக்ரைன் அண்மைய வாரங்களில் முன்னேற்றம் கண்டுவரும் நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாலத்தின் மீதான குண்டு வெடிப்பு நிகழ்ந்து சில மணி நேரங்களின் பின் உக்ரைனில் ரஷ்ய படைகளை வழிநடத்த புதிய தளபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# கம்போடிய நாட்டுக்கு ஐ.நாவில் சீனா ஆதரவு



கம்போடியாவின் மனிதக் கடத்தல் மற்றும் ஒரு கட்சி ஆட்சியை ஐ.நா நியமித்த மனித உரிமை நிபுணர்கள் விமர்சித்த நிலையில் ஐக்கிய நாடுகளுக்கான சீனாவின் நிரந்தர பிரதிநிதி சென் சூ அந்நாட்டை காத்துப் பேசியுள்ளார்.

"கம்போடியா அண்மைய ஆண்டுகளில் தேசிய வளர்ச்சியை மேம்படுத்துவதோடு, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார அபிவிருத்தியை பேணி வருகிறது. மக்களின் வாழ்க்கைத் தரம் படிப்படியாக மேம்பட்டு வரும் அதேநேரம் மனித உரிமை பாதுகாக்கப்படுகிறது" என்று ஜெனீவாவில் நடந்த மனித உரிமை பேரவை கூட்டத்தில் சென் சூ தெரிவித்தார்.

# மேலும் 2 ஏவுகணைகளை பாய்ச்சியது வட கொரியா

வட கொரியா நேற்று மேலும் இரண்டு புவியீர்ப்பு ஏவுகணைகளைப் பாய்ச்சியுள்ளது. இரண்டு வாரத்தில் அது எட்டு ஏவுகணைகளைப் பாய்ச்சியுள்ளது.

அது சினமூட்டும் செயல் என்றும் அமைதியைக் குலைக்கும் நடவடிக்கை என்றும் தென் கொரியா கூறியது. அமெரிக்காவுடன் சேர்ந்து நிலைமையைக் கண்காணித்து வருவதாகவும் விழிப்பாக இருப்பதாகவும் தென் கொரியா குறிப்பிட்டது.

வட கொரியாவின் இரண்டு ஏவுகணைகளும் ஆறு நிமிட இடைவெளிக்குள் பாய்ச்சப்பட்டன என்று ஜப்பான் தெரிவித்தது. கொரியத் தீபகற்பத்தில் பதற்றம் தொடர்கிறது. நிலைமையை நுணுக்கமாகக் கவனித்து வருவதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது. நட்பு நாடுகளோடு கலந்தாலோசித்து வருவதாகவும் அது குறிப்பிட்டது. வட கொரியாவின் அணுவாயுத, புவியீர்ப்பு ஏவுகணைத் திட்டம் நிலைத்தன்மையைப் பாதிப்பதாக அமெரிக்கா கூறியது.



# இஸ்ரேலிய படையினரால் இரு பலஸ்தீனர்கள் சுட்டுக் கொலை

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலின் சோதனை நடவடிக்கையின்போது இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு சில மணி நேரங்களின் பின் கிழக்கு ஜெரூசலம் சோதனைச்சாவடி ஒன்றில் நேற்று (09) இஸ்ரேல் படைவீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தாக்குதல்தாரியை பிடிக்க இஸ்ரேல் படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

ஷுவாபத் பலஸ்தீன அகதி முகாமுக்கு அருகில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் மற்றொரு இஸ்ரேலியர் படுகாயம் அடைந்துள்ளார். இதனை அடுத்து அருகில் உள்ள பகுதிகளை இஸ்ரேலி பொலிஸார் சுற்றிவளைத்ததோடு கிழக்கு ஜெரூசலத்தின் எல்லைப் பகுதிகளின் பாதுகாப்பையும் பலப்படுத்தியது.

முன்னதாக கடந்த சனிக்கிழமை, தனது பதின்ம வயதுகளில் இருக்கும் இரு பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய படையால் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதலில் 17 பேர் பலி

ரஷ்ய இராணுவம் கடந்த சனிக்கிழமை இரவு நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் உக்ரைனின் தெற்கு நகரான சபோரிசியாவில் பல டஜன் பேர் கொல்லப்பட்டிருப்பதாக உக்ரைனின் கூட்டுப் படைத் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

'ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்கள் இரவில் கொடிய முறையில் குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் சிவில் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தினர்' என்று இராணுவத்தின் மத்திய கட்டளையகம் தனது பேஸ்புக் பக்கத்தில் நேற்று தெரிவித்தது.

இரவு நேர குண்டுவீச்சில் குறைந்தது 17 பேர் கொல்லப்பட்டதாக அந்த நகர அதிகாரியான அன்டோலி கேர்டவ் முன்னதாக குறிப்பிட்டிருந்தார். 'இரவில் வீசப்பட்ட இந்த ஏவுகணைகளால் சபோரிசியாவின் அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் நகரின் குடியிருப்புப் பகுதி ஒன்றில் வீதிகள் சேதமடைந்துள்ளன' என்று உள்ளூர் அதிகாரியான அன்டோலி கார்டிவ் குறிப்பிட்டுள்ளார்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 10ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## பத்திரிகை அறிவித்தல்

**எனது குறிப்பு எண் 6/3/7/15/5/2**
**காணி அமைச்சின் குறியீட்டு எண்: LD/05/2007/MV/110-1**

**1964 இல. 28 காணி சுவீகரிக்கும் (திருத்தச்) சட்டத்தின் கீழ் திருத்தம் செய்யப்பட்ட காணி சுவீகரிக்கப்படும் சட்டத்தில் 460 வது அத்தியாயம் 7வது அத்தியாயத்தின் கீழ் அறிவிக்கப்படுகின்றது.**

இங்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள காணி மொரகஹந்த/கலுகங்கை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. மேலதிக விவரங்கள் தொடர்பாக இல. 2297/28, 2022.09.12 திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விஷேட கசாட் பத்திரிகையைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : நாஉல |
| கிராம சேவை அலுவலர் பிரிவு | : தலாகொட |
| ஊர் பெயர் | : தலாகொட (ஓர் பகுதி |
| காணியின் பெயர் | : அதி விஷேட கசாட் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது பிரகாரம் |
| அளவு | : அதி விஷேட கசாட் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது பிரகாரம் |
| இலக்கம் | : 1207 |
| திட்ட இலக்கம் | : க.கி.வ. 535, குறைநிரப்பு 17, பத்திர 14 |
| முகவரி | : பிரதேச செயலகம் நாஉல |

**சிந்தக இலங்கசிங்க,**
**காணி சுவீகரிப்பு அதிகாரி,**
**நாஉல பிரதேச செயலாளர்.**

திகதி: 2022.10.05

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 5(2)ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**மதகம்பிட்டிய லங்கா ஃபிலிங் ஸ்டேஷன் (பிவீடீ) எல்டீடி**

பதிவிலக்கம்: PV00212670

கூட்டிணைப்புத் திகதி:
**2019.06.17**

பதிவு முகவரி :
**இல. 61/ஏ/1. வல்பிட்ட, எக்ரொஸ் மீரிகம**

**அறிவிப்பாளர்**
**கம்பனி செயலாளர்கள்**

## பொது அற்றோணித்தத்துவ பத்திரத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது 12ம் திகதி பங்குனி மாதம் 2020ம் ஆண்டு திகதியிடப்பட்டு Germany, Bremenஐச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு **WOLF LESCHMANN** முகதாவில் நிறைவேற்றப்பட்ட பொது அற்றோணித்தத்துவப்பத்திரமானது நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த **அருட்சோதி சாந்தினி** (தே.அ.அ.இல. 596780466V) என்பவரின் பெயரில் நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த தற்போது Bremen Germany இல் வசிக்கும் **செல்லத்துரை அரியநாயகம்** மற்றும் **றமணி அரியநாயகம்** ஆகிய எங்களால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித்தத்துவப்பத்திரம் 01ம் திகதி ஐப்பசி மாதம் 2022ம் ஆண்டு முதல் மீளப் பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகிறது. இன்று முதல் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவகாரியால் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நாம் பொறுப்பாக மாட்டோம்.

**செல்லத்துரை அரியநாயகம் மற்றும் றமணி அரியநாயகம்**

## அறிவித்தல்

### கண்டி மாவட்ட தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வெளிநாட்டு மதுபான தவரணையின் 2022/2023ம் அண்டுக்கான 'டென்டர்' மீள் கேள்வி விற்பனை

கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வெளிநாட்டு மதுபான தவரணையின் 2022/2023ம் ஆண்டுக்கான 'டென்டர்' மீள் கேள்வி விற்பனை 2022.10.20ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும் அத்துடன் 'சீல்' முத்திரையிடப்பட்ட 'டென்டர்' மீள் கேள்வி பத்திரங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும் 'டென்டர்' மீள் விற்பனை அன்றைய தினம் மு.ப. 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 2022.07.29ஆம் திகதி அரசாங்க வர்த்தமானி பத்திரிகையை பார்க்கவும்.

(வர்த்தமானி பத்திரிகை இலக்கம் 2291)

**திலுக்ஷி ஜயரத்ன,**
**பிரதேச செயலாளர்,**
**தெல்தோட்டை.**

2022.10.05
**பிரதேச செயலகம் தெல்தோட்டை.**

## வெலிமடை பிரதேச சபை

# டெண்டர் அறிவித்தல்

வெலிமடை வியாபார வளாகத்தில் இல. 51, 53, 54, 56, 57, 58, 59, 60 மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி, சில்லறை பொருட்கள் மற்றும் களஞ்சிய வசதிகளுக்காக கடை அறைகள் குத்தகைக்கு வழங்கல் மற்றும் பொரகஸ். குருதலாவ பள்ளி இல. 10, குருதலாவ மஹதன்ன மாட்டு இறைச்சி விற்பனை செய்யும் உரிமையை குத்தகைக்கு வழங்கல், வெலிமடை/பொரலந்தை கிழமைச் சந்தை குத்தகை கட்டணத்தை வசூலிக்கும் உரிமையை குத்தகைக்கு வழங்கல், வெலிமட சந்தை தொகுதியின் மீன் கடை, சிற்றுண்டிச்சாலை மற்றும் பொது மலசலகூட கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு வழங்கல் மற்றும் வெலிமடை நகரில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் அறிவிடலின் உரிமையினை குத்தகைக்கு வழங்குதல். கெப்பெடிபொல நகரில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் அறவிடலின் உரிமையினை குத்தகைக்கு வழங்குதல். வெலிமட பஸ் தரிப்பிடம் பற்றும் மணிக்கூட்டு கோபுரம் அருகில் உள்ள பொது மலசலகூடத்தில் கட்டணம் அறவிடலின் உரிமையினை குத்தகைக்கு வழங்குதல்

1.1 கீழ் உள்ள 1.6 அடவனையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 2023 ஆண்டிற்குரிய 2023.01.01 முதல் 2023.12.31 வரையான காலத்திற்கு வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்கல் தொடர்பாக அச்சிடப்பட்ட டெண்டர் பத்திரம் (விலைமனு கூறல்) 2022.10.31ம் திகதி மு.ப. 09.00 மணி முதல் ஏற்றுக் கொள்ளப்படும்.
1.2 டெண்டர் படிவப் பத்திரம் 2022.10.10ம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2022.10.30ம் திகதி மு.ப.10.00 மணி வரை வழங்கப்படும்.
1.3 டெண்டர் படிவப் பத்திரம் படிவப் பத்திரத்தினை இவ் அலுவலகத்திற்கு வருகைதந்து பெற்றுக்கொள்ள முடியும்.
1.4 டெண்டர் விதிமுறைகள் மற்றும் மேலதிக தகவல்களை சபைச் செயலாளரினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.
1.5 உரிய டெண்டர் படிவம் 2022.10.31ம் திகதி மு.ப. 09.30 மணிக்கு திறக்கப்படும். டென்டர் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.
1.6 உப அட்டவனை

**டெண்டர் விலை கூறல்**

| தொ. இல. | இடம் | குறைந்த பட்ச ஏலம் | மீண்டும் செலுத்தும் டெண்டர் வைப்பு | மீண்டும் செலுத்தப்படாத டெண்டர் படிவக் கட்டணம் | செலுத்த வேண்டிய மொத்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1.6.1 | வெளிமடை புதிய வியாபார வளாகத்தில் இல. 51 கடை அறை (களஞ்சிய வசதிக்காக) | 51,000.00 | 4,000.00 | 5,800.00 | 60,800.00 |
| 1.6.2 | வெளிமடை புதிய வியாபார வளாகத்தில் இல. 53 கடை அறை (களஞ்சிய வசதிக்காக) | 51,000.00 | 4,000.00 | 5,800.00 | 60,800.00 |
| 1.6.3 | வெளிமடை புதிய வியாபார வளாகத்தில் இல. 54 கடை அறை (களஞ்சிய வசதிக்காக) | 51,000.00 | 4,000.00 | 5,800.00 | 60,800.00 |
| 1.6.4 | வெளிமடை புதிய வியாபார வளாகத்தில் இல. 56 கடை அறை (சில்லறை பொருட்கள் மற்றும் மலிகைப் பொருட்களுக்காக மாத்திரம்) | 298,100.00 | 4,000.00 | 5,800.00 | 307,900.00 |
| 1.6.5 | வெளிமடை புதிய வியாபார வளாகத்தில் இல. 57 கோழி இறைச்சிக்கடை | 1,201,300.00 | 10,000,000 | 5,800.00 | 1.217.100.00 |
| 1.6.6 | வெளிமடை புதிய வியாபார வளாகத்தில் இல. 58 ஆட்டிறைச்சிக்கடை | 580,600.00 | 10,000.00 | 5,800.00 | 596,400.00 |
| 1.6.7 | வெளிமடை புதிய வியாபார வளாகத்தில் இல. 59 மாட்டிறைச்சிக்கடை | 2,132,240.00 | 10,000.00 | 5,800.00 | 2,148,040.00 |
| 1.6.8 | வெளிமடை புதிய வியாபார வளாகத்தில் இல. 60 மாட்டிறைச்சிக்கடை | 1,751,200.00 | 10,000.00 | 5,800.00 | 1,767,000.00 |
| 1.6.9 | குருதலாவை பள்ளி இல. 10 மாட்டிறைச்சிக்கடை | 1,896,840.00 | 10,000.00 | 5,800.00 | 1,912,640.00 |
| 1.6.10 | பொரகஸ் மாட்டிறைச்சிக்கடை | 2,137,190.00 | 10,000.00 | 5,800.00 | 2,152,990.00 |
| 1.6.11 | குருதலாவ மஹதென்ன மாட்டிறைச்சிக்கடை | 649,990.00 | 10,000.00 | 5,800.00 | 665,790.00 |
| 167.12 | வெளிமடை சந்தை நில குத்தகை கட்டணத்தை வசூலிக்கும் உரிமையை குத்தகைக்கு வழங்கல் | 1,684,600.00 | 10,000.00 | 5,800.00 | 1,700,400.00 |
| 1.6.13 | பொரலந்தைச் சந்தை நில குத்தகை கட்டணத்தை வசூலிக்கும் உரிமையை குத்தகைக்கு வழங்கல் | 80,100.00 | 4,000.00 | 5,800.00 | 89,900.00 |
| 1.6.14 | புதிய கிழமை சந்தை தொகுதியில் இலக்கம் 01 F மீன் கடை | 150,000.00 | 4,000.00 | 5,800.00 | 159,800.00 |
| 1.6.15 | புதிய கிழமை சந்தை தொகுதியில் இலக்கம் 02 F மீன் கடை | 150,000.00 | 4,000.00 - | 5,800.00 | 159,800.00 |
| 1..6.16 | புதிய கிழமை சந்தை தொகுதியில் இலக்கம் 03 F மீன் கடை | 150,000.00 | 4,000.00 | 5,800.00 | 159,800.00 |
| 1.6.17 | புதிய கிழமை சந்தை தொகுதியில் இலக்கம் 04 F மீன் கடை | 150,000.00 | 4,000.00 | 5,800.00 | 159,800.00 |
| 1.6.18 | புதிய கிழமை சந்தை தொகுதியில் இலக்கம் 05 F மீன் கடை | 150,000.00 | 4,000.00 | 5,800.00 | 159,800.00 |
| 1.6.19 | புதிய கிழமை சந்தை தொகுதியில் இலக்கம் 01 C சிற்றுண்டிச்சாலை | 500,000.00 | 10,000.00 | 5,800.00 | 515,800.00 |
| 1.6.20 | புதிய கிழமை சந்தை தொகுதியில் இலக்கம் 02 C சிற்றுண்டிச்சாலை | 500,000.00 | 10,000.00 | 5,800.00 | 515,800.00 |
| 1.6.21 | புதிய கிழமை சந்தை தொகுதியில் அருகில் பொது மலசல கூடத்தின் கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 150,000.00 | 4,000.00 | 5,800.00 | 159,800.00 |
| 1.6.22 | வெளிமட மணிக்கூட்டு கோபுரத்தின் அருகில் பொது மலசலகூடத்தின் கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 268,500.00 | 4,000.00 | 5,800.00 | 278,300.00 |
| 1.6.23 | வெளிமட நகரில் வாகனங்களை நிறுத்தி வைத்தலுக்காக கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 600,000.00 | 10,000.00 | 5,800.00 | 615,800.00 |
| 1.6.24 | வெளிமட பஸ் தரிப்பிடத்தின் பொது மலசலகூடத்தின் கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 2,000,000.00 | 10,000.00 | 5,800.00 | 2,015,800.00 |
| 1.6.25 | கெப்படிபொல நகரில் வாகனங்களை நிறுத்தி வைத்தலுக்காக கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 1,500,000.00 | 10,000.00 | 5,800.00 | 1,515,800.00 |

**கவனத்திற்கு:** 1.6.9, 1.6.10, மற்றும் 1.6.11 உரிமை தொடர்பாக பொருத்தமான இறைச்சிக்கடை அறைகள் டெண்டர்காரர்களால் வழங்கப்பட வேண்டியதுடன், டெண்டர் விண்ணப்பப்படிவத்துடன் பொருத்தமான கடை அறையினை தேர்வு செய்து கொண்டதாக எழுத்து மூலம் ஆதாரத்தினை முன்வைக்க வேண்டும். அனைத்து மாட்டு இறைச்சி கடைகள் மற்றும் ஆட்டு இறைச்சிக் கடைகளுக்கு அங்கீகாரம் பெற்ற கொலையிடல் வசதிகளை உங்களாலே வழங்கப்பட வேண்டியதோடு சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக உள்ளது என சுகாதார பரிசோதகரின் சான்றிதழை முன்வைத்தல் வேண்டும்.

**எஸ்.ஏ.ஆர்.பந்துசேன,**
**தவிசாளர்,**
**வெலிமடை பிரதேச சபை.**

**2022.10.07**
**வெலிமடை பிரதேச சபை அலுவலகத்தில்**

# விலைமனு அழைத்தல்

## மாவட்ட செயலகம் - கண்டி

01. கண்டி மாவட்ட செயலகம் மற்றும் சுற்றவுள்ள வளாகம், கேட்போர்கூடக் கட்டிடம் மற்றும் சுற்றுச் சூழல், கட்டுகஸ்தொட்டை அரசினர் சேவைப் பயிற்சி நிறுவகம் மற்றும் 18 பிரதேச செயலகங்களிற்கு 2023/2024 ஆண்டில் சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த துறையில் ஆர்வமுள்ள, அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாத தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
02. இதற்கான மேலதிக விபரங்களை கண்டி மாவட்ட செயலக தொலைபேசி இலக்கம் 081-2233604 மூலம் பிரதான கணக்காளரை அழைத்து அல்லது www.kandy.dist.gov.lk என்ற இணையத்திற்கு பிரவேசித்துப் பெற்றுக் கொள்ளலாம்.
03. கண்டி மாவட்ட செயலகத்தின் சிறாப்பருக்கு படிவக்கட்டணத்தைக் காசாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 2022.10.10 முதல் 2022.10.31 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இதற்கான கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
04. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் இரண்டு பிரதிகளாகத் தயாரித்து மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு முத்திரையிட்டு ஒருறையில் சேர்த்து 2022.11.01 அன்று பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு 'கண்டி மாவட்ட செயலாளர் மற்றும் பெறுகைக்குழுத் தலைவர், மாவட்ட செயலகம், கண்டி' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம். கேள்விகளை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
05. தாமதமாகக் கிடைக்கப் பெறும் மற்றும் உரிய அறிவுறுத்தல்களிற்கமைவாக சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.
06. இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பயடும் வணிக வங்கியொன்றிலிருந்து 'மாவட்ட செயலாளர், கண்டி' என்ற பெயருக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானத்திற்கு மற்றும் கேள்விகளைத் திறக்கும் தினத்திலிருந்து செல்லுபடியாகும் நாட்களைக் கொண்ட நிபந்தனைகளற்ற கேள்விப்பிணையமொன்று அல்லது மாவட்ட செயலக சிறாப்பரிடம் காசாக வைப்புச் செய்து பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டு கேள்விகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| சேவை | கேள்விப் பிணையத்தின் பெறுமானம் | | கேள்விப் பிணையத்திற்கான செல்லுபடிக் காலம் நாட்கள் | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| | வங்கி வரைவு மூலம் ரூபா | காசாக (ரூபா) | | |
| கண்டி மாவட்ட செயலகம் மற்றும் சுற்றுச் சூழல் கேட்போர் கூடக் கட்டிடம் மற்றும் சுற்றுச் சூழல் கட்டுகஸ்தொட்டை அரச சேவைப் பயிற்சி நிறுவகம் மற்றும் 18 பிரதேச செயலங்கள் 2023/2024 ஆண்டில் சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் | 80,000.00 | 40,000.00 | 77 | 2,000.00 |

08. கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
09. கிடைக்கப்பெறும கேள்விகளில் தகுதியுள்ள கேள்வியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது பூரணப்படுத்தப்படாத கேள்விகளை நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாவதுடன் பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

**சந்தன தென்னகோன்,**
**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்,**
**மாவட்ட செயலகம், கண்டி.**

## நியாகம பிரதேச சபை

### 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் 2022-12-30ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**(அ) வழங்கல்கள்**

| | |
|---|---|
| 01 | அலுவலக உபகரணங்கள் (உருக்கு, பிளாஸ்டிக் மற்றும் மரத் தளபாடங்கள்) |
| 02 | காகிதாதிகள் |
| 03 | மின்சார உபகரணங்கள் (வீதி விளக்கு உபகரணங்கள், பிளேஷ் லைட்கள் போன்றன) |
| 04 | அனைத்து வகையான கட்டிடப் பொருட்கள் (கல், மணல், சீமெந்து, கம்பி, கூரைத் தகடுகள், இரும்பு...) |
| 05 | கொங்கிறீட் உபகரணங்கள் மற்றும் சீமெந்து உற்பத்திகள் |
| 06 | சீருடைகளைத் தைத்து வழங்குதல் |
| 07 | பீ.வீ.சீ. குழாய்கள், நீர்க்குழாய் உபகரணங்கள் மற்றும் நிர்மாணப் பொருட்கள் |
| 08 | பராமரிப்பு வேலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் |
| 09 | பெயர்ப் பலகைகள், விளம்பரப் பலகைகள், பதாகைகள் உட்பட அச்சு வேலைகள் |
| 10 | விளையாட்டு உபகரணங்கள் |
| 11 | இரசாயனப் பொருட்கள் மற்றும் உரங்கள் |
| 12 | கணனி, தொலைநகல், புகைப்படப் பிரதி, ரோணியோ இயந்திரங்கள் மற்றும் அதற்கான துணைப்பாகங்கள் |
| 13 | வாகன உதிரிப்பாகங்கள் (பெட்டறிகள், டயர்கள்...) |
| 14 | ஞாபகச் சின்னங்கள் வழங்குதல் |
| 15 | ஒலிபெருக்கிச் சாதனங்கள் மற்றும் ஏனைய ஒலி உபகரணங்களை வழங்குதல் (மைக், ஏம்ப், பபல், மிக்சர்) |
| 16 | முன் பள்ளி உபகரணங்கள் |
| 17 | துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் (கையுறைகள், பூட்ஸ்கள்) |
| 18 | தகனச்சாலைக்கான எரிவாயு வழங்குதல் |

**சேவைகள்**

| | |
|---|---|
| 01 | வாகன திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் (டிராக்டர், கெப், JCB இயந்திரம், பார உருளைகள், பவுசர்கள், கொங்கிறீட் கலவை இயந்திரங்கள்) |
| 02 | கணனி, புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல், ரோணியோ இயந்திர திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 03 | அச்சு வேலைகள் (திகதி முத்திரைகள் / இறப்பர் முத்திரைகள்) |
| 04 | வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 05 | போக்குவரத்துச் சேவைகள் |
| 06 | நொத்தாரிஸ் மற்றும் சட்ட சேவைகள் |
| 07 | அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல் |
| 08 | கூடாரங்கள், கதிரைகள், திரைகள் உட்பட உற்சவப் பொருட்களை வழங்குதல் |
| 09 | ஒலிபெருக்கி சேவைகளை வழங்குதல் |

**ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்**

| தொ. இல. | பண வரையறை | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | ரூபா 50,000.00 வரை | ரூபா 500.00 |
| 02 | ரூபா 50,001.00 முதல் ரூபா 100,000.00 வரை | ரூபா 1250.00 |
| 03 | ரூபா 100,001.00 முதல் ரூபா 250,000.00 வரை | ரூபா 1500.00 |
| 04 | ரூபா 250,001.00 முதல் ரூபா 500,000.00 வரை | ரூபா 1750.00 |
| 05 | ரூபா 500,000.00க்கு மேல் | ரூபா 2000.00 |

**நிபந்தனைகள்**

01. வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான கட்டணம் 500.00 ரூபா என்பதுடன். பதிவுக் கட்டணத்தை ''தலைவர், நியாகம பிரதேச சபை'' எனும் பெயருக்கு வரையப்பட்ட குறுக்குக் கோடிடப்பட்ட காசோலை மூலம், அல்லது வங்கிக்கு நேரடியாக வைப்புச் செய்தல் அல்லது அலுவலக நேரத்தினுள் ரொக்கப் பணமாகச் செலுத்தலாம். நேரடியாக வங்கிக்கு வைப்புச் செய்வதானால் அதற்கான விதிமுறைகளை அலுவலகத்தின் தொலைபேசி இலக்கத்தில் அல்லது niyagamaps@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
02. விண்ணப்பதாரர் ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறாகக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். வியாபாரத்தின் பெயர், பதிவிலக்கம், வழங்குவதற்கு உத்தேசிக்கும் பொருள் அல்லது சேவை, பணக் கொடுப்பனவுகளைச் செய்யும் விதம் போன்ற விடயங்களை உள்ளடக்கி தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பதிவிலக்கம் சகிதமான சான்றிதழ், வெட் வரிக்காக பதிவு செய்யப்பட்டிருந்தால் அதற்கியைபான சான்றிதழ்களை இணைத்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023'' எனக் குறிப்பிட்டு 2022-12-30ஆம் திகதிக்கு முன் ''தலைவர், நியாகம பிரதேச சபை, பொத்திவல, மத்தக'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
03. தருவித்தற் கட்டளை கிடைக்கப்பெற்று 07 நாட்களுக்குள் தருவித்தற் கட்டளையிலுள்ள பொருட்கள் அல்லது சேவை வழங்கப்படல் வேண்டும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்காதவர்கள், தருவித்தற் கட்டளை வழங்கப்படும்போது அங்கீகரிக்கப்பட்ட தரத்திற்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்காத வழங்குநர்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.
04. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் பொதுவாக விலைகளை குறைந்தபட்சம் ஆறு மாத காலத்திற்கு நிலையாக வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் ஏனைய வழங்குநர்களிடமிருந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
06. ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பிப்பவர்கள் தேவைக்கமைய இயலுமை சான்றிதழை வழங்குதல் வேண்டும் என்பதுடன் காலி மாவட்டத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 0912296518 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.)

2022-10-10ஆம் திகதி
**நியாகம பிரதேச சபை.**

**பிரசாத் வீரக்கொடி,**
**தலைவர்,**
**நியாகம பிரதேச சபை.**

# ரம்புக்கனை பிரதேச சபை

# 2023ஆம் வருடத்திற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

2023ஆம் வருடத்திற்கு ரம்புக்கனைப் பிரதேச சபைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்து கொள்ள விரும்பும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2022.11.25ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன் 'தவிசாளர், ரம்புக்கனை பிரதேச சபை, ரம்புக்கனை' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம்.

விண்ணப்பப் படிவத்தை இடுகின்ற காகித உறையின் இடப்பக்க மேல் மூலையில் '2023ஆம் வருடத்திற்கு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொருட்கள் மற்றும் சரக்குகள்

| வகை இலக்கம் | வழங்க வேண்டிய பொருட்கள்/ சரக்குகள் |
|---|---|
| 01 | அனைத்து காகிதாதிகள் (CR புத்தகம், பேனைகள், பென்சில், காகித வகைகள், கோவைகள், கணனி (Calculator) ஆகியன உள்ளடங்கலாக) |
| 02 | அலுவலகத் தளபாடங்கள் (மரம்/பிலாஸ்டிக்/உருக்கு) |
| 03 | வீதி வெளிச்சமூட்டும் நடவடிக்கைகளுக்குத் தேவையான வீதி விளக்குகள் உட்பட அனைத்து மின் துணைப் பொருட்கள் |
| 04 | மின் உபகரணங்கள் (மின் விசிறிகள், மின் கேத்தல், குளிர் சாதனப் பெட்டி) |
| 05 | அச்சு இயந்திரங்கள் (நிழற் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், பிரதி எடுத்தல் இயந்திரம், தட்டச்சு இயந்திரம், டுப்ளோ இயந்திரம் என்பனவை உள்ளடங்கலாக) |
| 06 | அனைத்து வகையான அச்சு இயந்திரங்களுக்குமான டோனர், உதிரிப்பாகங்கள் மற்றும் காட்ரிஜ் |
| 07 | கணனி இயந்திரங்கள் மற்றும் அதற்கான துணைப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் (கணனி வன்பொருள், கணனி மென்பொருள் உள்ளடங்கலாக) |
| 08 | அனைத்து கட்டட நிர்மாணப் பொருட்கள் மற்றும் நிர்மாணங்களுக்குத் தேவையான பொருட்கள் (செங்கல், சீமெந்து. ஆற்று மணல், மெட்டல், கருங்கல், எஸ்பெஸ்டஸ் தகடுகள், ஓடு, சீமெந்துக் கற்கள், சரளைக்கல் என்பன உள்ளடங்கலாக) |
| 09 | வீதிப் பராமரிப்பிற்குத் தேவையான பொருட்கள் (தார் மற்றும் பிறீ மிக்ஸ்) |
| 10 | மரங்கள் (பலகை, சட்டரின் பலகை, தளக் குறுக்குக் கட்டை (பரால) அடங்கலாக |
| 11 | பாதணிகள், சப்பாத்துக்கள் தோற் பொருட்கள் மற்றும் அலுவலக தோற் பைகள்) |
| 12 | மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் (தடுப்பூசிகள், சிறிஞ்சர், அளவைச் சாடி, ஆயுர்வேத மருந்துகள் என்பன உள்ளடங்கலாக) |
| 13 | இரும்புக் கடைப் பொருட்கள் மற்றும் வர்ணப் பொருட்கள் |
| 14 | இலக்கத் தகடுகள் மற்றும் பட்டி வகைகள் (ஆதனவரி, மிதி வண்டி, மிருகங்கள்) |
| 15 | வீதிப் பராமரிப்பிற்குத் தேவையான உபகரணங்கள் (நீளமாக கத்திகள், கத்தி, மண்வெட்டி, முள் கரண்டி, வாரிகள், அறிவாள் என்பன உள்ளடங்கலாக) |
| 16 | வீதிச் சுகாதார தொழிலாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள் (மழைக் கவசம், கையுறைகள்,முகக் கவசங்கள், தலைக் கவசம், பிளாஸ்டிக் கண்ணாடி என்பன உள்ளடங்கலாக) |
| 17 | சுகாதார மற்றும் துப்புரவாக்கல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள், (தும்புத்தடி, கூட்டுமாறு, சவர்க்காரம், மலசலகூடத் தூரிகைகள், துடைப்பான், தொற்று நீக்கிகள், தூய்மைப்படுத்தும் மருந்துகள், நறுமணத் திரவியங்கள் என்பன உள்ளடங்கலாக) |
| 18 | PVC பொருத்துக்கலங்கள், DI குழாய் பொருத்துக் கலங்கள், GI குழாய் பொருத்துக்கலங்கள், பிலாஸ்டிக் நீர்த்தாங்கி, குப்பைத் தொட்டிகள், கொம்போஸ்ட் தொட்டிகள் |
| 19 | தரை ஓட்டு வகைகள், மலசலகூட சிறுநீர் கழிக்குமிட கொமட் ஆகியன உட்பட அனைத்து பீங்கான்/மட்பாண்ட/மட்பாண்ட உற்பத்திகள் |
| 20 | விழாக்களிற்காக உணவு வகைகள் (பகல் உணவு/சிறு உணவுகள்) |
| 21 | சங்கீத உபகரணங்கள், முன் பள்ளி உபகரணங்கள், முன் பள்ளி விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சிறுவர் விளையாட்டு மைதான உபகரணங்கள் |
| 22 | குளிரூட்டல் இயந்திரம் மற்றும் மின்பிறப்பாக்கி |
| 23 | அனைத்து வழுப்படுத்தப்பட்ட குழாய்கள் உட்பட கொங்கிரீட் உட்பத்திகள் |
| 24 | பூச்சிக் கொல்லிகள், கிருமி நாசினிகள் உட்பட அனைத்து இரசாயன உற்பத்திகள் |
| 25 | சீருடைகளுக்கான பிடவை, சாரிகள் மற்றும் திரைச் சேலை வகைகள் |
| 26 | தோட்ட அலங்கார நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்கள் (அழகுப்படுத்தக்கூடிய தாவரங்கள், உர வகைகள் உட்பட) |
| 27 | உரப் பைகள் மற்றும் பொலிதின் பைகள் |
| 28 | வாசிகசாலை புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் செய்தித் தாள்கள் |
| 29 | ஹட் வகைகள் (கெனப்பி, தகர ஹட்) |
| 30 | கற் பெயர்ப் பலகைகள் மற்றும் ஞாபகார்த்த பெயர்ப் பலகைகள் |
| 31 | கண்ணாடி உற்பத்திகள் மற்றும் கண்ணாடி தகடுகள் |
| 32 | தொலைபேசி முறைமை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஒலி, ஒளிப் பதிவு உபகரணங்கள் மற்றும் பாதுகாப்புப் புகைப்படக் கருவி முறைமைகள், விரல் அடையாள இயந்திரங்கள் |
| 33 | தீயணைப்பு உபகரணத் தொகுதிகள் மற்றும் பாதுகாப்பு அங்கிகள் |
| 34 | அலுவலக உள்ளக தொலைபேசி முறைமைகள் |
| 35 | (கெப் வண்டி, உழவு இயந்திரம், கை உழவு இயந்திரம், முச்சக்கர வண்டி, குரூ கெப் வண்டி, பெகோ இயந்திரம், டிப்பர் இயந்திரம்) உட்பட அனைத்து வகையான வாகனங்களுக்கான டயர், டியுப், பட்டரி உடபட அனைத்து உதிரிப் பாகங்களும்) |

சேவைகள்

| வகை இலக்கம் | வழங்கக் கூடிய சேவைகள் |
|---|---|
| 36 | ஆவணங்கள், பத்திரங்களின் அச்சு நடவடிக்கைகள் |
| 37 | பொலித்தின் பைகள், உரப் பைகள் அச்சு நடவடிகைகள் |
| 38 | டிஜிட்டல் பதாகைகள், அறிவித்தல் பலகைகள், பெயர்ப் பலகைகள், கட்அவுட் பதாகைகள், ஸ்டிகர் போன்றவை உள்ளடங்கலாக அச்சு நடவடிக்கைகள் |
| 39 | நில அளவை சேவைகள் |
| 40 | வழக்கறிஞர் சேவைகள் |
| 41 | திறமை பெற்ற திறமை பெறாத தொழிலாளர்களை வழங்குதல் |
| 42 | அலுவலகத் தளபாடங்களை திருத்தம் செய்தல் மற்றும் பிரம்பினால் கதிரைகளை முடைதல் |
| 43 | அனைத்து வகையான குஷன் வேலைகள் மற்றும் அலுவலகத்திற்கு திரைச் சேலை வழங்குதல் |
| 44 | திரைச் சேலைகள் கழுவும் நடவடிக்கைகள் மற்றும் சலவைச் சேவைகள் |
| 45 | கட்டடத் திருத்தம் மற்றும் வண்ணம் பூசுதல் |
| 46 | மொழி பெயர்ப்பு நடவடிக்கைகள் |
| 47 | கணனி, நிலற் பிரதி இயந்திரம், அச்சு இயந்திரம் உட்பட அலுவலக இயந்திரங்கள், உபகரணங்களை திருத்தம் செய்தல் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் |
| 48 | வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளை வாடகைக்கு வழங்குதல் (பெகோ இயந்திரம், சாலை உருளை, மளத்தாங்கி, அறவை இயந்திரம், கொப்பெக்டர் உள்ளடங்கலாக) |
| 49 | உள்ளக தொலைபேசி மற்றும் தொலைபேசி பிணைப்புத் திருத்தம் மற்றும் உள்ளக உரையாடல் முறைமை, ஒலிபெருக்கி முறைமைகளின் பராமரிப்பு |
| 50 | ஒட்டு வேலைகள், கட்டுமான வேலைகள், மர வேலை, குழாய்ப் பணியாளர் தொழில் நுட்ப சேவைகள் |
| 51 | வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளின் திருத்தம் |
| 52 | அனைத்து வாகனங்களையும் பழுதுபார்த்தல் |
| 53 | உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைத் தயாரித்தல் |
| 54 | புகைப்படம் எடுத்தல் |
| 55 | குப்பைகளை கொட்டுவதற்காக காணிகளை குத்தகைக்கு வழங்குதல் |
| 56 | பதாகைகள் மற்றும் பெயர்ப் பலகைகள் வரைதல் |
| 57 | அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல் |
| 58 | டயர்களை மீள நிரப்புதல், கல்வனைஸ் வேலை, டியுப்களை ஒட்டுதல் |
| 59 | வெற்றுப் போத்தல்கள், பழைய இரும்பு, உட்போகாத குப்பைகள், பழைய செய்தித் தாள்கள் உட்பட பழுதடைந்த பொருட்களின் கொள்வனவு |
| 60 | தகனசாலையின் திருத்தம் மற்றும் பராமரிப்பு |
| 61 | ஒலி பெருக்கி இயந்திரங்கள் மற்றும் விழாக்களிற்காக மேடைக்குத் தேவையான பொருட்களை வழங்குதல் |
| 62 | அலுமினியம் பொருத்துக் கலங்களின் உபயோகத்தோடு ஜன்னல் கதவுகளை தயாரித்தல் நிர்மாணம் மற்றும் தடுப்புச் சுவர் வேலைகள் செய்தல் |

ஒப்பந்தங்கள்

| வகை இலக்கம் | ஒப்பந்த வகை |
|---|---|
| 63 | கட்டட நிர்மாண மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் |
| 64 | வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் |

### ரம்புக்கனை பிரதேச சபை

### 2023ஆம் வருடத்திற்காக வழங்குநர் ஒருவராக பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் :
2. விண்ணப்பதாரியின் முகவரி :
3. வியாபரத்தின் பெயர் :
4. வியாபாரத்தின் முகவரி :
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
   (தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்றையும் இதனுடன் இணைக்கவும்)
6. வியாபாரப் பெயர் பதிவுச் சான்றிதழ் இலக்கம் :
   (பிரதியை கட்டாயம் இணைக்கவும்)
7. வியாபாரத்தின் தன்மை :
8. பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற வகை இலக்கம் :
9. செலுத்திய தொகை :
10. காசோலை இலக்கம் :
11. சொத்துக்களின் விபரம் (வழங்குநர்களுக்கு தொடர்புடையதல்ல)
12 சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் :
13. தொலைபேசி இலக்கம் :
14. தொலை நகல் இலக்கம் :
15. பெறுமதி சேர்ப்பு வரி (VAT) பதிவு இலக்கம் :
16. கடன் வசதி வழங்கக் கூடிய கால எல்லைகள் :
17. போக்குவரத்து வசதிகள் வழங்க முடியுமா என்பது பற்றி :
18. ஏனைய தகுதிகள் :

விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

**பொது நிபந்தனைகள்**

1. பதிவு செய்யப்படுகின்ற அனைத்து வழங்குநர்களும் ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறாக விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அதனுடன் வியாபார பெயர் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு வகைக்கு பதிவு செய்து கொள்வதற்கு ரூபா 1500.00 கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.
2. தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் 'தவிசாளர் ரம்புக்கனை பிரதேச சபை'எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசோலையொன்றின் மூலம் மாத்திரம் செலுத்தலாம். காசுக்கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. தேவையான சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரலாம் என்பதுடன் அதற்குப் புறம்பான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலை மனுக்கோரல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் பிரிதொரு பெறுகை முறைமை நடைமுறைப்படுத்தும் உரிமையும் சபைக்கு உரியது.
4. இச்சபையினால் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழங்குநர் ஒருவர் குறித்த திகதிக்கு உரிய நேரத்திற்கு முன் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் பட்சத்தில் மறு அறிவித்தலின்றி இச்சபை ஏற்றுக்கொண்ட அடுத்த வழங்குநருக்கு குறித்தொதுக்கப்படும் என்பதையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.
5. உரிய நேரத்திற்கு விலை மனுக்களை சமர்ப்பிக்காத மற்றும் குறித்த நேரத்திற்கு தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட பெயர் இடாப்பிலிருந்து அகற்றப்பட்டு கறுப்புப் பட்டியல் படுத்தப்படும்.
6. எவையேனும் பொருட்கள், சேவைகள் அல்லது ஒப்பந்தங்களை வழங்குவதற்குத் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர் ஒருவருக்கு முற்பணக் கொடுப்பனவொன்று செலுத்தப்படாததுடன் பொருட்கள் சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து குறைந்த பட்சம் 45 நாள் சலுகைக் கால கடன் வசதி வழங்குநர்களினால் வழங்கப்படுதல் வேண்டும்.
7. சேவை ஒப்பந்தங்களை வழங்குவதற்காக ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தில் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற தொகையொன்றை முறியாக/பிணையாக வைப்புச் செய்தல் வேண்டும். ஒப்பந்தக் காலம் முடிவடைந்ததன் பின் இவ்வைப்புத் தொகையை மீளப் பெற்றுக் கொள்ளலாம். உங்களால் வழங்கப்படுகின்ற சேவையில் ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால் நட்டத்தினை வைப்புத் தொகையிலிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
8. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களினால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின் குறிதத விலைகளுக்கு ஏற்ப குறைந்த பட்சம் 06 மாத காலத்திற்காவது பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக சம்பந்தப்பட்ட விலைகளில் மாற்றங்கள் ஏற்படும்போது ஒரு மாதத்திற்கு முன் அது விடயமாக ரம்புக்கனை பிரதேச சபைக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.
9. உரிய முறையில் தகவல்களை வழங்காத பூரணமற்ற விண்ணப்பங்கள் மற்றும் 2022.11.25ஆம் திகதிக்குப் பின் கிடைக்கின்ற அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பதாரரிற்காக இருக்க வேண்டிய அளவு கோல்கள்**

1. கூட்டுத்தாபனமொன்றெனின் கூட்டுத்தாபனமொன்றாக இணைக்கப்பட்டதற்காக வழங்கப்படுகின்ற சான்றிதழ்
2. தனிநபர் வியாபாரமொன்றின் பதிவுச் சான்றிதழ்
3. கம்பனியொன்றெனின் கம்பனிகள் சட்டத்தின் படியான பதிவுச் சான்றிதழ்
4. ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்தி (CTAD) சான்றிதழ் மற்றும் புத்தகம் (தேவைக்கேற்றவாறு சமர்ப்பித்தல் வேண்டும்)
5. இதற்கு ம்ன ஐந்து அரச நிறுவனங்களிற்காவது பண்டங்கள் சேவைகளை வழங்கியிருப்பது ஒரு விஷேட தகுதியாகும்.
6. வாகனத் திருத்தங்கள் தொடர்பாக சப்ரகமுவ மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் வாகனத் திருத்துமிடமொன்றாக இருத்தல் மற்றும் ஐந்து அரச நிறுவனங்களிற்காவது சேவைகளை வழங்கிய அனுபவமுள்ள நிறுவனமாக காணப்படுதல் ஒரு விஷேட தகுதியாகும்.
7. உத்தரவாதக் காலம் வழங்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளிற்கான உத்தரவாதக் காலம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளுக்கு மேலதிகமாக விஷேட தகுதிகள் இருப்பின் விண்ணப்பப்படிவத்தில் ஏனைய விடயங்கள் எனும் பகுதியின் கீழ் குறிப்பிடவும்.

**ஈ.எம்.ஏ.என்.பீ. ஹதகம,**
**தவிசாளர்,**
**ரம்புக்கனை பிரதேச சபை.**

2022.10.03ஆம் திகதி **ரம்புக்கனை பிரதேச சபையில்**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

அங்குணகொளபெலெஸ்ஸ முலனகொட வீதி, 'நெத்மினி' இல் வசிக்கும் **மணமாலகே ஜகத் இந்திக பிரனாந்து** ஆகிய நான் இலக்கம் 29/86 என்ற பக்கத்தின் தினப்புத்தக இலக்கம் 1465 இன் கீழ் 2011.09.02ஆம் திகதி பதிவு செய்யப்பட்டதும், சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான **திரு. ஏ.ஜீ.எஸ்.ஆர். குணசேகர** என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 13135 மற்றும் 2011.08.24ஆம் திகதியிடப்பட்ட அற்றோணிப்பத்திரத்தின் மூலம் அங்குணகொள பெலெஸ்ஸ இலக்கம் 19/2இல் வசிக்கும் **லொரென்சு ஹேவகே நந்தசிரி** என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவமானது இன்று முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கைக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

### புளத்சிங்கள பிரதேச சபை

### வழங்குநர்களை மற்றும் ஒப்ந்தக்காரர்களை பதிவு செய்து கொள்ளல் – 2023

2023ஆம் ஆண்டிற்காக புளத்சிங்கள பிரதேச சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க எதிர்பார்க்கும் ஒப்பந்தக்காரர்கள்/ தொண்டர் சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள்/ வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள் 2022.11.15ஆம் திகதி வரை பதிவு செய்து கொள்ளப்படும்.
அதற்குரிய தகவல்களை 0342283175 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்/தவிசாளர்,**
**பிரதேச சபை,**
**புளத்சிங்கள.**

## மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கம் பகிரங்க அறிவித்தல்

எமது சங்கத்தின் 2022/2023ஆம் வருடத்தில் நடாத்துவதற்கு உள்ள மாற்றுவழி பொதுக்கூட்டம் மற்றும் பதவிநிலை வாக்கெடுப்பு என்பவற்றுக்கு இயைபான சகல நடவடிக்கைகளும் தவிர்க்க முடியாத காரணத்தினால் கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக பொது அங்கத்தவர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**எம்.எச்.எம். ஜயவர்தன**
**தலைவர் - மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கம்**

## கேள்வி அறிவித்தல்

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**2023ஆம் வருடத்தில் இரத்மலானை மற்றும் கட்டுநாயக்க வானூர்திகளுக்கு எரிபொருள் மீள்நிரப்பும் நிலையங்களுக்கு துப்புரவேற்பாடு மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குதல்**

**B/51/2022**

